AR
759

உரைகல்



தொ.பரமசிவன்

உரைகல்

தொ.பரமசிவன்

கலப்பை

கலப்பை வெளியீட்டு எண்:5
ISBN 978-81-922436-1-0

'உரைகல்' (touchstone)
கட்டுரைகள்
© தொ.பரமசிவன்

முதற்பதிப்பு	:	அக்டோபர் 2014
விலை	:	ரூ.130
நூல் அளவு	:	1 X 8 டெம்மி
பக்கங்கள்	:	144
எழுத்துப்புள்ளி	:	10.5 புள்ளிகள்
அட்டைக்கட்டு	:	சாதா
வெளியீடு	:	கலப்பை 9/10, முதல் தளம், 2ம் தெரு திருநகர், வடபழனி, சென்னை – 600 026. 9444 83 83 89
மின்னஞ்சல்	:	kalappai.in@gmail.com
இணைய தளம்	:	www.kalappai.in
அட்டை வடிவமைப்பு	:	ஓவியர் செந்தில் செல்வன்.
புத்தக வடிவமைப்பு	:	தீபாலையா, சென்னை–15.
அச்சாக்கம்	:	ஸ்ரீவெங்கடேஸ்வரா ஆப்செட், சென்னை – 26.

கலப்பை பதிப்பகத்திற்காக இந்நூலை வெளியிடுபவர் வே.ராமசாமி

என் குருநாதர் சி.சு.மணி அவர்களின்

தூய நினைவிற்கு காணிக்கை

'உரைகல்' உள்ளே

	முன்னுரை	5
	அணிந்துரை	6
1.	பொருநை நதியோரம்	11
2.	சடங்கியல் வாழ்வு	14
3.	படைப்பிலக்கியங்களும் பண்பாட்டு வெளிப்பாடும்	17
4.	பேரக்குழந்தைகள்	21
5.	அதிர்ச்சி மதிப்பீடு	23
6.	குடும்ப விளக்கு: அறிமுகம்	25
7.	தொலைந்துபோன பொன்தொடரியின் கண்ணிகள்	34
8.	மொழிக் கல்வியும் மதிப்பீடுகளும்	37
9.	காஞ்சி மடமும் கைதான மடாதிபதியும்	53
10.	அறம் / அதிகாரம் : ஒரு பார்வை	58
11.	அன்னம் பஹூ குர்வீத	68
12.	திருக்குறள் அறிமுகவுரை	75
13.	பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும் காலம் எல்லாம்	80
14.	தேவாங்கர் வாழ்வும் வழிபாடும்	84
15.	மரபும் புதுமையும்	86
16.	நமது பண்பாட்டில் மருத்துவம்	96
17.	தமிழ்நாட்டுக் கோசாம்பி	109
18.	கல்லறைகள் அல்ல; விளை நிலங்கள்	112
19.	தெய்வங்களின் உணவுரிமை	116
20.	மீனாட்சிப் பட்டினம்	122
21.	நம்ப முடியாத புலமையாளர்	128
22.	இருட்டறையில் வெளிச்சம் வரவேண்டும் - அ.முத்துலிங்கம்	132

முன்னுரை

இந்த நூல் கட்டுரைகளைப் பற்றிச் சொல்வதற்கு என்னிடம் புதிய செய்திகள் ஏதுமில்லை. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு களங்களில் நான் எண்ணியவையும் எழுதியவையும் இவை. இவற்றில் முன்னுரைத்தவையும் உண்டு; பின்னுரைத்தவையும் உண்டு. நான் உரைத்த சிலவற்றையும் என் மாணவ நண்பர்கள் தொகுத்திருக்கிறார்கள்.

'ஏதது கொண்டு வருகுவை காற்றே இவை
எண்ணில் அகப்படுமோ!'

என்பது பாரதி கவிதை. அந்த மாமேதைக்கே எண்ணில் அகப்படாத செய்திகள் இருந்தன. நாமென்ன சிறுதுளிதானே. தமிழ்ச்சமூகம் குறித்து எண்ணவும் பேசவும் எழுதவும் இன்னும் எத்தனை பிறவி வேண்டுமோ!

என்னைப் பணிகொண்ட மாணவ நண்பர்கள் இரா.தமிழ்க்குமரன், வே.சங்கர்ராம், சொ.நவநீதகிருஷ்ணன், சித்தானை ஆகியோரின் உழைப்பிற்கு நன்றி என்ற ஒற்றைச் சொல் போதாதுதான். அதுவே, 'கலப்பை' வே.ராமசாமிக்கும். அணிந்துரை தந்த பேராசிரியர் நா.இராமச்சந்திரனுக்கும் உரியது.

தொ.பரமசிவன்

பாளையங்கோட்டை
27.07,2014

அணிந்துரை

- பேரா.நா.இராமச்சந்திரன்
நாட்டர் வழக்காற்றியல் துறைத் தலைவர்
தூய சவேரியார் தன்னாட்சி கல்லூரி,
பாளையங்கோட்டை

'உரைகல்' என்ற இந்த நூலில் பேராசிரியர் தொ.ப. அவர்கள் வெவ்வேறு தருணங்களில் எழுதிய கட்டுரைகள், மதிப்பீடுகள், அணிந்துரைகள், பேட்டிகள், உரைகள் ஆகியவை தொகுக்கப்பட்டுள்ளன. அழகான நடையில் சிறியசிறிய சொற்றொடர்களில் கடினமான கருத்துக்களைப் புரிந்துகொள்ளும்படி விளக்குவது பேராசிரியரின் வழக்கம். இந்த நூலும் அவ்வாறே உள்ளது.

பேராசிரியர் தொ.ப. அவர்களுடன் உரையாடும்போது வரலாற்றுச் செய்திகள், தொல்லியல் கண்டுபிடிப்புகள், நாட்டார் வழக்காற்றியல் தரவுகள், பழந்தமிழ் இலக்கிய மேற்கோள்கள், தற்கால இலக்கியச் சிந்தனைகள், மொழியியல் கருத்துக்கள், தாம் களஆய்வு மேற்கொண்ட அனுபவங்கள் போன்றவற்றை அவர் இயல்பாகச் சொல்வதைப் பல காலகட்டங்களில் நான் கண்டிருக்கிறேன். அவருடைய எழுத்துக்களும் அவ்வாறே நம்மோடு உரையாடுவதுபோலவே அமைந்துள்ளன. குழப்பம் ஏதும் விளைவிக்காது சொல்வதைப் பிறருக்கு விளங்கும்படிச் சொல்ல வேண்டும் என்ற அக்கறையோடு கூறப்படுபவை அவை. தம்முடைய மேதாவிலாசத்தைப் பிறருக்குப் பறைசாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு எப்போதும் இருந்ததில்லை. இந்த நூலைப் படிப்பாரும் அதனை நன்கு உணரலாம்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள 'பொருநை நதி' என்ற கட்டுரை சிறியதாக இருந்தாலும் பொருநை நதி பாயும் இடங்களில் காணப்படும் சமயச் செய்திகள், பழங்குடிகள், அரசியல் நிகழ்வுகள், தொல்லியல் செய்திகள் ஆகியவற்றைத் தொகுத்துத் தந்துள்ளது. பொருநை நதிப் பண்பாட்டு வரலாறு பன்முக நோக்கில் எழுதப்பட வேண்டியதன் தேவையை அக்கட்டுரை வலியுறுத்துகின்றது.

தொ.ப. அவர்களுக்கு நாட்டார் வழக்காற்றியல் புலம் மீது தனித்த அக்கறையும் மரியாதையும் உண்டு. அவருடைய நூல்களில் மக்களிடையே வழக்கிலுள்ள சொற்கள், உறவு முறைகள், பழக்கவழக்கங்கள், நாட்டார் சமய நடவடிக்கைகள், நாட்டார் தெய்வங்கள் ஆகியவை குறித்த கட்டுரைகள் பல. இந்த நூலில் 'சடங்கு' குறித்து ஒரு கட்டுரை இடம்பெற்றுள்ளது. பட்டம் கட்டுதல், புனித எண்கள் குறித்த சடங்குச் சொல்லாடல்கள், சடங்கின்போது ஒரு சொல்லைத் திரும்பத் திரும்பச் சொல்லுதல், சூலுற்ற பெண்ணுக்கு மடிநிரப்பும் சடங்கு செய்தல், காதணி விழாவில் காதரிசி வழங்குதல், பூப்புச் சடங்கில் தீட்டுக் கழிப்பு போன்றவை பற்றிய குறிப்புக்கள் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன. திராவிடச் சாதிகளில் இன்னும் வழக்கிலுள்ள சடங்கு நடவடிக்கைகளை ஆய்வு செய்வோருக்கு இக்கட்டுரை தரும் தகவல்கள் முக்கியமானவை. 'பேரக் குழந்தைகள்' குறித்த கட்டுரையில் பேரன், பேத்தி என்ற சொற்களின் பொருண்மைகள், நம்பிக்கை, சடங்குகள், கேலி செய்யும் உரிமை போன்றவற்றைச் சுவையாகச் சொல்வதோடு நிகழ்காலத்தில் குழந்தைகள் தாத்தா பாட்டியிடமிருந்து அந்நியப்பட்டுவிட்டதையும் சுட்டிக் காட்டுகிறார் பேராசிரியர்.

'மரபும் புதுமையும்' குறித்துப் பேராசிரியர் நிகழ்த்திய உரையினை நண்பர் வே.சங்கர்ராம் எழுத்தாக்கம் செய்துள்ளார். மானுட அசைவுகளில் மரபு எவ்வாறு பின்பற்றப்படுகிறது என்பதைத் தொல்காப்பியம் முதல் இன்றைய காலம் வரையிலும் பல்வேறு எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குகிறார். பன்னாட்டு நிறுவனங்கள் நமது பண்பாட்டு மரபினை எவ்வாறு அழித்தொழிக்க முற்படுகின்றன என்பதைக் கண்டு பேராசிரியர் கோபப்படுகிறார். மரபுகள் காலச் சூழலுக்கு ஏற்ற வகையில் மாறும் தன்மை கொண்டவை என்பதையும் இயங்கியல் அடிப்படையில் பேராசிரியர் குறிப்பிடுகிறார். கொள்வனவற்றைக் கொண்டு மானுடத்துக்கு எதிரான மரபுகளைப் புறந்தள்ள வேண்டும் என்பதையும் அவர் குறிப்பிடுகிறார்.

பழந்தமிழ் இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் ஈறாகத் தமிழ்ப் பண்பாடு சித்திரிக்கப்பட்டுள்ளதைப் 'படைப்பிலக்கியங்களும் பண்பாட்டு வெளிப்பாடும்' என்ற கட்டுரை அற்புதமாக வெளிப்படுத்தியுள்ளது. அந்தக் கட்டுரையில், "பண்பாடு என்பது பழமையைக் கொண்டாடுவது அன்று. உயிருள்ள வேர்களைப் பாதுகாப்பதாகும். ஏனென்றால் உயிருள்ள வேர்கள் இன்னமும் சமூக அசைவியக்கங்களை முன்னெடுத்துச் செல்கின்றன என்பதே அதற்குரிய காரணமாகும்" என்று தொ.ப. குறிப்பிடுவது ஆழ்ந்து சிந்திப்பதற்குரியதாகும்.

மதுரை மாநகரம் பற்றிய கட்டுரையில் மதுரையிலும் மதுரையைச் சுற்றிய இடங்களிலும் நடைபெறும் பண்பாட்டு நடவடிக்கைகளை விவரித்து, மதுரையே தமிழர்களின்

பண்பாட்டுத் தலைநகரமாகக் கருதப்படுகிறது என்ற முடிவுக்கு வருகிறார் தொ.ப.

பாளையங்கோட்டையில் வாழ்ந்த இரு பெரும் ஆளுமைகள் குறித்து இந்நூலில் இரண்டு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஒருவர் அறிஞர் சி.சு. மணி அவர்கள்; இன்னொருவர் பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள். சி.சு. மணி அண்ணாச்சி குறித்த நினைவுகளை 'நம்ப முடியாத புலமையாளர்' என்ற கட்டுரை உணர்வுப்பூர்வமாகப் பதிவு செய்துள்ளது. மணி அண்ணாச்சியின் பல்துறை மேதமையைக் கண்டு நானும் பலமுறை வியந்ததுண்டு. பேராசிரியர் நா.வா.வைத் 'தமிழ்நாட்டுக் கோசாம்பி' என்று தொ.ப. மதிப்பிடுகிறார். நா.வா. அவர்களின் பல்துறை ஆய்வுகள் குறித்த நுட்பமான கட்டுரையாக அது விளங்குகிறது.

மங்கலம் என்ற சிற்றூரில் குடிகாரக் கணவர்களின் கொடுமையால் மனைவிமார் தற்கொலை செய்து கொள்வது பெருகியதும் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு ஊரார் செய்த அதிர்ச்சிச் செயலைப் படிக்கும்போது நாமும் அதிர்ச்சியடைகிறோம். தாம் உற்றுநோக்கியதை அற்புதமாகப் பேராசிரியர் பதிவு செய்துள்ளார்.

'குடும்ப விளக்கு' பாரதிதாசனின் தனிச்சிறப்பு மிக்க படைப்பு. அந்நூலில் அவர் நிகழ்த்திய பல புதுமைகளைப் பேராசிரியர் தொகுத்துத் தந்திருக்கிறார். பாரதிதாசனிடம் காணப்படும் நிலவுடைமை மதிப்பீடுகளையும் நிலவுடைமைக்கு எதிரான திராவிட இயக்கத்தின் சமூகநீதி மதிப்பீடுகளையும் பேராசிரியர் தனித்தனியே பகுத்துக் காட்டுகிறார்.

தமிழர்களை வேதாந்தப் படுகுழிக்குள் தள்ள முயன்றதற்கு எதிராகத் 'தத்துவ விவேசினி' என்ற இதழினை அறிவார்ந்த சிந்தனை கொண்ட ஆளுமைகள் நடத்தி வந்தனர். அந்த இதழ்களைத் தொகுத்து, தொலைந்து போன தொடரியின் கண்ணிகளை மீட்டெடுத்துத் தந்ததாக வீ. அரசு அவர்களைத் தொ.ப. பாராட்டுகிறார்.

மொழிக் கல்வி குறித்த பேராசிரியரின் நேர்காணல் சமுதாய மொழியியல் சிந்தனையின் அடிப்படையில் அமைந்துள்ளது. குழந்தைகளுக்கான மொழிக் கல்வி கவனத்துடன் திட்டமிடப்படவில்லை என்பது இந்நேர்காணலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் பண்புக்கும் ஆதாரமாக விளங்குவது பேச்சுமொழி என்பதைப் பேராசிரியர் வலியுறுத்துகிறார். வாய்மொழிக்கும் எழுத்துமொழிக்குமான வேறுபாட்டை வால்டர் ஜே. ஓங் என்பவர் தம்முடைய Orality and Literacy என்ற நூலில் விரிவாகப் பேசுகிறார். வரிவடிவம் அறியாத சமூகத்தின் உள இயக்கப் படிமுறைக்கும் வரிவடிவம் அறிந்த சமூகத்தின் உள இயக்கப் படிமுறைக்கும் உள்ள வேறுபாடுகள் குறித்து ஓங் விரிவாக விவாதிக்கிறார். வாய்மொழியில் திரும்பச் சொல்லலும் இசையும் நினைவில் வைத்துக்கொள்வதற்குப் பயன்படுபவை. ஆனால், கூறியது கூறலை வரிவடிவ மொழி குற்றம் என்று சொல்வதை நாம் அறிவோம். வாய்மொழியை மட்டுமே அறிந்துள்ள குழந்தைகளுக்கு திரும்பச் சொல்வதன் மூலமாகவும் இசையோடும் மொழிக்கல்வி ஊட்ட வேண்டும். இக்கருத்தை வலியுறுத்துவதற்குப் பேராசிரியர் பல்வேறு எடுத்துக்காட்டுக்களைத் தமது நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் தொ.ப. கனடா நாட்டுக்குச் சென்றிருந்தபொழுது அவரிடம் தாம் உரையாடியவற்றைத் திரு. அ. முத்துலிங்கம் கட்டுரையாகத் தந்துள்ளார். சிறு வயதில் வாசிப்பின் மீது தமக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பேராசிரியர் கூறுவதிலிருந்து அக்கட்டுரை தொடங்குகிறது. தம்முடைய கல்விச் சூழல், அரசியல் ஈடுபாடு, இந்தி எதிர்ப்புப் போராட்டம், அச்சு எந்திரம் வந்தபின் நிகழ்ந்த அறிவு முயற்சிகள், தமிழ்க் கவிதைகள், தாலாட்டும் ஒப்பாரியும், சிலப்பதிகாரம் குறித்த பல்வேறு வாசிப்புகள், பக்தி இலக்கியங்கள், சாதி ஒழிப்பின் சாத்தியப்பாடுகள், உலகமயமாக்கலின் பாதிப்புகள் ஆகியவை குறித்த நீண்ட உரையாடலை அ. முத்துலிங்கம் கூர்மையாகப் பதிவு செய்துள்ளார். தொ.ப.வின் உடல் மொழி, எளிமை, தீர்க்கமான சிந்தனை, உணர்வுகள், ஆசைகள், நம்பிக்கைகள், கோபங்கள், ஏக்கங்கள், கனவுகள் போன்றவற்றை இவ்வுரையாடல் வெளிப்படுத்துகிறது.

ஜி.யு.போப்பின் திருக்குறள் மொழிபெயர்ப்பையும் உரையையும் கூறவந்தவிடத்து, வள்ளுவத்தின் பெருமையையும், அதன் காலத்தையும் சுட்டிச் செல்கிறார் பேராசிரியர். "வள்ளுவரின் சமகாலத்திலும், அவருக்குப் பின்னரும் கூட இந்தியத் துணைக் கண்டத்தில் இலக்கியங்களின் வழி அறம் பேச வந்தவர்கள் சாதி, சமயம், நிலப்பகுதி ஆகிய அடையாளங்களைத் தாண்டிச் செல்ல இயலவில்லை" என்று பேராசிரியர் குறிப்பிடுவது சிந்தனைக்குரியது. வைதீகத்திற்கு எதிராகக் கலகக் குரலெழுப்பியவர் வள்ளுவர் என்பதற்குப் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்ற வரியை எடுத்துக்காட்டுகிறார். திருக்குறளை ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்த்தவர்களின் பட்டியலைத் தரும் அதே வேளையில் எல்லீஸ் குறித்துச் சுருக்கமாக நறுக்குத் தெறித்ததுபோல் கூறியிருப்பது சுவையாகவும் வரலாற்றுத் தகவலாகவும் உள்ளது.

எல்லீஸ் குறித்த விரிவான நூல் ஒன்றினைப் பேராசிரியர் தொ.ப. எழுத வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

உ.வே.சா. அவர்களைப் பற்றிக் கூறும்போது, "அவரின் சங்க இலக்கிய மீள் கண்டுபிடிப்பே வைதிகத்துக்கு மாற்றான ஒரு பெரும் பண்பாடு தென்னிந்தியாவில் பிறந்து வளர்ந்த வரலாற்றுண்மையினைத் தமிழ் நாட்டுக்கு எடுத்துக் காட்டியது. அதுவே தமிழ்த் தேசிய இன அடையாளத்தைக் காட்டியது. திராவிட இயக்கத்தார்க்கும் முற்போக்கு இயக்கத்தார்க்கும் அடுத்த கட்ட வளர்ச்சிக்கான திசையினையும் காட்டியது" என்று தொ.ப. மதிப்பிடுவது கவனத்துக்குரியது.

தமிழரின் மருத்துவ முறை குறித்துப் பேராசிரியர் ஆற்றிய உரை இந்நூலில் குறிப்பிடும்படியாக விளங்குகிறது. உரையைத் தொடங்கும்பொழுது பண்பாடு பற்றி, நுணுக்கமாகவும் எல்லாரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையிலும் வரையறுக்கிறார். பன்னாட்டு மூலதனம் பண்பாட்டு வன்முறையை ஏவுகிறது என்பது மருத்துவத்திலும் நிகழ்ந்துள்ளதைச் சுட்டிக் காட்டுகிறார். எழுத்து மரபுக்கு முன்னர் தோன்றிய அறிவில் மருத்துவ அறிவு குறிப்பிடத் தகுந்தது என்று சொல்ல வந்த இடத்தில், "அறிவு என்பது எழுத்து மூலம் சார்ந்ததுதான் என்று கருதக் கூடாது. அப்படிக் கருத வைத்தது European Epistmology ஐரோப்பிய மெய்காண் முறைமை. அதனால்தான் ஐரோப்பியர் எழுதத் தெரியாதவனெல்லாம் முட்டாள் என்று என்று சொன்னார்கள். எழுதத் தெரியாத நம் முன்னோர்களுடைய தாவரம் பற்றிய அறிவு பொய்யானதா? அவர்களுடைய மருந்து பற்றிய அறிவு பொய்யானதா? உலகம் பற்றிய அறிவு பொய்யானதா? அவர்களுடைய வாழ்வியல் விழுமியங்கள் பற்றிய தன்னுணர்ச்சி பொய்யானதா?" என்று ஆவேசமாகக் கேள்வி எழுப்புகிறார். தமிழர் மருத்துவ முறையான சித்த மருத்துவம் எவ்வகை இன்னல்களையெல்லாம் சந்தித்துள்ளது என்பதை மிகக் கூர்மையாகப் பேசுகிறார்.

பொதுவாக இந்த நூலில் இடம் பெற்றுள்ளவை கதம்பம் போன்று இருந்தாலும் அவ்வெழுத்துக்களை இணைப்பதற்குத் தொல்லியல், வைதீக எதிர்ப்பு (சங்கராச்சாரியர் பற்றிய கட்டுரை, அன்னம் பஹூ குர்வீத, நமது பண்பாட்டில் மருத்துவம்), திராவிட இயக்கச் சார்பு, நாட்டார் வழக்காற்றியல் ஆகிய புரிகளைக் கொண்ட நூல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று விளங்கிக்கொள்ள முடிகிறது.

பேராசிரியர் தொ.ப. அவர்களிடம் நூலாக்கம் பெறுவதற்கு இன்னும் ஏராளம் உள்ளன. எதிர்பார்க்கிறோம்.

1

பொருநை நதியோரம்

தமிழ்நாட்டின் சமூகப் பண்பாட்டு வரலாற்றைப் பேசவந்த அறிஞர் அனைவரும் தமிழ்நாட்டின் 'தென்' பகுதியில் அமைந்த மதுரையையே தமிழ்ப்பண்பாட்டின் தலைநகரம் என்பதோடு அமைந்து விடுகின்றனர். ஆயினும் மதுரைக்கும் தெற்கே 180. கி.மீ. வரை தமிழ்நாடு பரந்த நிலப்பரப்பினை உடையது. அங்கும் வளமான நிலமும் பண்பாடும் விளங்குகிறது என்பதைப் போதிய அளவில் கணிக்க முயலாமல் விட்டு விட்டனர்.

தமிழ்நாட்டின் தென்பகுதியென இப்பொழுது அறியப்படும் குமரி மாவட்டம் கடந்த ஏழு நூற்றாண்டுகளாக இருமொழி வழங்கும் பகுதியாகவும், திராவிடப் பண்பாட்டின் இரு கூறுகளின் சந்திப்பிடமாகவும் விளங்கியது. எனவே தமிழர் பண்பாட்டின் தென்னெல்லை என நெல்லை மாவட்டத்தையே கொள்ளவியலும்.

திராவிட நாகரிகத்தின் தொல்லெச்சமாகத் தென்னிந்தியாவில் அறியப்படும் ஆதிச்சநல்லூர் நாகரிகம் மேனாள் நெல்லை மாவட்டத்தின் பொருநை நதிக்கரையிலேயே அமைந்துள்ளது. 'தென்' என்ற சொல்லும் 'தெற்கு' எனும் திசையும் பக்தி இயக்க எழுச்சிக் காலத்தில் பண்பாட்டின் நிலைக்களனாகக் கொள்ளப்பட்டது.

இருப்பினும் தமிழின் தொன்மையான இலக்கியப் பகுதிகளான சங்க இலக்கியத்தில் இப்போதைய நெல்லை மாவட்டப்பகுதிகள் குறித்த போதிய சான்றுகளைக் காண இயலவில்லை. பொதிய மலையும், கொற்கை, செந்தில் ஆகிய இரு ஊர்பற்றிய குறிப்புகளுமே சங்க இலக்கியத்தில் எஞ்சியுள்ளன. பொருநை நதிக்கரையின் பிற ஊர்கள் பற்றிய குறிப்புகள் கூட இல்லை.

நெல்லை மாவட்டத்தின் சங்கரன்கோயில், கரிவலம் வந்த நல்லூர் பகுதிகளில் கிறித்துவின் சமகாலத்திய ரோமானியத் தொடர்புகளைக் காட்டும் சான்றுகளும், ஆதிச்சநல்லூரில் அதற்கும் சற்று முந்தியகாலப் பண்பாட்டு வெளிப்பாடும் கிடைத்துள்ளன.

பின்னர் பக்தி இயக்கக் காலத்தில், ஒப்பீட்டளவில் பக்தி இயக்கத்தில் நெல்லை மாவட்டத்தின் பங்கு மிகக் குறைந்த அளவே தெரியவருகின்றது. சைவ நாயன்மார் அறுபத்து மூவரில் மதுரைக்குத் தெற்கிலுள்ள நிலப்பகுதியிலிருந்து யாரும் இடம்பெறவில்லை என்பது ஆய்வுக்குரிய செய்தியாகும். அதேநேரத்தில் இப்பகுதியில் சைவத்திலும் வைணவமே வீச்சுடைய நெறியாக வாழ்ந்ததும் தெரிய வருகின்றது. இந்நிலைமைக்கான காரணங்கள் என்ன?

மறுபுறத்தில் சமணத்தின் தொன்மை சுட்டும் சான்றுகள் ஒப்பீட்டளவில் நெல்லை மாவட்டத்தில் மிகுதியாக உள்ளன. குறிப்பாகக் கழுகுமலை, வள்ளியூர், மறுகால்தலை, சிங்கிகுளம் ஆகிய இடங்களைக் குறிப்பிடலாம்.

தமிழ்நாட்டின் தொல்பழங்குடிகளுள் ஒருவராக கருதப்படும் மலைப்பளியர் (மலைப்புளிஞர்) தமிழ்ச் சாதியினரில் அரியவகையினரான பாணர், கணியர் முதலானோர் இந்த மாவட்டத்தில் வாழ்கின்றனர். இவர்களைப் பற்றிய விரிவான ஆய்வுகள் ஏதும் இதுவரை நிகழ்த்தப் பெறவில்லை.

பிற மொழியாளர்களாலும் படையெடுப்புகளாலும் பெரிதும் பாதிக்கப்படாமை இந்நிலப்பகுதியின் தனித்தன்மைகளில் ஒன்றாகும். அதேநேரத்தில் 16ஆம் நூற்றாண்டில் கிறித்துவம் தமிழகத்தில் முதலில் காலூன்றியதும், பின்னர் செழித்து வளர்ந்ததும் இங்கேதான். 19ஆம் நூற்றாண்டில் தமிழ்த் தேசிய எழுச்சிக்கும், இருபதாம் நூற்றாண்டில் அதன் வளர்ச்சிக்குமான கருத்துக்கள் தமிழ்நாட்டில் தஞ்சை, திருச்சி, மதுரை, நெல்லைப் பகுதிகளில் பிறந்தபோது அதில் பேரிடம் பெற்றது நெல்லை மாவட்டமே. மேற்குறித்த வரலாற்று நிகழ்வுகள் காரண காரியப் பின்னணியில் இதுவரை விளக்கப்படவில்லை. அவ்வப்போது நடைபெற்ற சில சிறிய முயற்சிகளைத் தவிர வேறு வகையில் சொல்வதானால், பொருநைநதிப் பண்பாட்டு வரலாறு, காவிரி, வைகை போன்று விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. இவ்வரலாற்றுக்குத் தொல்லியல், தொல்இலக்கியச்

சான்றுகளோடு, நூற்றாண்டு வாரியான இலக்கியச் செய்திகள், கல்வெட்டுச் செய்திகள், கோவில் வரலாறுகள், வாய்மொழி வழக்காறுகள் (குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் பரவலாக வழங்கும் கதைப்பாடல்கள்) கோவில் விழாக்கள், சடங்குகள் போன்றவையும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட வேண்டும். (குறிப்பாக நெல்லை மாவட்டக் கல்வெட்டுக்கள் தொகுதி இதுவரை வெளியாகவில்லை)

மேற்குறித்த அனைத்து வகைச் சான்றுகளின் துணையோடு பொருநைநதிப் பண்பாட்டு வரலாறு எழுதப்பட வேண்டும். தமிழகத்தின் முழுமையான பண்பாட்டு வரலாற்றுக்கு வேண்டிய முன்தேவைகளில் இதுவும் ஒன்று.

✧

2

சடங்கியல் வாழ்வு

இந்த விண்வெளியுகத்திலும் மனித சமூகத்தால் சடங்குகளிலிருந்து விடுபட முடியவில்லை.பழைய சடங்குகள் கால ஓட்டத்தில் மறைந்து போனாலும் அவற்றின் அடிப்படையில் புதிய சடங்குகள் தோன்றிவிடுகின்றன. நவீனகால அரசு எந்திரங்கள் கூட சடங்குகளை உதறித்தள்ள முடியவில்லை.

நவீனகால சடங்குகளை மரபு சார்ந்தவை, நம்பிக்கை சார்ந்தவை என இரண்டு வகையாகப் பகுக்கலாம். பொதுவாக சடங்குகளின் அடிப்படை நம்பிக்கை சார்ந்ததாகும். இந்த நம்பிக்கையில் பெரும்பாலானவை தொல்பழங்காலத்திலிருந்து வருபவை. சாதி, சமயம் ஆகிய இரண்டின் எல்லைக்கு வெளியே நின்று உயிர்வாழும் சடங்குகளே மிகப் பெரும்பான்மையானவையாகும். பிறப்பு, பூப்பு, திருமணம், புதுமனை, இறப்பு, தொடர்பான சடங்குகள் ஒரு தனிமனிதனை மையமிட்டு குடும்ப அசைவுகளோடும் சமூக இயக்கத்தோடும் தங்களை இணைத்துக் கொள்கின்றன. இவையன்றி உள்வட்டத் திருமண அமைப்புடைய குழுக்களின் அசைவாகப் பல சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. தொல் பழைய நம்பிக்கைகள் மட்டுமல்லாமல் சடங்குகளில் அரசியல், வரலாற்றின் துணுக்குகளும் சமூகத் துணுக்குகளும் உட்பொதிந்து காணப்படுவதும் உண்டு.

எடுத்துக்காட்டாகத் திருமண வீடுகளில் நடைபெறும் அரசாணிக்கால் (அரசு ஆணைக் கால்) நாட்டுதல் என்பது அரசதிகாரத்தின் அனுமதி பெற்றுத் திருமணங்கள் நடத்தப்பட்டதின் எச்சப்பாடாகும். சில சாதிகளில் திருமணத்தின் போதும் வேறு சில சாதிகளில் இறப்புச் சடங்கின் தொடர்பாகவும் நடைபெறும் 'பட்டம் கட்டுதல்' என்பது அரசதிகாரத்துடன் தொடர்புடையது. ஆதிச்ச நல்லூர் புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட தங்கத்தாலான நெற்றிப்பட்டங்கள் இறப்புச் சடங்கின் போது பயன்படுத்தப்பட்டவையாகும். திருமண நிகழ்வின்போதும் இறப்புச் சடங்கின் போதும் பிற சாதிக் குழு உறுப்பினருக்கு அளிக்கப்படும் மரியாதை சமூக வரலாற்றோடு தொடர்புடையதாகும். இந்தப் பிறசாதியார் சேவைச் சாதியாராகவும் அமையலாம், அவையல்லாத பிற சாதிக்காரர்களாகவும் அமையலாம்.

சடங்குகள் தொடர்பாக தமிழ் நாட்டில் கனமான ஆய்வுகள் வளரவில்லை. (விதி விலக்கு ஆ.சிவசுப்பிரமணியன் மந்திரமும் சடங்குகளும்.) ஏனென்றால் சடங்குகளின் பொருண்மை விளக்கம் என்பது சமூக வரலாற்றில் பல இயங்கு தளங்கள் சார்ந்து மந்திர நம்பிக்கைகளின் அடிப்படையிலும், மானிடவியல் நோக்கிலும் சாதித் திரள்களுக்கு இடையிலான உறவுகளின் அடிப்படையிலும் பொருண்மை விளக்கம் பெறுகின்றன.

எடுத்துக்காட்டாக எண் குறித்த சடங்குகள் அல்லது சொல்லாடல்கள் மந்திர நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்தவை. சொல்லுக்கு மந்திர ஆற்றல் உள்ளது என்பதனை உலகின் பலசமயங்கள் ஏற்றுக்கொள்கின்றன. இந்த வகையிலே தான் வாழ்த்துச் சொற்கள் மகிழ்ச்சியையும் வசவுச் சொற்கள் சினத்தையும் உண்டாக்குகின்றன. மங்கலச் சொல்லால் இலக்கியத்தைத் தொடங்கவேண்டும் என்ற இலக்கிய மரபு இதன் வழி வருவதாகும். ஒரு சொல்லைத் திரும்பத் திரும்பச் சொல்லுதல் (chanding or repeating) ஓதுதல் எனப்படும். மந்திரங்கள் ஓதப்படுபவை. ஓதப்படும் முறை, ஓதும் மனிதன், காலம் ஆகியவை சார்ந்து உலகியல் நிகழ்வுகளைச் சொல்லின் மந்திர ஆற்றல் கட்டுப்படுத்தும் என்பது நம்பிக்கையாகும். "பொலிக, பொலிக, பொலிக போயிற்று வல்லுயிர் சாபம்" என்பது நம்மாழ்வார் பாசுரம்.

மூன்று, ஏழு, பதினெட்டு, இருபத்தொன்று, நூறு, நூற்றியெட்டு ஆகிய எண்கள் சார்ந்த புனிதம் இந்த நம்பிக்கையின் அடிப்படையில் பிறந்தது தான். தனிமனித வாழ்வுச் சடங்குகள் மனிதன் கருவில் இருக்கும் போதே தொடங்கிவிடுகின்றன. கருக்கொண்ட பெண்ணை "ஈருயிர் காரி" என்று அழைப்பர். சில சாதிகளில் குறிப்பாகப் பிராமணர்களிடம் வளைகாப்புச் சடங்கில் அவளுக்கும் வயிற்றிலுள்ள குழந்தைக்கும் சேர்த்து இரண்டு முறை தீர்த்தம் வழங்கப்படுகிறது. வைணவப் பிராமணர்கள் இதனையே குழந்தைக்குரிய 'வைணவத் தீட்சை' என நம்புகின்றனர்.

ஸ்மார்த்துப் பார்ப்பனர்களின் வளைகாப்புச் சடங்கு ஒரு போலித் திருமணம் (mock marriage) போலவே நடத்தப்படுகின்றது. அதாவது ஒரு பெண்ணைத் தாயாக்கியப் பின்னரே அவளைத் திருமணம் செய்யும் உரிமையினை ஆண் மகன் அடைகிறான் என்னும் புராதன கால நம்பிக்கையின் எச்சப்பாடாகும் இது. இன்னும் சில சாதியாரிடம் மகப்பேற்றிற்கு அழைத்து வரப்படும் பெண்ணின் வயிற்றில் பழங்களை வைத்து கட்டும் வழக்கம் உள்ளது. இச் சடங்கிற்கு "மடிநிரப்புதல்" என்று பெயர். இதே சடங்கு கோயில்களிலும் நிகழ்த்தப்படுகின்றது. திருக்கலியாணம் முடிந்த ஏழாவது அல்லது ஒன்பதாவது மாதத்தில் முளையிட்ட பயிர் வகைகளைத் தாய்த் தெய்வத்தின் வயிற்றைச் சுற்றிக்கட்டி வாழ்த்துப்பாடும் மரபு இருந்து வருகின்றது.

குழந்தையின் தலை மயிரை முதன்முறையாக மழிக்கும் வழக்கம் தமிழகத்தில் எல்லா மதத்தினரிடமும் ஒரு சடங்காக நிகழ்த்தப்படுகின்றது. தாய்மாமன் மடியில் குழந்தையை இருத்தி கோயில் வளாகத்தில் நிகழ்த்தப்படும் சடங்குக்கு வந்தவர்களுக்கு உணவளிப்பதற்குப் பதிலாக இனிப்பு கலந்து ஊறவைத்த "காதரிசி" வழங்கப்படுகிறது. குழந்தை தின்பண்டங்களிலிருந்து அரிசி உணவிற்கு மாறுவதை இது அடையாளப் படுத்துகின்றது எனலாம்.

திராவிடச் சாதிகளில் பூப்புச்சடங்கு மிக விரிவானது. இது இரண்டு வகைப்படும். பூப்பு நிகழ்ந்தவுடன் தீட்டுக் கழிப்புச் சடங்கு. மற்றொன்று இந்நிகழ்வினை ஊருக்கு அறிவிக்கும் சடங்கு.

✧

3

படைப்பிலக்கியங்களும் பண்பாட்டு வெளிப்பாடும்

"பண்பாடு" என்பதனை ஒரு மொழியோடு மட்டும் சார்த்திப் பார்ப்பது இயற்கையாகாது. ஒரு நிலப்பகுதியில் தொட்டெடுத்த மொழிகளோடு உறவுடையதாகவே ஒரு மக்கள் திரளின் பண்பாடு அமையும். எனவே "தமிழ்ப் பண்பாடு" என்ற சொல்லை விட 'திராவிடப் பண்பாடு' என்ற சொல்லே பொருள் உடையதாகும். தமிழோடு மட்டுமன்றி மலையாளம், துளு, கன்னடம், தெலுங்கு, ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் கூட்டத்தார் இவை வழங்கும் நிலப் பகுதியினுள் அடங்கும் திருந்தாத மொழிகளைப் பேசும் மக்கள் கூட்டத்தாருக்கும் பண்பாட்டின் அடிப்படைக் கூறுகளில் ஒரு பொதுத்தன்மை நிலவுகின்றது. அந்த வகையில் புழங்கு பொருள்சார் பண்பாடும் (material calture) பெரும்பாலும் ஒத்ததாகவே அமையும். கருத்தியல் நிலையில் நிலத்தின் தன்மை, உற்பத்தி உறவுகள், புறநிலைத் தாக்குதல்கள், பருவகாலம் ஆகியவை சார்ந்து சிற்சில மாறுதல்களுடன் பண்பாட்டுக் கூறுகள் வெளிப்படும்.

மேலோட்டமாக எடுத்துக்காட்டுவதானால் 'கற்பு' என்னும் கருத்தியல் வெளிப்பாட்டினை எடுத்துக்கொள்ளலாம்

"வள்ளி கீழ்வீழா வரைமிசைத்தேன் தொடா
கொல்லை குரல்வாங்கி மீனா"

என்று பெண்ணின் கற்பினை இயற்கையே பாதுகாப்பதாகக் கலித்தொகை பாட்டு ஒன்று கூறும். அவள் கற்பு நெறி தவறும்போது இயற்கை தன் நிலை மாறித் தண்டிக்கும் என்பது இதன் கருத்து. புகழ்பெற்ற மலையாள எழுத்தாளர் தகழியின் "செம்மீன்" நாவல் மீனவர் வாழ்க்கையின் பிற்புலத்தில் இதே கருத்தினை வெளிப்படுத்தியதனை நாம் அறிவோம். நாவலைவிட செம்மீன் திரைப்படத்தில் இக்கருத்து உயிர்ப்புடன் காட்சிப்படுத்தப்பட்டது.

திராவிடப் பண்பாட்டின் தனித்த கூறுகளில் ஒன்று முறைப்பெண் முறை மாப்பிள்ளை உறவாகும். நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை பெரும்பாலான சாதித் திரள்களில் இது ஒரு வலிமையான கூறாகும். ஆனால் சங்க இலக்கிய அகப்பாடல் தொகுதியில் இந்த வாழ்வியல் கூறுபற்றி ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் இந்த உறவு முறையின் பகுதியான மாமியார்- மருமகன் கூச்சம் சங்க இலக்கியங்களில் மறைமுகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்றும் பெரும்பாலான சாதிகளில் இந்த உறவு முறை கூச்சம் நிரம்பியதாகவே உள்ளது. சங்க இலக்கிய அகத்திணை மாந்தர்களும் தலைவியின் தாயான நற்றாயும் ஒருத்தியாவாள். ஆனால் நற்றாய் கூற்றுப் பாடல்களும் மருமகனான தலைவனைப் பற்றி எதுவும் பேசுவது இல்லை, என்பது ஒரு இலக்கிய மரபாக பின்பற்றப்பட்டுள்ளது. இந்த இலக்கிய மரபு வாழ்வியல் வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளிலிருந்து விளைந்தது ஆகும். வைதீகச் சார்புடைய பக்தி இலக்கியத்தில் இந்த மரபு மீறப்பட்டுள்ளதனை அப்பர் தேவாரப் பாடல் ஒன்றின் வழி அறிகின்றோம்.

உறவு பேய்க் கணம் உண்பது வெண்தலை
உறைவது ஈமம் உடலில் ஓர் பெண் கொடி
துறைகளார் கடல் தோணி புறத்துறை
இறையனார்க் கிவள் என்கண்டு அன்பாவதே

என்பது அப்பாடல்.

திராவிட மண உறவுமுறையில் ஓர் ஆண் மகன் மனைவியைப் போலத் தன் உடன் பிறந்தவளுக்கும் அவள் கணவனுக்கும் கடமை உடையவன் ஆகின்றான். இடர்படும் காலத்தில் வலியச் சென்று உடன் பிறந்தவள் கணவனுக்கு உதவுவது சமுக வழக்கம். வடமொழிக் கதையான பாரதக் கதையில் அருச்சுனனுக்காகக் கண்ணன் தேரோட்டி உதவுகின்றான். தன் தங்கை சுபத்திரையின் கணவன் என்பதனால் கண்ணன் அவனுக்குச் செய்யும் உதவி இது.

"மன்னன் மறுக மைந்துனன் மாருக்கு ஒரு தேரின்மேல்
முன்னங்குசென்று மோழை எழுவித்தவன்"

என்று பெரியாழ்வார் கண்ணனை இந்த உறவு முறையின் அடிப்படையில் பாடுகின்றார். இந்த உறவு முறையின் தொடர்ச்சியாகவே தாய்மாமன் என்பவர் ஒருவருக்குத் தந்தையிலும் பெரிய மரியாதைக்குரியவராகிறார். அண்மைக்கால

தமிழ்த் திரைப்படங்கள் கூட இவ்வுறவினைப் பெருமளவு வணிகமயப்படுத்தியிருப்பதனைக் காண முடிகின்றது.

இனி, சமகாலப் படைப்பிலக்கியங்களை உற்று நோக்கலாம். இருபதாம் நூற்றாண்டின் நாவல் - சிறுகதை ஆகிய சமகாலப் படைப்பிலக்கியங்கள் இரண்டும் பெரும்பாலும் இதழ்கள் சார்ந்தே வளர்ந்துள்ளன. இவற்றிலும் கணிசமானவை மேற்சாதியினரால் தங்கள் சாதி அடையாளத்தோடும், சாதிய அடையாளமின்றியும் எழுதப்பட்டவை. அறுபதுகளின் தொடக்கப்பகுதி வரை கல்கி, மு.வ., நா.பார்த்தசாரதி, அகிலன் உள்ளிட்ட பெயர் பெற்ற படைப்பாளிகளின் ஆக்கங்கள் எல்லாம் இவ்வகையிலேயே அமைந்தன. தேர்ந்த கலைஞரான தி. ஜானகிராமன் கூட இந்த வரிசையில் இருந்து தப்பவில்லை.

பண்பாடு என்பது வெகுமக்கள் திரள் சார்ந்தது. அடிப்படைப்பண்புகள் சிலவுடனும் தனிக்கூறுகளுடனும் விளங்கும் இம்மக்கள் திரளை அடையாளப்படுத்தும் எழுத்துக்கள் இவர்களிடமிருந்து பிறக்கவில்லை.

பண்பாட்டு வேர்களைக் கண்டு அவற்றின் வாழ்வினையும். வீழ்வினையும் அடையாளம் காட்டும் எழுத்துக்கள் அறுபதுகளின் பிற்பகுதியிலிருந்து தான் பிறந்தன. ஜெயகாந்தன் எழுத்துக்களில் ஒரு பகுதியினை இந்த வகையினைச் சார்ந்தவையாகக் கொள்ளலாம்.

இவ்வகையில் குறிப்பிட்டுச் சொல்லத்தகுந்த முதல் எழுத்தாக நீல பத்மநாபனின் "தலைமுறைகள்" நாவலையே கொள்ள முடியும். மனித உறவுகளின் (குடும்ப உறவுகளின்) மேன்மையினைச் சொல்லி அவற்றின் சிதைவினை அடையாளப்படுத்தும் எழுத்துக்கள் கரிசல் வட்டார எழுத்துக்களிலிருந்தே பிறந்தன எனச் சொல்லலாம்.

குறிப்பாக கி.ரா. வின் "புறப்பாடு" என்ற சிறுகதை பெரும்பாலும் திறனாய்வாளர்களால் பேசப்படாத ஒரு மிகச் சிறந்த கதையாகும். மரணம் குறித்த நாட்டார் மரபுகளின் உணர்வுகளைப் புலப்படுத்தும் கதை இது. வேதம். வேதாந்தம், யோகம் என்று நகர்ப்புறம் சார்ந்த மேல் மத்திய தர வர்க்க ஆன்மீகச் சிந்தனைகளைச் சட்டென்று தூக்கியெறியும் ஆற்றல் மிகுந்த சிறுகதை, டி.எஸ். எலியட்டின் பாழ்நிலம் (The Waste Land) கவிதையினைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடிய தமிழ்நாட்டுத் திறனாய்வாளர்களுக்கு இந்தச் சிறுகதை பிடிபடவே இல்லை.

'சாவதும் புதுவது இலமே' என்ற புறநானூற்றுச் சிந்தனையின் தொடர்ச்சியாக இக்கதையினைக் கொள்ள வேண்டும். பிறப்பினைப் போல இறப்பும் ஒரு இயல்பான நிகழ்வே என்பதே வெகுமக்கள் பண்பாட்டின் அடிக்கூறுகளில் ஒன்றாகும். இதனைப் புரிந்து கொள்ளாத காரணத்தால்தான் மகப்பேற்றினை ஒரு நோயாகவும் சூல்கொண்ட பெண்ணை ஒரு நோயாளியாகவும் கருதும் நவீன நாகரிகம் வேர்களை அடையாளம் காணமுடியாமல் தவிக்கின்றது.

இதன் விளைவாகவே நகர்ப்புறங்களில் மகப்பேறுமனைகள் (MATERNITY HOMES) மகப்பேறு மருத்துவமனைகள் (MATERNITY HOSPITALS) ஆகக் காட்சி தருகின்றன.

பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று, அதன் அசைவுகள் வட்டாரத் தன்மைகளோடு சேர்ந்து வேறுபடுவதாகும். வட்டாரத் தன்மை என்பது பண்பாட்டளவில் தமிழ்நாட்டில் ஓரளவே சிதைந்துள்ளது. எனவே அண்மைக்கால படைப்பிலக்கியங்களில் வட்டாரத் தன்மையுடன் வெளிவரும் நாவல், சிறுகதைகள் ஆகியன பண்பாட்டு வேர்களைத் தம்முள்ளே கொண்டிருக்கின்றன. புதுமைப்பித்தனே இம்மரபினைத் தொடங்கி வைத்து விட்டார், எனினும் மிக அண்மைக் காலமாக இந்நெறி ஒரு மரபாக செழித்து வளருகின்றது. இமையத்தின் 'செடல்' நாவல் இதற்கு ஒரு நல்ல உதாரணம்.

பண்பாடு என்பது பழமையைக் கொண்டாடுவது அன்று. உயிருள்ள வேர்களை மட்டும் அடையாளம் கண்டு பாதுகாப்பதாகும். ஏனென்றால் உயிருள்ள வேர்கள் இன்னமும் சமூக அசைவியக்கங்களை முன்னெடுத்துச் செல்கின்றன என்பதே அதற்குரிய காரணமாகும்.

✧

4

பேரக் குழந்தைகள்

தமிழில் புழங்கும் உறவுமுறைச் சொற்களில் பண்பாட்டளவில் குறிப்பிடத் தகுந்தவை பேரன், பேத்தி ஆகிய இரண்டு சொற்களுமாகும். இந்தச் சொற்களின் சரியான வடிவம் பெயரன், பெயர்த்தி என்பதாகும். பேத்தி என்ற சொல்லுக்கு பொருள் பெயர்த்தி என்பதாகும். பெயரன் என்ற சொல்லுக்கு மீண்டும் வந்தவன் என்பதே பொருள். இறந்து போன பாட்டனே மீண்டும் பெயரனாகவும் பாட்டியே பெயர்த்தி ஆகவும் பிறந்திருக்கிறார்கள் என்பது நம்பிக்கை. இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் பெயரன், பெயர்த்தி ஆகிய சொற்கள் பிறந்தன.

பாட்டனும் பாட்டியும் பேரக் குழந்தைகளிடம் இருந்து புதுமண மக்களைப் போல இன்பம் பெறுகின்றனர். மக்கள் 'மெய் தீண்டல் உடற்கின்பம்' எனும் குறள் பேரக் குழந்தைகளிடமே முழுமை பெறுகிறது. பாட்டன் பெயர் இடப்பட்ட பெயரனை பாட்டி மிகுந்த மரியாதையோடு நடத்துகிறாள். அவனைப் பெயர் சொல்லி அழைக்காமல் ஐயா, தங்கம், ராசா என்று செல்லப் பெயர்களால் அழைக்கின்றனர். பெற்ற மக்கள் இறந்த பின்னர் நீர்க்கடன் செய்வதைப் போல பேரக் குழந்தைகளுக்குச் சடங்கியல் கடமைகள் உண்டா? உண்டு. பாட்டனாரின் இறுதி ஊர்வலம் புறப்படும்போது, பெயரன் நெய்ப்பந்தம் பிடிக்கிறான். வசதி குறைந்த வீடுகளில், ஊதுவத்தி கட்டைக் கொளுத்தி பேரக் குழந்தைகள் கைகளில் கொடுத்து வழி அனுப்புகிறார்கள். சில சாதியாரில் பேரக் குழந்தைகளை உயரத் தூக்கிப் பிடித்து வெள்ளைத் துண்டைக் கொடுத்து வீசி வழி அனுப்பச் சொல்வார்கள். பெயரனுக்கு இது கடமை என்றால், பேத்தியின் சடங்கியல் கடமைகள் என்ன? என்ற கேள்வி எழுகிறது.

முன்னெல்லாம் இறந்தவர்க்கான வாய்க்கரிசிக்கு உறவினர்கள் கொண்டு வரும் நெல்லை வீட்டு வாசலில் உரலில் இட்டுக் குத்துவார்கள். வாய்க்கரிசி நெல்லைக் குற்றும்போது, முதல் உலக்கை இடும் உரிமை மகள் வழி பேத்திமார்க்கே உண்டு. அதுபோலவே நான்கைந்து நாட்கள் கழித்து பலகாரப் படையல் (கிழமை) வைக்கும் உரிமையும் அவர்களுக்கே உண்டு.

பேரன், பேத்தி என்பது சொத்துரிமைக்கு அப்பாலும் மரியாதை பெறும். ஏனெனில் அது உயிர்களின் தொடர்ச்சியைக் குறிக்கும் உறவாகும்.

நிகழ்தலைமுறைக்கும் பேரக் குழந்தைகளுக்கும் உள்ள மகள் வழிப் பேத்தி மணஉறவுக்கு உரியவளாகக் கருதப்பட்டாள். அதன் தொடர்ச்சியாகக் கேலி செய்யும் உரிமை இன்றும் பாட்டனுக்கு வழங்கப்படுகிறது. எதிர்நிலையில் மகள் வழிப் பேரன் இதே நிலையில் பாட்டியின் கேலியைப் பெறுகிறான்.

பண்பாட்டுக் கூறுகள் பெற்றோரிடம் இருந்து பெறப்படுவதைவிட தாத்தா பாட்டியிடமிருந்தே அதிகம் பெறப்படுகின்றன. நிகழ்காலத்தில் தாத்தா பாட்டியிடமிருந்து அந்நியப்பட்டுவிட்டதால், குழந்தைகளின் கதை உலகமும் கற்பனையும் சுருங்கிப் போய்விட்டன என்பது வருத்தத்திற்குரிய செய்தி ஆகும்.

✧

5
அதிர்ச்சி மதிப்பீடு

நாற்பது ஆண்டுகளுக்கு முன் நான் கிழக்கு முகவை மாவட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது, நடந்த நிகழ்வு இது.

.... மங்கலம் என்னும் பெயரில் ஒரு சிற்றூர். இரு நூறு வீடுகள் இருக்கும். மருத்துவர். தச்சரைத் தவிர மற்றவர் ஓரே சாதிக்காரர்கள். வறண்டு போன ஒரு காட்டோடையும் குட்டிச் சுவர்களில் நின்ற ஓர் அக்கிரகாரமும் ஊரின் பழமையைச் சொல்லிக் கொண்டிருக்கும். கிட்டத்தட்ட ஆண்கள் அனைவருமே குடிகாரர்கள்; மனைவியை அடிப்பவர்கள். மாலை நேரங்களில் ஊர்ப் பெண்கள் அழுகிற ஓசை கேட்டுக் கொண்டே இருக்கும்.

இந்தநிலையில் இரண்டு பிள்ளைகளின் தாயான பெண்ணொருத்தி, குடிகாரக் கணவனின் கொடுமை தாங்காமல் அரளி விதையை அரைத்துக் குடித்து இறந்து போனாள். அந்த ஊர்க்காரர்களுக்கே இந்தக் கொடுமையைத் தாங்க முடியவில்லை. இழவு வீட்டிற்கு வந்த ஆண்களும் பெண்களும் குடிகாரக் கணவனைச் சுற்றி நின்று வைது தீர்த்தனர். குற்ற உணர்வோடு அழுது கொண்டே தலையைக் குனிந்தபடி இருந்தான். மேலும் மேலும் வைதார்கள். இதைப் பார்த்த மற்ற பெண்களுக்கு ஒரு மகிழ்ச்சி. தன்னுடைய குடிகாரக் கணவனும் இப்படி அவமானப்பட வேண்டும் என்று மனத்துக்குள் ஒரு பழிவாங்கும் உணர்வு.

பதினைந்து நாள் கழித்து மற்றொரு பெண் இறந்துபோனாள். அவள் கணவனுக்கும் இந்த அவமானமெல்லாம் கிடைத்தது. அடுத்தடுத்த பதினைந்து நாள் இருபத்தைந்து நாட்களில் ஐந்தாறு பெண்கள் இதே மாதிரிப் போய்ச் சேர்ந்தார்கள்.

பக்கத்து ஊர்க்காரர்களுக்குச் சந்தேகம் வந்து விட்டது. மங்கலத்துக்காரர்கள் மனைவியை கொன்றுவிட்டு இப்படி நாடகமாடுகிறார்கள் என்று நினைத்தார்கள். அந்த ஊருக்குப் பெண் கொடுக்கவும் எடுக்கவும் வர மறுத்தார்கள். இரண்டு

மூன்று திருமணங்கள் தடைபட்டுப் போயின. ஊரிலுள்ள எஞ்சிய குடிகார ஆண்களுக்கு இது பெருத்த அவமானமாயிற்று. இந்தத் தற்கொலை உணர்வு கொண்ட பெண்களுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்று நினைத்தார்கள். குடிப்பழக்கத்தை நிறுத்துவது என்றா? இல்லை. இனி எந்த பெண்ணாவது அரளி விதை தின்று தற்கொலை செய்து கொண்டால். அவளை மரியாதையாக அடக்கம் செய்வதில்லை. செத்துப் போன வெறி நாயைப் போல ஓலைப் பாயில் கிடத்தி, தெருத் தெருவாக இழுத்துச் சென்று அதன் பின்னரே அடக்கம் செய்யவேண்டுமென்று முடிவு எடுத்தனர். அந்தப் பகுதியில் ஒரு வழக்கமுண்டு ஒரு நாய்க்கு வெறிபிடித்து விட்டது என்றால், சிறு பிள்ளைகளை ஏவி விடுவார்கள். பத்து இருபது பிள்ளைகள் அந்த வெறி நாயை விரட்டி விரட்டிக் கல்லால் அடித்துக் கொல்வார்கள். கொல்லப்பட்ட நாயை ஒரு ஓலைப் பாயில் கிடத்தி ஆரவாரத்துடன் ஊரைச் சுற்றி வருவார்கள். மல்லாந்த கால்களோடு பிளந்த வாயோடு அந்த நாய் ஓலைப்பாயில் கிடக்கும். அதன் பின்னரே ஊருக்கு வெளியிலே கொண்டு சென்று புதைப்பார்கள். ஊரின் இந்த முடிவு பெண்களுக்கு அதிர்ச்சியாகப் போய்விட்டது.

பிளந்த வாயோடும் கலைந்த தலையோடும் விலகிக் கிடக்கும் துணியோடும் தாங்கள் ஓலைப் பாயில் கிடத்தப்பட்டு தெருத் தெருவாக இழுத்துச் செல்லப்படும் காட்சி அவர்கள் கற்பனையில் விரிந்தது. இறந்த பிறகும் இப்படியொரு அவமானத்தைச் சந்திக்க அவர்களது மான உணர்ச்சி இடந்தரவில்லை.

பிறகென்ன அந்த ஊரிலிருந்தே அரளி விதை காணாமல் போய்விட்டது.

அதிர்ச்சி மதிப்பீடு, அதிர்ச்சி மருத்துவம் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். சிற்றூர்ப் புறங்களில் அது இப்படித்தான் எதிர்வினையாற்றும் என்று நமக்குத் தெரியாமல் போயிற்று.

நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னரே அந்தப் பக்கம் போயிருந்தேன். மங்கலத்தார் எப்படி இருக்கிறார்கள் என்று விசாரித்தேன். குடிகாரக் கணவர்களின் எண்ணிக்கையில் ஒன்றுகூடக் குறையவில்லை. ஒன்றிரண்டு பிள்ளைகள் பத்தாவது வகுப்பு வரைப் படித்திருக்கிறார்கள் என்பதைத் தவிர.

6

குடும்ப விளக்கு: அறிமுகம்

வீசும் புயல்காற்று, குமுறும் எரிமலை, இருகரையினையும் மீறிப்பார்ப்பவர் நடுங்கப் பாயும் காட்டாற்று வெள்ளம் - இப்படியொரு பாரதிதாசனையே தமிழ்நாடு முதலில் கவிஞனாக அடையாளம் கண்டது. மெல்லிய தென்றல், பொலிந்த அழகுடன் நின்று எரியும் சுடர்விளக்கு, சலசலத்துச் செல்லும் தெளிந்த நீரோடை - இப்படியும் ஒரு பாரதிதாசன் உண்டு என்று நமக்குச் சாட்சியம் கூறும் நூல் 'குடும்ப விளக்கு'

தன் ஆசான் பாரதியைப் போல் அல்லாமல் குடும்பத்தோடு நிறைந்த ஒட்டுதலுடைய கவிஞர் பாரதிதாசன். ஆசானோ முப்பத்தொன்பது வயதிலே மறைந்து போனார். இவரோ பேரன், பெயர்த்தி எனக் குடும்ப அமைப்பின் இன்பங்களை முழுமையாகத் துய்த்தவர். 1942இல் ஐம்பது வயதைத் தாண்டிய பின்னர் குடும்ப அமைப்பின் முதல் பகுதியான 'ஒரு நாள் நிகழ்ச்சியை வெளியிடுகிறார் கவிஞர். 1944இல் 'விருந்தோம்பல்' என்னும் இரண்டாம் பகுதியும், 1948இல் 'திருமணம்' என்னும் மூன்றாம் பகுதியும், 1950இல் 'மக்கட்பேறு' 'முதியோர் காதல் ' என்னும் நான்கு, ஐந்தாம் பகுதிகளும் வெளியிடப் பெறுகின்றன. ஆக ஒன்பதாண்டுக் காலத்தில் ஐந்து பகுதிகளாகப் பிறந்த நூல் குடும்ப விளக்கு. படைப்பாளியின் உணர்வு வளர்ச்சி படைப்பிலே தெரிகின்றது.

முதல் பகுதியான 'ஒரு நாள் நிகழ்ச்சி'யை வெளியிடுகின்ற போது இந்நூலை ஐந்து பகுதியாக எழுதும் முன்திட்டம் எதுவும் கவிஞரிடம் இருந்ததாகத் தெரியவில்லை. அது ஒரு பெரிய நூலின் முற்பகுதிபோலத் தோன்றவுமில்லை. ஏனைய பகுதிகளுக்கும் முதற்பகுதிக்கும் உள்ள இன்னொரு வேறுபாடு - முதற்பகுதியில் கதைமாந்தர் யாருக்கும் அவர் பெயர் சூட்டவில்லை. அவன், அவள், பிள்ளைகள், மாமன், மாமி என்று உறவுமுறைப் பெயர்கள் மட்டுமே தரப்படுகின்றன. அக்காலத்தில் இந்த நூலுக்குக் கிடைத்த வரவேற்பே கவிஞரை மேலும் நான்கு பகுதிகளை எழுதத் தூண்டியிருக்க வேண்டும். அதனைத் தொடர்ந்தே கதை மாந்தர்களுக்கு வேடப்பன், நகைமுத்து எனப் பெயரிடவும் கவிஞர் விரும்பியிருக்க வேண்டும்.

இல்லறத்தின் சிறப்பை விளக்க முனைகின்ற பாரதிதாசன், இந்த நெடுங்கவிதை நூலில் எதிர்நிலையாகத் துறவறத்தைக் கடுமையாகச் சாடுகிறார். அதிலும் குறிப்பாக, அப்போது தென்னிந்தியாவில் செல்வாக்குப் பெற்றுக் கொண்டிருந்த புதிய மடங்களான திருவண்ணாமலை ரமணாசிரமத்தையும் புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தையும் கடுமையான சொற்களால் 'ஆசிரமம்' 'மலையடியில் துறவு' என்ற இரண்டு தலைப்புகளில் சாடுகிறார். அத்வைத வேதாந்தச் சார்பாக இந்த ஆசிரமங்களை நிறுவிய ரமணரும் அரவிந்தரும் அப்போது அவற்றின் தலைமைப் பொறுப்பை ஏற்றுப் புகழோடு நடத்திக் கொண்டிருந்தனர். இல்லறத்தின் சிறப்பை விளக்க ஒரு புறம் துறவு நிறுவனங்களைச் சாடும் கவிஞர் மறுபுறத்தில் அற உணர்வினை இழந்த குடும்பத்தின் நிலையினை எதிர் நிலையில் வைத்து 'இருண்ட வீடு' என்று ஒரு கவிதை நூலையும் எழுதியுள்ளார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இறக்குமதியான எந்திர நாகரிகம் தமிழர்களின் சமூக. அரசியல் வாழ்வை மட்டுமின்றிக் குடும்ப வாழ்வையும் பெரிதும் பாதித்தது. நகர்ப்புறம் சார்ந்த குடும்பம்.மத்தியதரக்குடும்பம்என்றெல்லாம்புதிய அளவுகோல்கள் உருவாகும் வகையில் குடும்ப அமைப்பில் மாற்றங்கள் நிகழ்ந்தன. பெண்கல்வி பெரிதும் பேசப்படும் பொருளாயிற்று. மாறிவரும் சமூக அமைப்புக்கேற்ப, குடும்பத்தின் கட்டுமானத்தில் மாறுதல்கள் ஏற்பட வேண்டுமென்பது பாரதிதாசனின் எண்ணப் போக்காகும். நிராகரிக்க வேண்டிய சில பழமைப் போக்குகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய புது நெறிகளையும் கொண்டு அவர்

கவிதையில் நாம் காணவிரும்பிய ஓர் இலட்சியக் குடும்பத்தைப் படைத்தார். ஆனால், மரபுவழித் தமிழ்க் குடும்பத்தின் கட்டமைப்பு அவர் அடிமனத்தில் உறைந்திருந்தது என்பதனையும் நாம் மறுக்க இயலாது.

'மனைக்கு விளக்காகிய வாணுதல்' (அகம்) என்ற சங்கப் பாடலின் தொடரும் பொருளும் அவரது நூலுக்குக் 'குடும்ப விளக்கு' என்ற பெயரைத் தந்தன என்று கொள்ளலாம். குடும்ப அமைப்பின் ஆதார அச்சாக விளங்குபவள் பெண்ணே ஆவாள். ஆகையால், பெண்ணை மையமிட்டுப் பிறந்த அகத்திணை இலக்கியங்களை போலப் பெண்ணை மையமிட்டே 'குடும்ப விளக்கு' பிறந்தது. இந்தப் பாட்டு நூலின் தலைவி.

இரவு தன்னை
திருவிளக்கேந்தி வந்து
தெருவினில் வரவேற்கின்றாள்.

அவளே பாரதிதாசன் காட்ட முற்படும் 'குடும்ப விளக்கு' வீட்டில் சமையல்காரியாக. தையற்காரியாக, தச்சு வேலையும் கொல்லர் வேலையும் செய்பவளாக, துணைவனுக்குத் காதலியாக, பிள்ளைகளுக்குத் தாயாக, மருத்துவச்சியாக, முதியவர்களுக்குப் பணிமகளாக இவள் நிற்கிறாள். இவள் வீட்டில் வேலைக்காரர்கள் இல்லை. இவளிடத்தில் புதுமையின் சாயலும் பொலிந்து நிற்கின்றது. இவள் காலையில் எழுந்தவுடன் இசைக்கருவி வாசிக்கின்றாள். பிள்ளைக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கின்றாள். கணவனது மளிகைக் கடையில் வணிகமும் செய்கின்றாள். கணக்கும் எழுதுகின்றாள். இத்தனைக்கும் மேலாக இரவில் படுக்கையறையில்...

'இதுவரைக்கும் பொதுநலத்துக் கென்ன செய்தோம்?'

என்று தன் கணவனிடத்தில் ஒரு கேள்வியும் கேட்கிறாள். இவளே பாரதிதாசன் காண விரும்பிய புதிய பெண்.

"தமிழ்நாட்டின் பண்டைய அறிஞர்கள் கண்ட குடும்பங்கள் நமக்குச் சீவகன் முதலிய பெருநூற்களில் காட்சியளிக்கின்றன. இன்றைய நிலையில் எளிய நடையில் அமைந்த' குடும்ப விளக்கு' ஒரு நடுத்தரக் குடும்பம் இது என்று திட்டமாகச் சொல்லாவிட்டாலும் கோடி காட்டியதாகவாவது இருக்கும். பெண், குடும்பம் என்பன பற்றிப் பாரதிதாசன் 1940 களின் நடுப்பகுதியில் கொண்டிருந்த சிந்தனை இதுவேயாகும்.

குடும்பம் என்கிற அமைப்பு குறித்த விரிந்த, ஆழமான சிந்தனைகள் கடந்த நூற்றாண்டில் ஐரோப்பாவில் பிறந்தன. இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவின் மரபுவழிக் குடும்ப அமைப்புகள் கட்டுடைபடத் தொடங்கியபோது குடும்பம் பற்றிய மறுசிந்தனைகள் பிறக்கலாயின. இவ்வகையான மறுசிந்தனையை இந்தியாவில் தொடங்கி வைத்தவர் கவிஞர் பாரதிதாசன் ஏற்றுக் கொண்ட தலைவரான தந்தை பெரியார்தான். 'கலியாணம் என்பதே நாம் உண்டாக்கிக்கிட்ட ஒரு வழக்கம்தானுங்களே' (பெரியார் 1972 இல் கணையாழி இதழுக்களித்த பேட்டி) என்று கூறிய பெரியார் குடும்ப அமைப்பின் 'புனிதத்தை ஒட்டுமொத்தமாக நிராகரித்தார். இருபத்தொன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிற்கும் இன்றைய தமிழ் இளைஞர்கள் சிலர் "குடும்பம் என்கிற அமைப்பை திட்டமிட்டு நாம் சிதைக்க வேண்டும். அதுவே சமூக மாற்றத்திற்கு முதற்படியாகும் என்று பேசியும் எழுதியும் வருகின்றனர். ஆனால் இந்தக் கருத்தோட்டம் இன்றைய நிலையிலும் "அதிதீவிரம்" என்றே பெருவாரியான தமிழ் மக்களால் உணரப்படுகின்றது. அப்படியானால் பாரதிதாசன் மரபு வழிக் குடும்ப அமைப்பை பேணுபவர்தானா? என்ற கேள்வி இலக்கியத் திறனாய்வாளர்களிடமிருந்தும் இளைஞர்களிடமிருந்தும் தோன்றலாம். இந்தக் கேள்வி நிராகரிப்பதற்கு உரியது அன்று. மாறாக, பாரதிதாசன் பற்றிய துல்லியமான இலக்கிய சமூக மதிப்பீட்டைக் கொள்ளும் வகையில் இது நமக்குத் துணை செய்யும் கேள்விதான்.

பாரதிதாசன் தம் தலைவராகத் தந்தை பெரியாரை ஏற்றுக் கொண்டார். 1933 இல் பகுத்தறிவாளர் மாநாட்டில் 'நான் ஒரு நிரந்தர நாத்திகன்' என எழுதிக் கையொப்பம் இட்டார். ஆனாலும் கூட அவருடைய தலைவர் பெரியாரைப் போல தன் முழு வாழ்நாளையும் உழைப்பையும் சமூக மாற்றத்திற்காக முன்வைக்க அவரால் இயலவில்லை. அது பாரதிதாசன் தவறோ குறையோ அன்று. குடியிருக்கச் சொந்த வீடுகூட இன்றி 'வாய்க்கும் கைக்குமான வாழ்க்கைப் போராட்டத்தில்' நின்று கொண்டிருந்த ஒரு பள்ளிக்கூட ஆசிரியரின் எல்லையாகும். இது ஒரு நடைமுறை உண்மை. ஆனால் இந்த நடைமுறை உண்மையிலிருந்தும் சமூகம் தந்த வாழ்க்கைத் தளைகளில் இருந்தும் பாரதிதாசன் என்ற கவிஞர் விடுபடத் துடித்தார். விடுதலைக்கான "தேட்டம்" அவரிடம் முழுமையாக இருந்தது. அத்தோடு ஒரு கவிஞருக்கான 'அழகியல் தேட்டமும்' இருந்தது. ஆக மொத்தத்தில் பெரியாரின் தூய அறிவுப் போக்கு, நகர்ப்புற நடுத்தரக் குடும்பத்தின் வாழ்க்கைப் போக்கு, ஒரு கவிஞருக்கான அழகியல் தேட்டம், விடுதலை உணர்வு- இவையெல்லாம் சேர்ந்து பாரதிதாசனைப் படாதபாடு படுத்தின.

அவருக்குள் கடவுள் நம்பிக்கை இல்லை. ஆனால் விடியற் காலையில் வீட்டு வாசலில் பெண்கள் இட்ட கோலம் அவரது கண்ணையும் நெஞ்சையும் கவர்ந்தன.

அரிசிமாக்கோலம் அமைத்தனள்; அவளுக்குப்
பரிசில் நீட்டினான் பகலவன் பொன்னொளி!

என்கிறார் கவிஞர் 'குடும்ப விளக்கில்' மட்டுமன்று, அவரது எல்லாக் கவிதைகளிலும் ஞாயிறு எழுகின்ற காட்சி சிறப்பாகவே பாடப்பட்டுள்ளது.

உலகம் விளக்கம் உறக் கீழ்த்திசையில்
மலர்ந்தது செங்கதிர் மலர்ந்தது காலை

என்றுதான் கவிஞரின் 'எதிர்பாரா முத்தம்' தொடங்கும். ஆனால்

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு

எனத் தொடங்கும் 'திருமுருகாற்றுப்படை' ஆசிரியருக்கும் பாரதிதாசனுக்கும் பெருத்த வேறுபாடு உண்டு.

குடும்பவிளக்கு அளவிற்கு நீண்ட நெடிய தமிழ் கவிதை எதுவும்கடவுள்வணக்கம் அல்லதுவாழ்த்து இன்றித்தொடங்கியதே தமிழ் இலக்கிய வரலாற்றில் கிடையாது பாரதியாரின் 'பாஞ் சாலி சபதம்' உட்பட. ஆனால் பாரதிதாசன் குடும்ப விளக்கில் கடவுள் வாழ்த்தும் இல்லை. கடவுள் பற்றிய பேச்சும் எங்கும் வரக் காணோம். கடவுள் வாழ்த்து இல்லாமல் நெடுங்கவிதை நூல்படைக்கப் பாரதிதாசனுக்குமுன் தமிழ்க்கவிஞர்கள் யாரும் துணிவு கொள்ளவில்லை என்பதே வரலாறாகும்.

'குடும்ப விளக்கு' முழுக்க முழுக்கத் தமிழ் மரபும்.மரபுக்கு ஊடாகக் கவிஞர் கண்ட புதுமையும் கலந்து பிறந்த நூலாகும். குடும்ப விளக்கின் இரண்டாம் பகுதி 'விருந்தோம்பல்' என்றும் மூன்றாம் பகுதி 'திருமணம்' என்றும் நான்காம் பகுதி 'மக்கட்பேறு' என்றும் கவிஞரால் பெயரிடப்பட்டுள்ளது. விருந்தோம்பல் என்பது மனிதப் பொதுமை சார்ந்த ஒரு மதிப்பீடுதான் இருப்பினும் தமிழ் நாகரிகம் அதற்குச் சிறப்பான இடத்தை அளித்தது.

அல்லில் ஆயினும்
விருந்துவரின் உவக்கும் பெருந்தோட் குறுமகள்
என்பது சங்க இலக்கியம்
இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

என்பது திருக்குறள். 'விருந்து புறந்தருதலும் இழந்த என்னை" என்பது சிலப்பதிகாரத்துக் கண்ணகியின் கவலை. 'விருந்து கண்டபோது என்னுறுமோ' என்றுதான் கம்பன் கண்ட சீதை அசோகவனத்தில் கலங்குகிறாள். இந்தத் தமிழ் மரபினை வலிமையாகப் பற்றிக் கொண்டே,

நற்றமிழர் சேர்த்த புகழ் ஞாலத்தில் என்னவெனில்
உற்ற விருந்தை உயிரென்று பெற்றுவத்தல்

என்கிறார் பாரதிதாசன். காதலும் திருமணமும் மனிதப் பொதுமை சார்ந்த நிகழ்ச்சிகளாகும். திருமணத்தின் விளைபயன் "மக்கட்பேறு" என்பது தமிழ் மக்களின் வாழ்நெறியும் நம்பிக்கையும் ஆகும்.

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை தாம் வாழுநாளே
என்பது சங்க இலக்கியக் கருத்தோட்டம்.
மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு
என்பது வள்ளுவச் சிந்தனை.

இந்தத் தமிழ் மரபு பற்றியே குடும்ப விளக்கில் மூன்றாம் நான்காம் பகுதிகள் திருமணம், மக்கட்பேறு என்றமைகின்றன.

குடும்ப விளக்கின் ஐந்தாம் பகுதி முதியோர் காதல் என்பது ஆகும். மிக நெடிய தமிழ் மரபின் நீட்சிதான் இந்தப் பகுதி. ஆயினும் மரபினை இந்த அளவு விரித்துப் பாட பாரதிதாசனைப் போல் எந்தக் கவிஞனும் நெஞ்சுரம் பெறவில்லை என்பதுதான் குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்த செய்தியாகும். காதல் உணர்வு என்பது உடல் அளவில் இறந்து போன பிறகும் நெஞ்சளவில் நின்று, அது மனிதனை இயக்குகின்றது. நவீனத் திறனாய்வாளர்களின் கருத்தின்படி சொல்வதானால் சிக்மண்ட் ஃப்ராய்டு தமிழ் அகத்திணை மரபுகளிடம் தோற்றுப் போகின்ற இடம் இதுதான்.

'காமஞ்சான்ற கடைக்கோட் காலை' என்று தொல்காப்பியம் காதலை முதுமையோடு சேர்த்து பேசியது உண்மைதான். இருபது நூற்றாண்டுத் தமிழ்இலக்கிய வரலாற்றில் காதல் உணர்வை

இளமையில் இருந்து பிரித்து முதுமையோடு பொருத்திப் பார்க்க விருப்பமும் நெஞ்சுரமும் பாரதிதாசனைத் தவிர வேறு எந்தக் கவிஞனுக்கும் வாய்க்கவில்லை. அது மட்டுமன்று உடலாலே கூடிக்களித்த அந்த முதியவர்கள் முதுமையிலும் கூடிக் கற்றார்கள். அதுவும் திருக்குறள் கற்றார்கள்.

குடித்தோமே பாலின் கஞ்சி
குறட்பாவில் இரண்டு செய்யுள்
படித்தோமே, அவற்றினுக்கு
விரிவுரை பலவும் ஆய்ந்து
முடித்தோமே! மொண மொணென்று
மணிப் பொறி சரியாய்ப் பத்தும்
அடித்தது துயின்றேன் இப்போது
அழைத்தீர்கள் விழித்தேன் என்றாள்.

இரவிலே நன்றாகத் தூங்கினாயா? என்று கணவன் கேட்கும் கேள்விக்கு மனைவி கூறும் மறுமொழி இது. தொல்காப்பியர் தொட்டு பாரதியார் வரை யாரும் காணாத காட்டாத குடும்பக் காட்சி இது. இந்தப் புதுமையின் பெயரே பாரதிதாசன். மரபு வழிக் குடும்பத்தின் மரபுவழிச் சுவையுணர்ச்சியிலிருந்து பாரதிதாசனால் விடுபட இயலவில்லை. பெற்ற குழந்தைகளையும் பேரக் குழந்தைகளையும் கொஞ்சிப் பெறுகின்ற மகிழ்ச்சி உண்மையானதாகவும் உயர்வானதாகவும் பாரதிதாசனுக்குத் தோன்றியது. இந்த மகிழ்ச்சியும் உற்பத்தி சார்ந்த கலாச்சாரத்தின் ஒரு பகுதிதான். தந்தையின் முதுகில் குதிரையேறுகின்ற இளங்குழந்தைக்கு

சப்பைக் குதிரை இல்லை இல்லை
தமிழன் குதிரை ஏய் ஏய் ஏய்

என்று பாட்டுச் சொல்லிக் கொடுக்கின்றார் பாரதிதாசன். 'பாட்டியே சிறுமலைப் பழங்கள் இந்தா' என்று பேரன் கொடுக்க வருகின்றான். "உன் தாத்தாவுக்கு கொடு போ" என்று சொல்லிவிட்டு கொடுக்கப் போவதைக் கூர்ந்து நோக்கி மகிழ்ச்சியடைகிறாள் கிழவி. பாரதிதாசனுக்குப் பின்னும்கூட இந்த மகிழ்ச்சியை அடையாளம் கண்ட கவிஞரும் காட்டிய கவிஞரும் தமிழ்நாட்டில் வேறு யாரும் இலர். இது பாரதிதாசனின் தனித்த பெருமை.

வேறு வகையில் சொல்வதானால் நிலமானிய மதிப்பீடுகளின் சாயலை ஒருபுறத்தில் பாரதிதாசனிடம் காணலாம்.

மறுபுறத்தில் சமூகநீதி என்னும் வாளேந்தி இந்த மதிப்பீடுகளில் சிலவற்றிற்கு எதிராக நின்று போராடுகிறார் அவர். ஒன்றினைச் சான்றாக எடுத்துக் காட்டலாம். விருந்தோம்பல்!. விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்றல், அவருக்கு மிகச் சீரிய பணிவிடைகள் செய்தல். தன் வீட்டில் தான் உண்ணுமிடத்தில் அவரோடு உடன் அமர்ந்து உண்ணுதல். தன் வீட்டுப் பெண்களை உணவு பரிமாறச் செய்தல். உண்ணும்போது பரிவும் அன்பும் கலந்தபடி அவருடன் உரையாடுதல். உண்டு முடித்த பின்னரும் அவருக்கு மகிழ்ச்சி ஊட்டும் மிகச் சிறிய செயல்கள் செய்தல். இவையே மரபுவழி விருந்தோம்பலின் அசைவுகள் ஆகும். இருப்பவர். இல்லாதவர், அறிஞர், வறிஞர், எனச் சமூகத்தின் எல்லாத் தரப்பிலும் விருந்தோம்பும் முறை இதுவாகத்தான் நேற்றுவரை இருந்து வந்திருக்கிறது. மனித உறவினைப் பேணி நிற்கும் உயர்மதிப்பீடுகளில் ஒன்று விருந்தோம்பல். இது உற்பத்திக் கலாச்சாரத்தின் விளைவு.

இன்று நகர்ப்புற மேல் தட்டு மக்களிடையே விருந்தோம்பலுக்கான அசைவுகள் என்ன? விருந்தினரை நகர்ப்புற விடுதிகளில் தங்க வைப்பது. பொருளியல் வளமுடையார் தம்முடைய புற வீட்டிலோ விருந்தினர் விடுதியிலோ தங்க வைப்பது. உண்வு விடுதியில் இருந்து உணவு கொண்டு வருவது. வேலைக்காரரை இட்டுப் பரிமாறச்செய்வது. உடன் இருந்து உண்ணும் வாய்ப்பை விருந்தினருக்குத் தராதது. விருந்தினரை வணிக வாடிக்கையாளராக நடத்துவது ஏன்?. இவ்வகையான அசைவுகள் ஏன் மரபிலிருந்து வேறுபட்டு நிற்கின்றன.

பாரதிதாசனின் 'விருந்தோம்பல்' நிலமானிய உற்பத்திசார்ந்த ஒரு பண்பாட்டின் வெளிப்பாடு. ஆனால் இன்றைய நகர்ப்புறத்து விருந்தோம்பல் தரகுப் பண்பாடு அல்லது நுகர்வுப் பண்பாடு. பின்னது உயிரற்றது.'மனித உறவுகளை வணிக உறவுகளாக்குவது. பாரதிதாசன் நிலமானிய உற்பத்தி முறையின் நல்ல மதிப்பீடுகளுக்கும் 'அல்ல' மதிப்பீடுகளுக்கும் நடுவில் நின்றார். சில பழைய மதிப்பீடுகளைப் பேண நினைக்கிறார். சில பழைய மதிப்பீடுகளை அழிக்க நினைக்கின்றார்.

'முதியோர் காதலில்' கணவனும் மனைவியும் நூற்றைந்து ஆண்டுகள் வாழ்கின்றனர். அந்த வயதிலும் கூட கணவனுக்கு அருகில் இருக்கும்போது அவளுக்கு நாணம் பிறக்கின்றது. 'அம்மாயி' எனப் பேரன் அவளை அழைக்கும் குரல் கேட்டு

அவள் மனம் இன்பத்தில் ஆழ்ந்து போகிறது. பயிர்ப் பெருக்கத்தைக் கண்டும் கேட்டும் மகிழும் உழவனைப்போல உயிர்ப் பெருக்கத்தைக் கண்டும் கேட்டும் மகிழ்வு கொள்ளுகின்ற உற்பத்தி சார்ந்த பண்பாட்டின் வெளிப்பாடு இது. மறுபுறத்தில் புதிய விஞ்ஞானம், அதன்வழி மேற்குலகம் பெற்ற வளர்ச்சி, புதிய சித்தாந்தங்கள் இவை பற்றிய விரிந்த பேச்சு எதுவும் குடும்ப விளக்கில் இல்லை. ஆனால்,

செவ்வையுற மகளிர்க்குக் கல்விநலம் தேடல்
செயற்பால யாவினுமே முதன்மை எனக் கொண்டே
அவ்வகையே செயல் வேண்டும்! அறிவுமனையாளால்
அமைதியுலகுண்டாகும் என்ன இதில் ஐயம்!
குடும்ப விளக்கின் சாரமான செய்தியே இதுதான்.

✧

7

தொலைந்துபோன பொன்தொடரியின் கண்ணிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழக சமூக வரலாற்றில் குறிப்பிடத்தக்க காலமாகும். அதாவது ஐரோப்பியர்(ஆங்கிலேயர்) இங்கு வந்து ஒரு நூற்றாண்டு காலமான பின்னர் ஐரோப்பிய அறிவொளிக் காலத்தின் முதற்கதிர்கள் தமிழ்ச் சமூகத்தில் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சின. அந்த ஒளியை ஏற்றி வந்த கருவியாக அச்சுக் கருவிகள் திகழ்ந்தன. “மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற காடு” என்ற பாரதிதாசன் கவிதை குறிப்பிடுவது போல அச்சு எந்திரம் வந்து ஒரு நூற்றாண்டுக் காலம் வந்த பின்னரும் தமிழரின் இல்லங்களிலிருந்து பனையோலைகளும் எழுத்தாணிகளும் அவை சார்ந்த புனிதங்களும் விடைபெற்றுப் போகவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வந்த ஆங்கிலேயப் பாதிரிமார்கள். குறிப்பாகத் தமிழறிந்த பாதிரிமார்கள் தமிழர்களுக்கு ஒரு புதிய உலகத்தைத் திறந்து காட்டினர். அல்லது படைத்துக் காட்டினர். இந்தப் புதிய உலகம் சிவனும் திருமாலும் படைத்த உலகத்திற்குப் போட்டியாக மற்றொரு உலகம் தமிழர் சிந்தனையில் உருவானது. அந்த உலக உருவாக்கத்திற்கு 'பிரமன் கைமண்ணைப் போலப் பத்திரிக்கைகள் மூலப் பொருளாகின. 1850 தொடக்கம் தமிழ் இதழ்கள் இந்தப் புத்துலக உருவாக்கம் பற்றி நமக்கு கதைகதையாய்ச் சொல்கின்றன.'கோத்த பொய் வேதங்களும் மதக் கொலைகளும் ஆள்வோர்தம் கூத்துக்களுமாயிருந்த் தமிழக வரலாறு மக்களால் எழுதப்படும் பொன் தொடரியாக (பொற்சங்கிலி) வளரத் தொடங்கியது. இந்தப் பொன் தொடரியின் கண்ணிகள் பல தொலைந்து போய்விட்டன. இந்த கண்ணிகளில் சிலவற்றை மீட்டெடுத்துத் தந்துள்ளார் பேரா.வீ.அரசு. அவருக்குத் தமிழுலகம் நன்றிக்கடன் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சமூகம் என்பது சாதிகளின் அடுக்கேயன்றி வேறன்று. 1850 முதல் 1900 வரையிலான ஐம்பது ஆண்டுகளில் ஓரளவு எண்ணிக்கை பலம் கொண்ட எல்லாச் சாதியினரும் தங்களுக்கென ஒரு பத்திரிக்கையினைத் தொடங்கியிருந்தனர். 'ஊமைப்பிள்ளை பேசத் தொடங்கிய கதையிது.' சில பிள்ளைகள் மட்டும் தெளிந்த நல்லாற்றலோடு பேசின. பெருநகர உருவாக்கம் காரணமாக அப்படி அறிவார்ந்த பிள்ளைகள் சில கூடி சுயசிந்தனையோடு தமிழில் தத்துவ விவேசினி என்ற இதழையும் ஆங்கிலத்தில் reformer thinker என்ற இதழையும் தொடங்கி நடத்தியுள்ளனர். அறியப்படாத இந்த ஆளுமைகளின் பெருமுயற்சியினைப் பேராசிரியர் வீ.அரசு நிகழ்காலத்தின் தேவைகருதி வெளிப்படுத்தியுள்ளார். 1878-1888 என இந்த நாத்திக இதழ்கள் வெளிவந்த காலத்தில்தான் வைதிகர்களும் சனாதனிகளும் ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம் போன்ற அமைப்புகளையும் சென்னையில் நிறுவி அவற்றின் கிளைகளையும் உருவாக்கி வந்தனர். நாவலாசிரியாராக அறியப்பட்ட பி.ஆர் ராஜமையரின் Rambler of Vedanta என்ற நூல் மிகச்சிறந்த நூலாக உயர்த்திப் பிடிக்கப்பட்டது. வைதிகத்தின் குழலான இந்து (ஆங்கிலம்) சுதேசமித்திரன் ஆகிய இதழ்களும் இக்கருத்துக்கு இசைந்து வினையாற்றின.

இந்த இதழ்கள் வெளிவந்த காலத்தில் தமிழ்ச் சமூகத்தின் எஞ்சிய பகுதி சைவ கிறித்துவச் சண்டைகளால் நிரம்பியிருந்தது. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரின் 'புண்ணியத்தில் கிறித்துவத்தின் மீது தொடங்கப்பட்ட தாக்குதல்கள் சற்று ஆபாசமாகக்கூட இருந்தன. மற்றொரு புறம் இந்து, சுதேசமித்திரன் வழியாக உருவாக்கப்பட்ட இந்திய தேசியம் சிந்திக்கத் தொடங்கிய தமிழர்களை வேதாந்தப் படுகுழிக்குள் தள்ள முயன்றன. யாழ்ப்பாணம் காசிவாசி செந்திநாத ஐயரின் (இவர் நாவலரின் மாணவர்) தேவாரம் வேதசாரம், சைவ வேதாந்தம் என்னும் இரண்டு நூல்களும் அதற்கான சான்றுகளாகும். மனோன்மணியம் சுந்தரனார் போன்ற அறிஞர்கள் சைவர்கள் சைவ சித்தாந்தத்தை இந்த படுகுழியில் விழாமல் காப்பாற்றினார்கள். மறுபுறம் சுயசிந்தனையாளர்கள் சுழற்றிய தத்துவ விவேசினி போன்ற வாள்கள் நகர்புறத்து மக்களோடு ஊர்புறத்து மக்களையும் இந்துமத ஆசாரங்கள் என்னும் கொடும் பிடியிலிருந்து விடுவித்தன.

'ஆபாசம்' என்ற சொல்லாலே இந்து மதத்தை அடையாளப் படுத்திய இவர்களது அறிவுத்திண்மை இன்றளவும் நன்றிக்கு உரியது. இந்த வேதாந்தமே இன்று பகவத்கீதை என்ற பெயரில் இந்திய சமூகத்தை அடிமைப்படுத்தியிருக்கின்றது. ஐரோப்பிய அறிவொளிக் காலத்தின் புதிய சிந்தனைகளையும் கருத்துக்களையும் இந்த இதழ் கட்டுரைகள் தமிழில் தரமுயன்றுள்ளன. ஐரோப்பிய நாத்திகர் பிராட்லாவின் (brodlaugh) மாணவராக தமிழகம் வந்த ஐரோப்பியப் பேராசிரியர் சிலருக்கும் இதில் பங்குண்டு. திருநெல்வேலி ம.தி.தா இந்துக் கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியர் விங்லேர் (துரை) இவர்களில் ஒருவர். இவரது மாணவராக இருந்த எழுத்தாளர் பி.ஸ்ரீ. ஆச்சாரியார் தம் நூலொன்றில் இவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

விங்லேர் துரை சில காலம் பாளை நகராட்சியின் நியமனத் தலைவராகவும் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. வேறு வகையில் சொல்வதானால் அறியப்படாத இந்த ஆளுமைகளின் தொண்டினை மீளக் கண்டெடுத்து நாம் நன்றியுடன் பதிவு செய்தாக வேண்டும். அறிவியல் தமிழின் வரலாற்றினை எழுத வந்தவர்கள் கூட தத்துவ விவேசினியில் வெளிவந்த அறிவியல் கட்டுரைகளைப் பற்றிப் பேசவில்லை.

'வெள்ளைக்காரருக்கு மீள உயிர் கொடுக்கும் சக்தியுண்டு' என்ற தலைப்பில் ஒரு ஆங்கில மருத்துவரின் சோதனை முயற்சி பற்றி நான்காம் தொகுதியில் ஒரு கட்டுரை வெளிவந்துள்ளது. அக்காலத்தில் இக்கட்டுரை படித்தவர்களிடம் கூட எத்தகைய அதிர்வலைகளை உருவாக்கியிருக்கும் என்று கூட நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. எனவே தான் சொல்லுகின்றோம்: தமிழ் அறிவுலக வரலாற்றில் தொலைந்து போன பொன்தொடரியின் கண்ணிகளை பேராசிரியர் வீ. அரசு மீட்டெடுத்துத் தந்துள்ளார். நிகழ்கால ஆய்வுலகமும் ஆய்வாளர்களும் அவருக்குப் பெரிதும் நன்றிக் கடன் பட்டுள்ளோம்.

✧

பேரா.வீ.அரசு தொகுத்த 'தத்துவ விவேசினி' நான்காம் தொகுப்புக்கான முன்னுரை.

8

மொழிக் கல்வியும் மதிப்பீடுகளும்

வேறுபட்ட மொழிக்கல்வியின் அடிப்படைகள், அதன் உட்கூறுகள். அதைக் கற்பிக்க வேண்டியதன் தேவை. நியாயம். வழக்கிலுள்ள மொழிக்கல்வியின் தன்மை. அதன் வரம்புகள் ஆகியவற்றைக் குறித்து மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் தொ. பரமசிவம் அவர்களுடன் உரையாடினோம். மொழிக்கல்விக் குறித்து நாம் வித்தியாசமாகச் சிந்திக்க, செயல்பட அவரது கருத்துக்கள் உதவியாகயிருக்கும்.

கேள்வி: மொழிக்கல்விக்குரிய மொழி ஏதாவது உண்டா? இன்ன வகையான மொழிதான் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று சொல்வது சரியாகுமா?

பதில்: மொழிக்கல்வி என்பது குழந்தைமொழியைச் சார்ந்திருப்பது முக்கியம். எது குழந்தைமொழி என்றால் குழந்தை புழங்குகின்ற மொழியெல்லாம் குழந்தை மொழிதான். வேண்டுமானால் தகுதி வழக்கு இயல்பு வழக்கு என்கிற வேறுபாடு குழந்தைகளுக்குப் புரியாது. அவற்றை வீட்டிலே குழந்தைகள் பெற்றோர்களின் கண்டிப்பின் மூலமாகக் கற்றுக் கொண்டிருக்கின்றனர். அதையும் கற்றுக் கொடுக்க வேண்டும். எப்போது என்றால், ஒரு பதினைந்து வயது ஆன பிறகு குழந்தை எந்த மொழியைத் தெரிந்து கொள்ள வேண்டும்? எந்த மொழியைத் தெரிந்து கொண்டிருக்கிறது? இரண்டுக்கும் இடையேயான இடைவெளி என்ன? இந்த இடைவெளியை எப்படி இட்டு நிரப்புவது? தகுதி வழக்கு இயல்பு வழக்கு என்பதன் வேறுபாடுகளைக் குழந்தைக்குப் புரியவைப்பதென்பது எளிதல்ல. அதைப் படிப்படியாகத்தான் செய்யவேண்டும்.

ஆனால் மொழிக்கல்வியைத் திட்டமிடுவோர் இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்வதில்லை. முதலில் குழந்தைக்கு ஏற்கனவே வாய்த்துள்ள மொழி அறிவை அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். காரணம், பள்ளிக்கு வரும்போதே குழந்தை பேசத் தெரிந்த குழந்தையாகத்தான் வருகிறது. அதனுடைய மூளைக்குள்ளே சொல் தொகுதிகள் இருக்கின்றன. பள்ளிக்கு வருகிற போது பிள்ளைகள் அறிந்திருக்கின்ற சொற்களின் அளவு, நகர்ப்புறத்தை விட கிராமப்புறங்களில் கூடவாகவும் கிராமப் புறங்களிலும் கூட வசதியான வீட்டுப்பிள்ளைகளை விட வசதி குறைவான வீட்டுப் பிள்ளைகளின் சொல்தொகுதி அதிகமாகவும் இருக்கிறது என்பது நடைமுறை உண்மை. ஆனால் இந்தச் சொல்தொகுதி எல்லாம் இப்போதுள்ள பாடத் திட்டத்திற்குள்ளே வந்துள்ளதா?

மேலும் மொழியைப் பொறுத்த மட்டிலே பள்ளிக்கு வருவதற்கு முன்பே பிள்ளைகள், கதை கேட்க ஆரம்பித்து விடுகிறார்கள். பாட்டுப் பாட ஆரம்பித்து விடுகிறார்கள், இது போன்ற குழந்தைகளுக்குச் செய்ய தெரிந்த விசயங்களை வளர்த்தெடுக்கிற முறையிலே நாம் போதித்திருக்கிறோமா? இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். குறிப்பாக, குழந்தைகளுக்கு மிக எளிதாகப் பிடிபடும் இசையுடன் கூடிய மொழியை நாம் பயிற்றுவிப்பதில்லை. எனக்கு 'அ' னா கற்றுக்கொடுத்த போது ராகம் போட்டுத்தான் சொல்லித் தந்தார்கள். பன்னிரெண்டு உயிர் எழுத்துக்களையும் பாடலாக அவர்கள் கற்றுத் தருகிற போது அதுவா வரிசை மாறாது. ஒரு திரைப்படப் பாடலைத் கற்கிற குழந்தை கிட்டத்தட்ட அறுபது - எழுபது சொற்கள் அடங்கிய பத்து வரிகளை அப்படியே சொல்கிறது. ஆனால் அனா, ஆவன்னாவைச் சொல்லச் சொன்னால் அது குழம்புகிறது. ஏன்?

இசையோடு அந்த விஷயத்தைக் கற்பிக்க வேண்டும். நம்முடைய மொழிக்கும் இசைக்கும் உரிய முக்கியமான விசயம் என்னவென்று கேட்டால்.

இந்த மொழியுடைய ஒலித்திரள்கள் இசையோடு கட்டமைக்கப்பட்டவை. மூன்று மாத்திரை அளவில் தமிழிலே ஒரு எழுத்து கிடையாது என்பது இந்த இசைத் தமிழினுடைய அடிப்படை. 'அ' ஒரு மாத்திரை 'ஆ' வன்னா இரண்டு மாத்திரை 'ஆ...' என்று நீட்டிச் சொல்லிவிட்டால். அங்கே மொழி இசைபடுகிறது என்று சொல்கிறார்கள். தமிழ் இலக்கணிகள் 'ம்ம்ம்...' என் சொன்னால் அது இயல் தமிழ் அல்ல. இசைத் தமிழின் கூறு சேர்ந்து விடுகிறது என்கிறார்கள்.

மனித உடம்பும் மனித நரம்பும் மனித உயிர்ப்பும் இசையோடு பின்னப்பட்டதனாலேயே இசையில்லாமல் 'அ, ஆ இ, ஈ. என்று கற்றுக்கொடுக்கிற போது ஒலித் திரள்களைக் கற்றுக்கொள்ள இயலாத நிலைக்குக் குழந்தை போகிறது. அது மட்டுமன்று. பாரம்பரியமான மனித உடம்போடும் உயிரோடும் பின்னப்பட்ட இசை உணர்வையும் அது இழந்து போய்விடுகிறது. இந்த நுட்பமான வேர்களைக் குழந்தைகளின் மனதிலிருந்து நாம் அறுத்து விடுகிறோம்.

நான் தொடக்கப் பள்ளியில் படித்து இத்தனை ஆண்டுகள் ஆனாலும் அந்தப் பாடங்களை என்னால் சொல்ல முடியும். அதே போல எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஐந்தாம் வகுப்பிலே வியாகப்பன் என்றொரு ஆசிரியர் இருந்தார். முக்கூடற்பள்ளிலே உள்ள பாட்டைச் சொல்லித் தருவார்.

ஆற்றுவெள்ளம் நாளை வரத் தோற்றுதே குறி
மலையாள மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுதே
நேற்றும் இன்றும் கொம்புசுற்றிக் காற்றடிக்குதே கேணி
நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே.

இந்தப் பாட்டுக்குள்ளே என்ன இருக்கிறது? உங்கள் மண் சார்ந்த. குறிப்பாக நெல்லை மண் சார்ந்த (அந்த இலக்கியம் இங்கே பிறந்தது) 'ஈகோ சிஸ்டம்' என்ன என்பதைக் கற்றுத் தருகிறது.

நம்மையறியாமலேயே உணவு சாப்பிடுகிற போது எப்படி நாம் நம் உயிருக்குத் தேவையான ஒன்றைச் சாப்பிடுகிறோம் என்ற தன்னுணர்வு இல்லாமலே சாப்பிடுகிறோமோ. அதுபோல இந்தப் பாட்டைக்

கற்கிற போது இந்த மண்ணினுடைய ' ஈகோ சிஸ்டம் என்ன?' இந்த மண்ணின் பருவ காலம் எப்படி அமையும்? நாளை மழை வரும் என்றால் இன்றைக்கு 'ஈகோ சிஸ்டம் ' என்னவாக இருக்கும்? கிணற்றில் தவளைக் கூப்பிடும். மேலும் .

சேற்றில் நண்டு சேற்றில் வளை ஏற்றடைக்குதே
மழைதேடி ஒரு கோடிவானம் பாடி ஆடுதே

என்று வரும்.

இன்றைக்கும் அதுதான். இங்கே பாரம்பரியமான தொழில்நுட்ப அறிவு புதைந்து கிடக்கிறது. அதாவது, செய்து செய்து பழக்கப்பட்டு, மண்ணிலிருந்தும் பிற உயிர்களிலிருந்தும் தாவரங்களிலிருந்தும் நாம் பெறக் கூடியது இந்த அறிவுத் தொகுதி. இது சின்னக் குழந்தைக்கு ஏதேனும் ஒரு வகையில் தரப்படவேண்டும். பாட்டாகவோ விளையாட்டாகவோ எப்படியோ இது அவர்களைப் போய்ச் சேர வேண்டும்.

கேள்வி: நமது மொழிக்குரிய கூட்டு அனுபவத்தின் சாரத்தைக் குழந்தைகளுக்கு வழங்கவேண்டும் என்று சொல்கிறீர்கள். அப்படித்தானே.

பதில்: ஆமாம். குழந்தைகளின் அனுபவ உலகம் இன்று சுருங்கிக் கொண்டே வருகிறது. இதனை விரிவுப்படுத்த பல நிலைகளில் செயல்பட வேண்டும். மொழிப்பாடம். வகுப்பறையில் மட்டும் நடைபெறவேண்டியதில்லை. என்னுடைய மாணவர் வே.சங்கர்ராம் சங்கரன்கோவிலிலே தாய்த்தமிழ்ப் பள்ளி நடத்துகிறார். அந்தப் பள்ளியிலே வகுப்பறையும் விளையாட்டுத்திடலும் மட்டும் கல்விக்குரியதல்ல. குழந்தைகளைக் கிராமங்களுக்கு அழைத்துப் போகிறார்கள். ஒரு முறை பயணமாகக் குழந்தைகளை சுமார் பத்து கிலோமீட்டர் வேனில் அழைத்துச் செல்கிறார்கள். ஒரு தடவை போய் வருகின்ற போது, குழந்தைகள் துளசிச்செடியைப் பார்க்கிறார்கள். குத்துச் செடியைப் பார்க்கிறார்கள் எது புல் என்று தெரிகிறது. எது மேடு என்று தெரிகிறது. எது வரப்பு என்று தெரிகிறது.

அந்த ஒரு மணிநேர அனுபவத்திலே நிறையச் சொற்களைக் குழந்தைகள் கற்றுக் கொள்கிறார்கள். காரணம். மொழிக்கல்வி என்பது வெறும் ஒலித்திரள்களின் கல்வி அன்று. அது குழந்தைகளின் அனுபவ உலகம் சார்ந்த விசயம். குழந்தைகளின் அனுபவ உலகம் விரிவுபடும் போது மொழிக்கல்வியும் விரிவடைகிறது.

குழந்தைகளது அனுபவ உலகம் பயணங்கள் போதுதான் மிகப் பெரிய அளவில் விரிவடைகிறது. என்றாலும் வேறு வகைகளிலும் இதைச் செய்யலாம், அடுத்த சமூகத்திலே. அடுத்த பொருளாதாரத் தளத்திலே உள்ள குழந்தைகளுடன் உறவாடச் செய்வதன் மூலம் குழந்தையின் அனுபவ உலகம் ஆழமடையும். சென்னை நகரத்துக் குழந்தைகள், சங்கரன்கோவில் குழந்தைகளோடு இரண்டு ஆட்டம் கபடி ஆடினால் சில புதுச் சொற்களைக் கற்றுக்கொள்வார்கள்.

கேள்வி: நடைமுறையில் இது சாத்தியப்படுமா என்பதையும் நாம் ஆராய வேண்டும்.

பதில்: வட்டார வேறுபாடுகளோடு சேர்ந்த ஒரு மொழிக்கல்வியின் மூலமாக இதைச் செய்யலாம். குழந்தைகளுக்குப் பல்வேறுவிதமான வாழ்க்கை முறைகளை அறிமுகப்படுத்த இது உதவும். ஆனால் வழக்கிலுள்ள கல்வி இவ்வாறு இல்லை. என்னுடைய பாடப்புத்தகத்திலே 'கிணறு' என்று இருக்கும். வட மாவட்டக் குழந்தைகள் இந்தச் சொல்லைக் கேட்டுத் திணறியிருப்பார்கள் என்பது இப்போது எனக்குத் தெரிகிறது. ஏனென்றால் அங்கே கேணி என்ற சொல்தான் உண்டு. கிணறு என்ற சொல் கிடையாது. மதுரை தாண்டி திண்டுக்கல் பக்கம் போகும் போதுதான் கிணறு, கேணி என்ற இரு சொற்களும் இருக்கின்றன. இரண்டிற்கும் நுட்பமான வேறுபாடு உண்டு. பொருள் வேறுபாடு இல்லாமல் ஒரு சொல் தோன்றாது. இந்த வேறுபாட்டைக் குழந்தைகள் அறிவது அவசியம்.

இதை இப்படிச் செய்யலாம். பள்ளிக்கூடம் எந்த மாவட்டத்தில் உள்ளதோ அந்தப் பகுதிக்குரிய மொழியை முதலில் அறிமுகப்படுத்தலாம். பிறகு பிற பகுதிகளுக்குரிய சொற்களைக் கற்பிக்கலாம். உதாரணமாக, கோவை மாவட்டம் என்றால், பருத்தி. ஈரப்பதம் உள்ள காற்று போன்றவற்றுடன் தொடர்புடைய சொற்களை அறிமுகப்படுத்திய பிறகுதான் அந்தக் குழந்தைக்கு மதுரை பக்கச் சொற்கள் பற்றிய அறிமுகம் வேண்டும்.

கேள்வி: வழக்காறுகளானக் கதைகள், பாட்டுக்கள், விடுகதைகள். பழமொழிகள் மூலம் வேறுபட்ட அனுபவங்களையும் அவற்றுக்குரிய சொற்களையும் அறிமுகப்படுத்தலாமா?

பதில்: மொத்தத்தில் வட்டார வேறுபாடுகளை உள்ளடக்கிய ஒரு மொழிக்கல்வி அவசியம். ஏனென்றால், அந்த வட்டாரம் இல்லாமல் அந்த மனிதன் இல்லை. வட்டார வேறுபாடுகளை முற்றாக நிராகரிக்கும் ஒரு பொதுமொழியைக் கற்கும் நிலைமை பள்ளிக் குழந்தைகளுக்கு வரக்கூடாது.

கேள்வி: வட்டார வழக்குகளில் சாதி அதிகாரமும், சமயக்கூறுகளும். பால்நிலை வேறுபாடுகளும் மிக இயல்பாக இடம் பெற்றிருக்கின்றனவே?

பதில்: நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதிகாரம் சார்ந்து அல்லது சுரண்டல், சார்ந்து வருகின்ற சொற்களைக் கட்டாயம் அந்நியப்படுத்த வேண்டும். ஆனால் சாதி வழக்குகளில் இவை மட்டுமே இல்லை. தொழில் சார்ந்த அறிவும் அவற்றில் பொதிந்துள்ளது. குழந்தைகள் இந்த அறிவை மிக இயல்பாகவே தமதாக்கிக் கொள்கின்றனர். ஒரு தச்சர் வீட்டுக் குழந்தை, படிக்க வரும்போது அந்தக் குழந்தைக்குத் தச்சுவேலை செய்கிற கருவிகளுடைய வகைப்பாடும் அவற்றினுடைய பெயர்களும் தெரிந்திருக்கும். இது சுத்தியல். இது ஆப்பு, இது ஆப்புக்கு வைக்கிற உளி, ஆப்புளி, இது கொட்டாபுளி, இது இழைப்பு என்று இந்த மாதிரியான கருவி அறிமுகமும் அவற்றினுடைய பெயர் அறிமுகமும் அவற்றினுடைய பயன்பாடும் அக்குழந்தைக்குத் தெரிந்திருக்கும். உழவர் வீட்டுக் குழந்தைக்கு உழவு சார்ந்த சொற்களும் அந்தக் கருவிகளின் பெயர்களும் தெரிந்திருக்கும். இவ்வாறாக உழைப்பு தொடர்பான, குழந்தைகள் ஏற்கனவே பெற்றுள்ள சொற்தொகையை நாம் கைவிட வேண்டியதில்லை.

பால் வேறுபாடுகளைப் பொறுத்தவரை இவ்வேறுபாடுகள் காட்டாத சொற்களைத் தொடர்ந்து பயன்படுத்துவது அவசியம். பெண்கள் கல்லூரி முதல்வரை 'முதல்வர்' என்றுதான் சொல்கிறோம். தொடக்கத்திலேயே அந்தச் சொல்லைப் பழக்கத்திற்குக் கொண்டுவந்துவிட்டோம். ஏன் என்றால், முதல்வி என்று சொன்னால், அது அவ்வளவு நன்றாக இல்லை. பேராசிரியை என்று சொல்வதே எனக்கே உடன்பாடில்லை. பேராசிரியர் என்று பால்காட்டாச் சொல்லாகத்தான் அதைப் பயன்படுத்த வேண்டும்.

கேள்வி: மொழிக்கல்வியில் வேறு சில பிரச்சினைகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட சமுதாயங்களுக்குரிய மொழியைக் 'கொச்சை' என்று சொல்லி புறந்தள்ளி விடுகிறோம். அச்சமுதாயங்களைச் சேர்ந்த குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் பேசத்தயங்குவதையும். ஆசிரியர்கள் அவர்கள் பேசும் மொழியைப் பழிப்பதையும் கல்வி ஆய்வாளர்களில் சிலர் சுட்டிக் காட்டியுள்ளனர்...

பதில்: நம்முடைய பழைய இலக்கணங்களில் இவ்வாறு சொல்வதற்கான ஆதாரங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. தொல்காப்பியரை எடுத்துக் கொள்வோம். மொழிக்கு அதிகாரி மக்கள் என்பதிலே ரொம்ப அழுத்தமான கருத்துடையவர். அவர் எடுத்துக்காட்டாக, பெயர்ச்சொற்களை வகைப்படுத்து கின்றபோது, ஒரு இடத்திலே சொல்கின்றார். 'கூடிவரும் வழக்கின் ஆடியது பெயர்' என்கிறார். இது

என்னவென்றுகேட்டால்,பிள்ளைகள்விளையாடுகின்ற போது அணிகளுக்குப் பெயர் இட்டுக் கொள்வார்கள் அல்லவா? இதையும் கணக்கிலே சேர்க்க வேண்டும் என்பது தொல்காப்பியர் கூற்று. நேரு அணி. காந்தி அணி, வள்ளுவர் அணி. என பள்ளிக்கூடத்திலே பிரித்துக் காட்டுவார்கள் அல்லவா? அதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிறார்.

தொல்காப்பியர் தெளிவாக, முதன்மை தர வேண்டியது வழக்கு மொழிக்குத்தான், பேச்சு மொழிக்குத்தான் என்கிறார். எனவே, மக்கள் மொழி என்பது அம்மக்களது சமுதாய நிலை என்னவாக இருந்தாலும் முதலானது. மேலும் பேச்சு மொழியிலிருந்துதான் எழுத்து மரபு கிடைத்தது. பேச்சு மொழியிலே ஒரு இலக்கணம் உண்டு. அந்த இலக்கணம்தான் எழுத்து மொழிக்குக் கொண்டு போகப்பட்டதே தவிர, எழுத்துமொழியின் இலக்கணம் பேச்சு மொழிக்குக் கொண்டு போகப்படவில்லை. எனவே பேசுகிற மனிதனே மொழிக்கு அதிகாரி. ஆசிரியர்களோ இலக்கண ஆசிரியர்களோ அல்ல. இன்னும் சொல்லப்போனால். இலக்கண மரபு என்பது உங்களுடைய உடம்பிற்குள்ளாக உங்களுடைய மூளைக்குள்ளாக இருக்கிறது. அதுதான் கொஞ்சம் திருந்திய வடிவத்திலே எழுத்தில் இருக்கிறது.

கேள்வி: தொடர்ந்து மாற்றங்களுக்கு உள்ளாகும் பேச்சு மொழிதான் ஒரு மொழியின் வளர்ச்சிக்கு. பண்புக்கு ஆதாரம் என்றால் இரண்டாயிரம் ஆண்டு பாரம்பரியமிக்க தமிழ்மொழியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை எவ்வாறு புரிந்துக்கொள்வது?

பதில்: ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் என்பதே கிடையாது. ஒரு சொல்லுக்குக் காலம் தோறும் அனுபவம் சார்ந்து பொருள்கள் விரிவடைந்து கொண்டே வரும். இது ஒருபுறம். மறுபுறமாகச் சொல்லை எந்தச் சூழலில் பயன்படுத்துகிறீர்களோ, அந்தச் சூழலில் அதற்குப் பொருள் வேறுபடும். 'இந்தக் கடிதத்தை இரண்டு

படிகள் எடு' என்று சொன்னால், 'இரண்டு படி அரிசி அளந்து போடு' என்று சொன்னால், 'ஒழுங்காகப் படி' என்று சொன்னால். படி என்ற ப்+அ+ட்+இ என்ற நான்கு ஒலிகளையும் சேர்த்து சூழலுக்குத் தகுந்தாற் போல அனுபவத்திற்குத் தகுந்தாற் போல பொருள் வேறுபாட்டை விரித்துக்கொண்டே வருகிறோம். தாய்மொழியைத் தன்னுணர்ச்சியோடு நாம் பயன்படுத்துவது இல்லை. அந்தத் தன்னுணர்ச்சியைப் பெற்றால் மொழிஅறிவு வரும். சொல்லுக்கானப் பொருள் மாறிக்கொண்டே வருவதற்கு ஓர் உதாரணம் சொல்லட்டுமா?

கறி என்ற சொல் இன்றைக்குப் பொதுவாக இறைச்சியைக் குறிக்கின்ற ஒரு சொல் ஆட்டுக்கறி, மாட்டுக்கறி, கோழிக்கறி, என்பதாக. ஆனால் கறி என்ற சொல்லுக்கு முதற் பொருள் மிளகு என்பதாகும். பிறகு மிளகை உரித்த வெள்ளை மிளகு செய்தபோது இதைக் கருங்கறி என்று சொன்னார்கள். அன்றைக்கு உறைப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட பொருள் மிளகு என்பதனாலேயே கறியிட்டுச் செய்கின்ற பொருட்கள் எல்லாம் கறி என்று வந்தன. பிறகு, குழம்புக்குக் கறி என பெயர் வந்தது. உங்க வீட்டுல இன்னிக்கு என்ன கறி? என்று சொன்னால் 'என்ன காயிட்டு குழம்பு? என்று பொருள். பிறகு. காயோடு சேர்த்து காயும் கறியும் இட்டுச் சமைப்பதினாலே அல்லது கறியோடு இட்டுக் காயையும் சமைப்பதினாலே அதற்கு காய்கறி என்று பெயர் வந்தது. பிறகு துணையாக வைத்துக் கொள்ளக் கூடிய கூட்டுக்களை எல்லாம் தொடுகறி என்று முன்னடையிட்டுச் சொன்னார்கள்.

நீங்கள் மறந்துவிடக் கூடாது. இந்த காய்கறியிலே கீரை அடங்காது. ரசம் சேராது. எது காய்கறி என்பதற்கு ஒரு வரையறை இருக்கிறது. எங்கே காய் இருக்கிறதோ அதற்குத்தான் காய்கறி என்று பெயர். பிறகு, மிளகிட்டுச் செய்யக்கூடிய அதிக உறைப்பு தேவைப்படுகிற புலால் உணவுக்குக் கறி என்ற பெயர் வருகிறது. அப்புறம் புலால் துண்டுகளுக்கே கறி என்ற பெயர் வருகிறது. காரணம் உறைப்புக்கு வேறு

சொல் கிடைத்து விட்டதுதான். உறைப்பிற்கான இன்னொரு தாவரம் பதிமூன்றாம் நூற்றாண்டிலே வெளி நாடுகளிலே இருந்து அறிமுகமாகிறது. அது மிளகு போல் இருந்ததனாலே, அதை காயவைத்த வற்றலாக்கித்தான் பயன்படுத்த முடியும் என்பதாலே, அதற்கு மிளகாய் வற்றல் என்றும், மிளகாய் என்றும் பெயரிட்டார்கள். அதை மிளகினுடைய ஒரு மாற்று வடிவமாகக் கொண்டார்கள். அதற்கு மிளகாய் என்றும் மிளகாய் வற்றல் என்றும் பிறந்த தேசத்திலே பெயர் இருக்க முடியாது. மிளகு போல உறைப்புடையது, காயாக இருக்கிறது. என்பதினாலே மிளகாய் என்று சொல்ல ஆரம்பித்தார்கள். இப்படித்தான் சொல்லும் பொருளும் அனுபவங்களும் மாறிக் கொண்டே வருகின்றன.

கேள்வி: *இந்த மாற்றங்களுள் மொழிக்கலப்பும் அடங்கும் அல்லவா?*

பதில்: மொழிக்கலப்புகள் எல்லாம் ஒரே மாதிரியானவையல்ல. அரசதிகாரம் சார்ந்து எழுத்திலக்கியம் சார்ந்து வந்த மொழிக்கலப்புகள் எல்லாம் பெரும்பாலும் வடமொழி வழியாக வந்தவை. கிறிஸ்தவம் சார்ந்தும் இஸ்லாம் சார்ந்தும் வந்த மொழிக்கலப்புகள் எல்லாம் மக்கள் தரப்பிலிருந்து வந்தவை. 'குஷ்கா' என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். புலால் சேர்ந்த நெய்ச்சோறுக்கு குஷ்கா என்று பெயர். இது மக்கள் வழியாகப் பரவிய சொல். இன்னிக்கு குஷ்கா என்ற சொல் எல்லாருக்கும் தெரியும். பாளையங்கோட்டையில் 'ஒசிசி என்றால் எல்லாருக்கும் தெரியும். இதற்கு அப்பம் என்று பொருள் இது கிறிஸ்தவம் சார்ந்து வழங்குகின்ற சொல். அதுபோல் சொல்லுக்குக் கலாச்சார ரீதியான சில முத்திரைகளும் உண்டு. ஆண்டவர் என்பதும் கர்த்தர் என்பதும் பொதுச் சொல்தான். ஆனாலும் இச்சொற்கள் கிறிஸ்தவப் பின்னணியோடுதான் அறியப்படுகின்றன. அது வாழ்தலின் அனுபவம். ஆண்டவர் என்ற சொல்லை இஸ்லாம் பாவிக்கும்.

உதாரணத்துக்கு நாகூர் ஆண்டவர். கர்த்தர் என்றோ இறைவன் என்றோ இஸ்லாமியர்கள் வழக்கமாகச் சொல்ல மாட்டார்கள்.

இஸ்லாம் அதிகமாகப் பயன்படுத்துகிற சொல் மரியாதைக்குரிய சொல் 'அப்பா'. 'அவர்கள்' என்பதற்குப் பதிலாக 'அப்பா' என்றசொல்லைப்பயன்படுத்துவார்கள். பீர் அப்பா. தக்கலை பீர் அப்பா. உமறுப் புலவரையே 'உமர் அப்பா' என்று எழுதுவார்கள். இது இந்த மொழிக்குள்ளிருந்து அவர்கள் எடுத்துக்கொண்ட சொல். அவர்கள் திருமணப் பத்திரிக்கையில் மணாளன், மணாளினி என்று இருக்கும். இதெல்லாம் இஸ்லாம், கிறிஸ்தவம் சார்ந்து வருகின்ற சொற்கள். அவர்களே தங்கள் புதுசமயத்திற்காக ஆக்கிக் கொண்ட சொற்கள். கோயில் என்பதற்கு மாற்றுச் சொல்லாக, தேவாலயம் என்ற சொல்லைக் கைக்கொண்டனர். அதேபோல் வழிபடும் இடத்தை இஸ்லாமியர்கள் 'மஸ்ஜித்' என்ற சொல்லாலே சொல்லவில்லை. பள்ளிவாசல் என்ற சொல்லைக் கைக்கொண்டனர். எல்லாப் பள்ளிவாசல்களிலும் குழந்தைக்கு ஐந்து கலிமாவையும் ஓதக் கற்றுக்கொடுக்கின்ற ஓர் ஆள் உட்கார்ந்து கொண்டிருப்பார். இதனால்தான் அதற்குப் 'பள்ளி' என்றே பெயர் வந்தது. கற்றுக் கொடுக்கிற இடம் பள்ளி. இது பழைய சமண - பௌத்த மரபில் இருந்து வந்தது. இதெல்லாம் மக்கட் சமூகத்தின் அனுபவங்கள். இச்சொற்களில் எல்லாம் அதிகாரம் இல்லை. இவை போக அதிகாரம் சார்ந்த சொற்களும் தமிழுக்குள் வந்துள்ளன. 'தாசில்தார், கிஸ்தி என்பன எழுத்து மரபு சார்ந்து, அதிகாரம் சார்ந்து அரசாங்கத்தின் மூலமாக வருகின்ற சொற்கள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகள்.

கேள்வி: எனவே தூய தமிழ் என்று எதுவும் கிடையாது.

பதில்: மொழித் தூய்மை என்பது எப்படி ஒருவனை அழுக்கான மனிதன் என்று புறந்தள்ளுகிறோமோ அப்படித்தான் தூய்மையற்ற மொழி என்று ஒரு மொழியைத் தள்ளுவது. மொழித் தூய்மை என்பது ஒலியிலே காட்ட

வேண்டிய தூய்மையா? இலக்கண அமைப்பிலே காட்ட வேண்டியதா? இல்லை. பிற மொழிச் சொற்களை ஏற்கிறபோது காட்ட வேண்டியதா? தூய்மைவாதம் எல்லாமே ஒரு எல்லைக்கு மேலே பாசிசமாகத்தான் முடியும். அது இனத்தூய்மை வாதமாக இருந்தாலும் சரிதான். ஆகவே அந்தச் சொல்லை அப்படிச் சொல்லாமல் முடிந்த மட்டுக்கும்.' இயன்ற வரையிலும் தாய்மொழியில் என்பதே அறமாக இருக்கும்.

அதே சமயம் தாய்மொழி என்பது மாறாத் தன்மையுடையதல்ல என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.புதியவரவுகளை உள்வாங்கிக்கொள்வதாலேயே மொழி வளர்கிறது. நான் ஏற்கனவே சொன்னதுபோல் தொல்காப்பியரே இதை ஆதரிக்கிறார். உரிச் சொற்களை எடுத்துக் கொள்வோம். தொல்காப்பியர் சொன்ன மிகுதியை உணர்த்தும் உரிச் சொற்கள் எல்லாம் செத்துப்போய் விட்டன. வழக்கிலே ஒரே ஒரு சொல் மட்டும் மிஞ்சி இருக்கிறதாம். சில இடங்களிலே 'இளம்பிஞ்சு' என நாம் சொல்வதைத் 'தவப்பிஞ்சு' என்று சொல்கிறார்களாம். அந்த 'தவ' மட்டும் சில இடங்களிலே இருக்கிறது. ஆனால், புதுமாதிரியான இதே போன்ற சொற்கள் வந்திருக்கின்றன. 'செம' என்று பிள்ளைகள் ஒரு வார்த்தையைச் சொல்கிறார்கள். இந்த 'செம' என்பது 'சுமை' என்பதின் மாற்று வடிவம். சுமை என்பது மிகுதியை உணர்த்துவது. உரிச்சொல் அல்ல. ஆனால் இங்கு அது உரிச்சொல்லாகி விட்டது. 'தூள்' என்றொரு சொல், 'படம் தூளாக இருந்தது' என்கிறான். நன்றாக இருந்தது என்பதல்ல இதன் பொருள் 'ரொம்ப ரொம்ப நன்றாக இருந்தது. என்பதைச் சொல்லத்தான் அவன் இவ்வாறு சொல்கிறான். 'தூள்' நிகழ்காலத்திலே பிறந்திருக்கிற ஓர் உரிச் சொல். இவை போன்ற சொற்களை நமது மொழிக்குரியவையாக நாம் பாவிக்க வேண்டும். 'சூப்பர் இந்தச்சொல்லை நீங்கள் ஆங்கிலச் சொல்லாகக் கணக்கில் எடுக்கக்கூடாது. இதை ஒலித்திரளாக எடுத்துக்கொண்டு. இது உணர்த்தும் பொருளை எடுத்துக்கொண்டால் இது மிகுதிப் பொருளை உணர்த்தும் ஓர் உரிச்சொல். அதைத்தான் நீங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். அதனால்,

'மொழி மாறும் தன்மையுடையது. மாறுவதனால்தான் அது உயிரோடு இருக்கின்றது.' என்பதை நாம் மொழிப்பாடத்துக்கான அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

கேள்வி: குறிப்பிட்ட வேற்று மொழிச்சொல்லைத் தமிழ்ப்படுத்துவதைப் பற்றி சொல்லுங்களேன். உதாரணமாக, பென்சிலைக் 'கரித்துண்டு' சாவியைத் 'திறவுகோல்' சாக்பீசை 'சுண்ணாம்புக்கட்டி', என ஏன் சொல்ல வேண்டும்?

பதில்: பிறமொழிச் சொல்லுக்கான தமிழ்ச்சொல் குழந்தைக்குப் புரிகிறதா என்பதுதான் கேள்வி. 'திறவு" என்ற சொல் செயற்கையானது என்றாலும் குழந்தைக்குப் புரிகிறது. ஏன் புரிகிறது என்றால் 'கதவைத் திற' என்று வினைவடிவமாக நீங்கள் சொல்கிறபோதும் 'கோயில் நடை திறந்தாச்சா? என்று கேட்கும் போதும் 'திறத்தல்' என்கிற வினைவடிவத்தைக் குழந்தைக்கு அறிமுகம் செய்கிறீர்கள். எனவே 'திறப்பதற்குரியது' என்ற அளவிலே 'திறவு' என்ற பெயர்ச்சொல்லைக் குழந்தைகள் எளிதாகப் புரிந்து கொள்கிறார்கள். மேலும். கதவைத் திறக்க உதவுகிற அந்த சாவியினைக் குழந்தைகள் பார்த்திருப்பார்கள், பயன்படுத்தியிருக்கிறார்கள். எனவே, திறவு என்பது அவர்களுக்குச் சிக்கல் இல்லை. அனுபவ எல்லைக்கு உள்ளாக, திரும்பவும் சொல்கிறேன். குழந்தைகளின் அனுபவ எல்லைக்கு உள்ளாக அவர்களுக்குத் தெரிந்த மொழி எல்லைக்கு உள்ளாக ஆங்கிலச் சொல்லிற்கு மாற்றாக ஒரு புதுச்சொல்லைக் கற்றுக் கொடுப்பதில் சிக்கல் இல்லை.

சில சமயங்களில் புதிய அனுபவங்களை அறிமுகப்படுத்தி புதுச் சொற்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கும். காப்பிக்குக் 'குளம்பி' என்ற ஒரு சொல்லைக் கொடுக்கும் போது என்ன செய்ய வேண்டுமென்றால், 'குதிரையின் குளம்புபோல காப்பிக்கொட்டை இருக்கிறது பார்' என்று காப்பிக்

கொட்டையை எடுத்து குழந்தைக்குக் காட்ட வேண்டும். பொருள் பற்றிய அனுபவத்தைக் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு, வெறும் ஒலிபற்றிய, சொல்பற்றிய அனுபவங்களைக் குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடாது. பொருள் பற்றிய அனுபவம் குழந்தைகளுக்கு வேண்டும்.

கேள்வி: தற்கால தமிழைப் பொறுத்தவரை வரலாற்று அனுபவங்கள் முக்கியமானவையாக இருந்துள்ளன. அதாவது தற்காலத் தமிழின் தன்மையை உட்கூறுகளை மாற்றியமைத்த நிகழ்ச்சிப் போக்குகள் யாவை?

பதில்: தற்காலத்தமிழைப் பொறுத்த வரை திராவிட இயக்கத்தின் செயல்பாடுகள் முக்கியமானவை. காலங்காலமாகப் பேச்சுரிமை மறுக்கப்பட்டவர்கள் பேச வந்தார்கள். முதல்முறையாக எழுத்தைக் கற்றுக் கொண்டவர்கள் பேச வந்தார்கள். அவர்களுக்கு ஏற்கனவே சொல்தொகுதி ரொம்ப அதிகம். காங்கிரஸ் இயக்கத்தில் இருந்து கொண்டு தற்கால அரசியல் சூழலுக்கு உகந்த வகையில் தமிழைக் கையாண்டவர்கள் வரதராஜுலு நாயுடு, திரு.வி.க. பெரியார் ஆகியோர் முக்கியமானவர்கள். இதில் பெரியார் பேச்சு சற்று வேறுபட்டிருக்கும். ஏனென்றால். அவர் முறையான பள்ளிக் கல்வியோ, இலக்கியக் கல்வியோ பெற்றவர் அல்லர். அவருக்குக் கடைசி வரைக்கும் 'காய்ச்சல்' என்று சொல்ல வராது. 'காயலா' என்றுதான் சொல்லுவார். அவருடைய எழுத்துமொழியிலே கூட 'காயலா' என்ற சொல்தான் இருக்கும். காய்ச்சல் என்ற சொல் இருக்காது.

அவரைப் பின்பற்றி வந்தவர்களில் பலர் மேலோர் மரபிலே பேசாமல், வழக்காறுகளைப் பயன்படுத்தினார்கள். இவர்களது வழித்தோன்றல்களாக வந்தவர்கள் திராவிட முன்னேற்றகழகத்தின் முன்னணிப் பேச்சாளர்களாகக் கருதப்பட்ட பலர் கதையில்லாமல், பழமொழிகளைக் கையாளாமல் பேசமாட்டார்கள். அவர்களுடைய பேச்சுகளில் வழக்குச் சொற்கள் நிறைய

இருக்கும். எனவே வழக்கு மொழிக்கான மரியாதை, பேச்சு மொழிக்கான மரியாதை, பேச்சு மொழி மட்டுமே அறிந்தவர்களுக்கான சமூக அங்கீகாரம் போன்றவை இவர்களுடைய மொழி மூலமாக வந்தது. விலக்கப்பட்ட சொற்கள் என்பனவற்றை எல்லாம் ஒரு கலக மரபோடு பெரியார் உடைத்தார். அந்தக் கலக மரபு அவருக்கு பின்னால் வந்த எல்லோரிடமும் இல்லை. என்றாலும் கூட, அதுவரையிலே மேடையில் விலக்கப்பட்ட சொற்களை இவர்களால்தான் சொல்ல முடிந்தது.

ஒருவிதத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே இந்தப் போக்குத் தொடங்கி விட்டதாகச் சொல்லலாம். உதாரணத்துக்கு 'ஒழிக' என்ற சொல்லை வள்ளலார் கவிதையிலே பயன்படுத்துகிறார். 'கருணையிலா ஆட்சி கடிந்து ஒழிக' என்கிறார். வள்ளலார் காலத்துக்குப் பின்னால் ஏற்பட்ட சமுக, அரசியல் மாற்றங்களின் விளைவாகத் தோன்றிய திராவிட இயக்கம் இத்தகைய போக்கை எதிரொலித்தது. அவ்வியக்கம் ஏற்படுத்திய வழக்குமொழிக்கான அங்கீகாரம் அது சாதித்த அதிகார மாற்றத்திற்கு அடிகோலியது.

கேள்வி: ஆனால், இந்த பாதூரமான மாற்றமானது பாடநூல்களில் எதிரொலித்ததாகத் தெரியவில்லை?

பதில்: இல்லை. காரணம், பாடநூல்கள் எல்லாம் வெள்ளைக்காரன் ஆட்சியிலேயே நிலைபெற்று விட்டன. ஒரு வித உறைநிலைக்கு வந்துவிட்டன. அதற்குப் பிறகு பாடத்திட்டத்திலே வந்த மொழிமாற்றம் என்பது மிகக் குறைவுதான். சொல்லப்போனால் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் களையெடுப்பு என்பதைப் பற்றியே அதிகம் சிந்தித்தார்கள். பயிர்வளர்ப்பைப் பற்றி பேசவில்லை. களையெடுப்பு என்பது பயிர்வளர்ப்பின் ஒரு அம்சம்தானே தவிர. பயிர்வளர்ப்பதன் மற்ற அம்சங்களைப் பற்றிப் அவர்கள் யோசிக்கவில்லை. ஏனென்றால். அவர்களின் நோக்கம் அரசியல் அதிகாரம்.

கேள்வி: இன்றைய சூழலுக்குரிய மொழிக் கல்வி எப்படி இருக்க வேண்டும். என்று நினைக்கிறீர்கள்.

பதில்: சமூகச் சூழலோடு இணைந்த மொழிக்கல்வி நமக்குத் தேவை. சூழல் என்பதைக் கருப்பொருள் உரிப்பொருள் என்பதுடன் இணைத்துப் பார்க்க வேண்டும். சூழல் என்றாலே நாம் ஏற்றத்தாழ்வான சாதிய, வர்க்க சூழலைத்தான் நினைவு கொள்கிறோம். ஆனால், கரு மற்றும் உரிப்பொருள் சார்ந்த அனுபவம்தான் குறிப்பிட்ட சூழலுக்கான தன்மையை வழங்குகின்றனவே தவிர சாதி இல்லை. சங்கரன்கோயில் சார்ந்த எல்லாரும் தினைப்பயிரைப் பார்த்திருப்பார்கள். அது எப்படியிருக்கும் என்று திருநெல்வேலி ஆளுக்குத் தெரியாமல் இருக்கலாம். போத்திராஜா என்றால் இங்கு இருப்போர்க்கு தெரியாது. ஆனால் இதைக்கேட்ட உடனே திருவண்ணாமலை மாவட்டக் குழந்தைகளுக்கு அந்தப் பெரிய வயிறும் அந்த உருவமும் நினைவுக்கு வருகிறது இல்லையா? இங்கே சுடலைமாடன் என்றால்தான் தெரியும்.

நிலவியல் அமைப்பும் உயிரும் பயிரும் இவையோடு தொடர்புடைய பண்பாடும்தான் சூழலை உருவாக்குகின்றன. இவற்றோடு இணைக்கப்பட்ட மொழிக்கல்வி நமக்குத் தேவை. வட்டாரரீதியாக இதை உருவாக்கலாம். அல்லது வட்டார வழக்குகளின் தன்மையுடன் கூடிய பொது மொழியைக் கொண்டு இதைச் செய்யலாம்.

✧

அரசு வெளியீடான 'பிள்ளைத்தமிழ்' நூலில்
இடம்பெற்ற நேர்காணல் கட்டுரை
சந்திப்பு: வசீதா, கோ.பழனி

9

காஞ்சி மடமும் கைதான மடாதிபதியும்

சுப்பிரமணி என்கிற ஜெயேந்திர சாமியாரின் கைதை ஒட்டி சங்கர மடத்தின் உள்விவகாரங்கள் உடைந்து சிதறி நம் முகத்தில் தெறித்து நாறுகிற நாட்கள் இவை. தந்தை பெரியாரின் வழி நின்று தன் எழுத்தால் தமிழகப் பண்பாட்டுச் சூழலில் சலனங்களை ஏற்படுத்தி வரும் தொ.ப. என அன்புடன் அழைக்கப்படுகிற முனைவர் தொ. பரமசிவன் (தலைவர், தமிழியல் துறைமனோன்மணியம் சுந்திரனார் பல்கலைக் கழகம் நெல்லை) அவர்களுடன் இதுதொடர்பாக சற்றே பேசியபோது.

காஞ்சி மடம் பற்றி இப்போது என்ன சொல்ல தோன்றுகிறது?

காஞ்சி மடமே கடந்த 75 ஆண்டுகளில் பத்திரிக்கைகள் கட்டி உருவாக்கி எழுப்பிய மணற்கோட்டைதான். இது சிருங்கேரி மடத்தின் கும்பகோணம் கிளை மடம்தான். 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில்தான் இவர்கள் கும்பகோணத்திலிருந்து காஞ்சிக்குக் குடி போனார்கள், ஆதிசங்கரரே கி.பி.8ஆம் நூற்றாண்டுக்காரர் என்னும் போது காஞ்சி மடம் 2500 ஆண்டு பழமை வாய்ந்தது என்பது வாய்கூசாமல் சொல்லும் பொய்யாகும்.

தமிழ்நாட்டிலே பெருங்கோயில்களுக்குப் பக்கத்திலே இன்றுவரை சிருங்கேரி மடத்துக்குத்தான் கிளை மடங்கள் உண்டே தவிர, காஞ்சி மடத்துக்குக் கிடையாது. திருநெல்வேலி, மதுரை, என எந்த ஊரிலும் இதைப் பார்க்கலாம். அதுதான் 'ஒரிஜினல்' மடம் என்பதாலேயே இந்த நிலை. இந்தக் கிளை மடங்கள் கூட நாயக்கர் ஆட்சிக்காலத்தின் துவக்கத்தில் வந்தவைதான்.

தமிழ்நாட்டிலுள்ள மற்ற மடங்களுக்கும் காஞ்சி மடத்துக்கும் உள்ள முக்கியமான வேறுபாடு என்ன தெரியுமா? இந்த மடத்தின் சகல சடங்குகளிலும் தமிழ் விலக்கப்பட்ட மொழியாகும். மடாதிபதிகளும் (இப்போது வேலூரில் குடி கொண்டிருப்பவரைத் தவிர) தெலுங்கு அல்லது கன்னடத்தை தாய் மொழியாகக் கொண்ட பார்ப்பனர்கள்தாம்.

இந்த மடமும் பிராமணர்களில் ஒரு சிறுபிரிவான ஸ்மார்த்தகளுக்கு மட்டுமே உரியதாகும். சிவ பிராமணர்களுக்குக்கூட இங்கே இடம் கிடையாது.

தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கோவில்களுக்கும் தலைமைப் பீடம்போல காஞ்சி மடம் நடந்துகொள்கிறதே. உண்மையில் கோவில்களுக்கும் இந்த மடத்துக்கும் உள்ள தொடர்பு என்ன?

இவர்களுக்கும் கோவில் வழிபாட்டுக்கும் எந்தச் சம்மந்தமும் கிடையாது. காஞ்சி காமாட்சியம்மன் கோவிலை மட்டும் இவர்கள் வளைத்துக்கொண்டார்கள். அந்தக் கோவிலிலும் அம்மனைத் தொட்டுப் பூசை செய்யும் உரிமை இவர்களுக்குக் கிடையாது. ஆதி சங்கரரின் தத்துவமே கோவில் வழிபாட்டுக்கு எதிரானது. இவர்கள் பரமார்த்தியத்திலே (உயர்ந்த தத்துவ நிலையில் சொல்வதானால்) நாஸ்திகர்கள். அதனால்தான் இவர்கள் திருநீரு பூசிக்கொண்டாலும் யாருக்கும் எடுத்துக் கொடுப்பதில்லை. (திருநீரு என்றுக் கூடச் சொல்லமாட்டார்கள். புஸ்பம் என்றுதான் சொல்வார்கள்.)

காமாட்சியம்மன் கோவிலுங்கூட ஒரு காலத்தில் பௌத்தர்களின் சாரா தேவி கோவிலாக இருந்தது என வரலாற்றறிஞர்கள் நிறுவியுள்ளனர். இந்தக் கோயிலுக்கு பழைய காலத்தில் காமக்கோட்டம் என்று பெயர். அதை வைத்துத்தான் இவர்கள் காமகோடி என்று பெயர் வைத்துக்கொண்டார்கள். சங்கரர் உருவாக்கிய மடம் என்று கதை கட்டிக்கொண்டார்கள்.

காஞ்சி மடாதிபதி இந்துக்களின் ஏகோபித்த தலைவர். இந்துமதத்தின் லோகுரு என்றெல்லாம் பெருங்குரல் எழுப்பப்படுகிறதே?

முதலில் இந்து மதம் என்பது ஒரு மதமே கிடையாது. எல்லா இந்துக்களுக்கும் இவர் தலைவரும் கிடையாது. சைவம், வைணவம், சாக்தம், த்வைதம். விசிஷ்டாத்வைதம் என்கிற மாதிரி பலதில் ஒன்று ஸ்மார்த்தம். ஸ்மார்த்தம் என்பது அத்வைதத்தைக் குறிக்கிற சொல்,எனவேஸ்மார்த்தப்பிராமணர்களின் தலைவராகத் (இந்துக்களின் தலைவராவது அப்புறம்) தான் இவரைச் சொல்ல முடியுமே தவிர ஒட்டு மொத்த பிராமணர்களின் தலைவராகக்கூட இவரைக்கொள்ள முடியாது.

(வைணவக் கோயில்களுக்குள் காஞ்சி மடாதிபதி மூக்கை நுழைப்பதை ஜீயர்கள் வன்மையாக எதிர்த்துள்ளனர். எல்லாவற்றையும் மீறி அராஜகமாக எல்லாக்கோவில்களுக்குள்ளும் அத்துமீறுவதை காஞ்சி சாமியார் நடைமுறையாகக் கொண்டுள்ளார்.)

பிறகெப்படி இந்த மடம் இவ்வளவு செல்வாக்குப் பெற முடிந்தது?

இவருக்கு முன் இருந்த சங்கராச்சாரி பெரிய 'படிப்பாளி.' இம்மடத்தின் கொள்கையான வர்ணாசிரம தர்மத்தில் அழுத்தமான பிடிப்புக்கொண்டவர். காங்கிரசுக்கு உள்ளேயும் பிராமணரல்லாதோர் குரல் தேசிய இயக்க நாட்களில் ஓங்கி ஒலித்தபோது ராஜாஜி இந்த மடத்துக்கு காந்தியடிகளை அழைத்து வந்துவிட்டார். இச்சந்திப்புக்குப் பிறகுதான் காந்தியடிகள் "நான் வர்ணாசிரமக் கொள்கையில் நம்பிக்கை உள்ளவன்" என்று தமிழ்நாட்டிலேயே அறிவிப்பு செய்துவிட்டுப்போனார்.

அதன்பிறகு வர்ணாசிரமத்தில் நம்பிக்கை உடைய தமிழ்நாட்டுப் பிராமணத் தலைவர்களோடு வடநாட்டுத் தலைவர்களும் வந்து போகிற திருத்தலமாக அது மாறியது. மடத்தின் சொத்துக்களும் பெருக ஆரம்பித்தது.

73 ஆண்டுகளுக்கு முன்னால் 1932லேயே 'குடி அரசு' இதழில் சங்கராச்சாரியின் பெருகிவரும் செல்வாக்கை எதிர்த்தும் கண்டித்தும் பெரியார் எழுதியிருக்கிறார். பெரியார் தீர்க்கதரிசி என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

தவிரவும் சங்கர மடத்தின் பிரம்மாண்டம் என்பது ஆனந்தவிகடன். பிறகு கலைமகள். கல்கி. இந்து. தினமணி, போன்ற இதழ்களால் கட்டி எழுப்பப்பட்ட ஒன்றுதான். பழைய சங்கராச்சரியரின் உரைகளை கலைமகள் " தெய்வத்தின் குரல்" என்றே வெளியிட்டது. கல்கியிலிருந்து சாவி வரை எல்லோரும் சங்கராச்சாரியாரை எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட புனிதராக எழுதிக்காட்டினர்.

("மற்ற எல்லா மதத்தையும் விட நம்முடைய மதமொன்றே (இந்து மதம்) ஆதிகாலத்திலிருந்து சிரஞ்சீவியாக இருந்து வருவதற்கும் நம்முடைய நாகரிகமே உலகத்தின் மற்ற

நாகரிகங்களைவிட மகோன்னதமாக இருந்து வருவதற்கும் காரணம் மற்ற மதங்களில் இல்லாத இந்த வர்ணதர்மம்தான், (தெய்வத்தின் குரல்; 1021 & 1023 ம் பக்கம்)

புதிய புதிய சாமியார்களின் எழுச்சிக்கு அவர்களுக்குப் பின்னால் திரளும் மக்கள் கூட்டம்தான் காரணம். தமிழ்நாட்டில் பக்தி பெருகி வருகிறதா?

புதிதாகப் பெருகிவரும் பக்திமான்களைக் கூர்ந்து கவனித்துப் பாருங்கள். இவர்கள் எல்லோரும் அச்சு ஊடகத்துக்கும் தொலைக்காட்சி ஊடகத்துக்கும் பலியாகிப் போனவர்கள். பெரும்பாலும் நகர்ப்புறம் சார்ந்த நடுத்தரக் குடும்பம் சார்ந்தவர்கள். எளிதாகக் கிடைக்கும் பணத்துக்காகவும் உத்தரவாதமான வருமானத்துக்காகவும் கண் நிறையக் கனவுகளையும் கவலைகளையும் சுமந்து திரிபவர்கள்.

எளிய மக்களுக்கு இந்த வகையான பக்தி கவர்ச்சி இல்லை. ஐயப்பன் வழிபாடு மட்டும் வாழ்க்கையைத் தொலைத்த எளிய மக்கள் சிலருக்கு ஒரு சின்ன ஒளியாகத் தெரிகிறது. (மார்க்ஸ் சொன்னதுபோல ஆன்மாக்களை இழந்த மக்களின் ஆன்மவாக) நவீன காலத்து கல்வியைப் போல பக்தியும் செலவும் பிடிக்கும் விசயமாக மாறிவிட்டது. பிடிபடும் சாமியார்கள் எண்ணிக்கை பெருகப் பெருக இந்த மாயை குறைந்துவிடும்.

ஆனால் உண்மையில் ஆன்மீகம் அல்லது பக்தி என்பது ஆண்டுதோறும் கள்ளும் கறியும் கொண்டு தன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் நாட்டார் தெய்வங்களின் காலடியில்தான் கிடக்கிறது.

அழிந்துபோய்வழிபாடற்றுக்கிடக்கும்கோவில்களெல்லாம் பெருந்தெய்வக் கோவில்கள்தானேயன்றி- சுடலைமாடன். கருப்பசாமி. மாரியம்மா போன்ற நாட்டார் தெய்வக் கோயில்களல்ல. அறநிலையத்துறையும் ஆட்சியதிகாரத்தின் ஆதரவும் நிதி ஒதுக்கீடும் எளிய மக்களின் இந்த பக்திக்குத் தேவையில்லை.

ஜெயேந்திரர் கைது பற்றி..?

சங்கராச்சாரியார் கைது இந்துத்வா சக்திகள் வலுவாக உள்ள வடமாநிலங்களில் ஏற்படுத்திய சிறு சலசலப்பைக்கூட தமிழ்நாட்டில் ஏற்படுத்தவில்லை. ஏனெனில் இது தமிழையும் தமிழர்களையும் விலக்கி வைத்த மடம் அல்லவா. ஆளும் கட்சியும் எதிர்கட்சியும் வேறு எந்த நடவடிக்கையிலும் இவ்வளவு

ஒற்றுமையாக இருந்ததில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். வழக்கின் முடிவு எப்படியானாலும் பத்திரிக்கைகள் உருவாக்கிய சங்கரமடப்புனிதம் நொறுங்கிப்போய்விட்டது. என்பது மட்டுமே உண்மை.

புனிதம் போச்சு என்றே சொல்லிவிடமுடியுமா?

இந்த மடத்துக்குச் சென்று வருவதையே வாழ்க்கையின் பெரும் பேராகக் கருதிய அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் (முன்னாள் குடியரசுத் தலைவர்கள், அமைச்சர்கள் உட்பட) யாருமே இப்போது வாயே திறக்கவில்லையே.

(அண்ணா அறிவாலயத்திலிருந்து வெளிவரும் “குங்குமம்“ வார இதழ் “சாவி“ பொறுப்பில் வந்தபோது அதன் முதன் இதழின் அட்டைப்படத்தில் குங்குமம் வைக்கும் பெண்ணின் பின்புலத்தில் - சுவரில் காஞ்சி சங்கராச்சாரியாரின் படம் இருக்கும்.)

இது வேடிக்கைதான் ஒரளவு படித்தவர்கள் வாசிக்கிற ஜீனியர் விகடன் பத்திரிக்கைக்கூட இன்னமும் ‘சிறையிலிருக்கும் சங்கராச்சாரியாருக்கும் மடத்தில் இருக்கும் இளைய சங்கராச்சாரியாருக்கும், டெலிபதி மூலம் தொடர்பு இருக்கிறது. என்று எழுதிக்கொண்டிருப்பதுதான் பெரிய வேடிக்கை.

(“ஏழாவது வயதிலேயே பெண்ணுக்குத் திருமணம் செய்துவிடவேண்டும். அந்த வயதில் அவனுக்கு கணவனாக வருகின்றவனிடம் அவள் தன்னை ஒப்படைத்துவிடவேண்டும். அவனையே குருவாவும் தெய்வமாகவும் ஏற்று அவனுக்குத் தன்னை அர்ப்பணித்துவிட வேண்டும். வயது ஆகிவிட்டால் பெண் எதிர் கேள்வி கேட்பாள். அதனால் இளம்வயதிலேயே அவளை ஒருவனிடம் அர்ப்பணித்துவிட வேண்டும். அதன்பிறகு அவளுக்கென்று எதுவும் இல்லை. தெய்வத்தின் குரல் பக்.870 II-ஆம் பாகம்.)

(இந்த பெரியவாள்தான் மோசம், முந்தின பெரியவாள் அருமை என்று பேசிக்கொண்டிருக்கும் தலைவர்களுக்கு சமர்ப்பணம்)

✧

‘சுட்டாஞ்சோறு’ இதழில் வெளியானது.

நேர்காணல்: ச.தமிழ்ச்செல்வன்

10

அறம் / அதிகாரம் : ஒரு பார்வை

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக மேற்குலகத்தின் அனுபவ விரிவு சில புதிய காற்றுகளைக் கிழக்கு நோக்கி அனுப்பி வைத்திருக்கிறது. அவை கொண்டுவந்த செய்திகள் இந்திய / தமிழகப் பண்பாட்டைப் புதிய கோணங்களில் காணவும் காட்டவுமான பார்வைகளை நமக்குத் தந்திருப்பதும் மெய்தான். இப்போது வந்துள்ள செய்தி 'பின் நவீனத்துவம்', அறிவொளிக் காலத்தின் பாதிப்பிலிருந்தே இன்றும் விடுபடாத ஒரு சமூகத்துக்கு இது தேவையே. இயற்கை உரங்களின் அருமையைப் பேசுகின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அடுத்ததாகப் பசுமைப்புரட்சியின் பிதாமகர்கள் சி.சுப்பிரமணியமும், எம்.எஸ்.சுவாமிநாதனும் பாராட்டப்படுகின்றார்கள். பெர்லின் சுவரைப் போல பெரிய சுவர் ஒன்று இருந்தால் முட்டிக் கொண்டே தகர்த்து விடலாம்தான்.

ஒற்றை நேர்கோட்டுப் பார்வையிலேயே எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து ஏமாந்து, சலித்துப் போனபின் தமிழ் இலக்கியப் படிப்பாளிகளுக்கும், திறனாய்வாளர்களுக்கும் நிறையக் கேள்விகள் மிஞ்சியிருக்கின்றன. மரபு வழிப் பார்வைக்கு மறுபார்வையும், புதிய பொருள்கோடலும் இந்த ஏமாற்றத்தின் பின்வந்த தேடலின் விளைவாக நல்ல விளைவாக - நமக்குத் கிட்டியிருக்கின்றன.

அப்படிப்பட்ட 'மறுபொருள் கோடல்' முயற்சியை ராஜ் கௌதமன் செய்திருக்கிறார். காலங்காலமாக மையத்தின் அருகே நெருங்கவிடாமல் ('விளிம்பு நிலை' என்ற சொல்லாட்சியில் எனக்கு உடன்பாடில்லை) மக்கள் திரளின் பார்வையிலே "தலித்திய சாத்தியப்பாடாக" அம்முயற்சியைத் தொடங்கியிருக்கிறார். ஃபூக்கோ ஒருதலையாக, நீட்சே மறுதலையாக அவரது தேடலுக்கு உதவியிருக்கின்றனர்.

புதுவகை மூலதனத்தோடும் சுரண்டலோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த மேற்குலகம் பெற்ற அனுபவங்களின் வெளிப்பாடுகளில் மார்க்சும் உண்டு. நீட்சேயும் உண்டு. தமிழிலக்கிய ஆக்கத்தில் இருபது நூற்றாண்டுகளாக அதிகாரம் குறுக்குவெட்டாகப் பாய்ந்த கதையினை இந்த இருவரது துணைகொண்டு அளக்க முற்படுதல் பாவகாரியமாகாது. அதிகார உருவாக்கமும் நிலை பேறும் மனிதனின் மனமொழி மெய்களைக் கட்டியாண்ட கதை சுவையானது. வரிவாங்குபவனை 'இறைவன்' என்று குறிப்பிட்ட வள்ளுவரின் சிந்தனையை ஆண்டது எது? உடலும் மனமும் குலுங்க வாய்விட்டுச் சிரிக்கும் பெண்ணைத் தடை செய்தது எது? என்ற சிந்தனை தமிழிலக்கிய வரலாற்றில் குறுக்குவெட்டாகப் பாய்கின்றபோது நமக்குப் புதிய செய்திகள் கிடைக்கின்றன.

இனக்குழுக்கள் வன்முறைக் கருவிகளால் ஒடுக்கப்பட்டு அல்லது தம்முள் கரைக்கப்பட்டு சேர, சோழ, பாண்டிய அரசுகள் உருவாயின. அந்த அரசுருவாக்கத்துக்குத் தேவையான வருணாசிரம சித்தாந்தம் வடக்கிலிருந்து வந்தது. வடக்கே வருணாசிரமத்தைத் தாக்கிவிட்டுத் தெற்கே குடிவந்திருந்த சமண பௌத்த சித்தாந்தங்கள் வாணிகப் பெருக்கமில்லாத இடத்தில் அரசுருவாக்கத்துக்குப் போதிய அளவு துணை செய்ய இயலவில்லை. எனவே நிலவுடைமையோடு கூட்டுச்சேர்ந்த வருணாசிரமம் சமண பௌத்தங்களை (உருவாகி வந்த அதிகார மையங்களின் துணையுடன்) மோதித் தூக்கியெறிந்தது. அந்த இடத்தில் அதிகார மையத்தின் பண்பாட்டுத் தளத்தில் தன்னைத் தக்க வைத்துக் கொண்டது. காலனி ஆதிக்கத்தின் தொடக்க காலம் வரை அதனை எள் முனையளவு கூட அசைத்துப் பார்க்கப் பெருவாரியான மக்கள் திரளுக்குச் சக்தி இல்லாமல் போயிற்று.

அறங்களை முற்றிலும் புறவயமாக அணுகும் நிலைப்பாட்டை எடுக்க முடியாது என்ற இடத்திலிருந்து தன்னுடைய 'பொருள்கோடல்' முயற்சியைத் தொடங்கும் ராஜ் கௌதமன், சொல்லும் நாவும் கட்டுப்படுத்தப்பட்ட நிகழ்வினை முதலில் விளக்குகிறார். பின்னர் உடலுறுப்புகள் ஒவ்வொன்றும் அதிகாரக் கட்டமைப்புக்கு உட்படுத்தப்படும் கதையினைக் கூறுகிறார். கல்வியறிவு - குறிப்பாக எழுத்து மரபில் பதிவு செய்யப்பட்டது. பொருள் இகந்த உண்மைகளையும் மத உண்மைகளையும் உள்ளடக்கமாகக் கொண்டிருந்தது என்ற சரியான முடிவுக்கு வருகிறார். ஈகை, ஏற்றல் ஆகியவற்றின் பின்புறமாக ஆன்மீக அதிகாரம் தொனிப்பட்டது என்பது உண்மைதான். சிறியதாயினும் உரிய காலத்தில் செய்யப்பட்ட உதவி உலகத்தைவிடப் பெரியது என்ற வள்ளுவர் சிந்தனை இந்த இடத்தில் மறுபரிசீலனைக்குரியதாகின்றது.

நூலின் உட்பகுதியில் காலப் பரிமாணம் சரியாகவே அமைந்திருக்கின்றது என்பதற்கு 'இனக்குழு வாழ்க்கை முறையும், வீரயுக வாழ்வின் அம்சங்களும் மூவேந்தரின் முடியாட்சி முறையும் கலந்திருந்த சங்ககாலத்தில், சமண-பௌத்த, வைதீக மதங்களின் வினைக் கோட்பாடு தமிழ்ச் சமுதாயத்தின் ஆதிக்கப்பகுதிக்கு நன்கு அறிமுகமாகிவிட்டது' என வரும் பகுதி அடையாளமாகும். சமண-பௌத்த மதங்கள் கடவுள் என்ற ஒரு தனிப்பொருளின் (ஈஸ்வர தத்துவம்) இருப்பை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் அவர்களின் 'மறுபிறப்புக் கோட்பாடு' வைதீகத்தால் தன்மயமாக்கப்பட்டு சாதிப் படி நிலையை நிரந்தரமாக்கிவிட்டது. இந்த இடத்தில் (ப.103) ராஜ் கௌதமனின் கணிப்பு வரலாற்றுணர்வோடு அமைந்திருக்கின்றது. இந்த நேரத்தில் அவரது கருத்தை வலியுறுத்த இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும். வைதீகம் தன்மயமாக்கிக் கொண்ட சமண-பௌத்த கோட்பாடுகளில் மற்றொன்று கழுவாய் (பிராயச்சித்தம்) என்பதாகும்.

ஈஸ்வரனது இருப்பை மறுத்துவிட்ட காரணத்தால் சமண-பௌத்தர்கள் கழுவாயினை உலகியலுக்கு உரியதாக ஆக்கி வைத்திருந்தனர். ஆனால் அதைத் தன்வயப்படுத்திய வைதீகம் புனித நீராடலாகவும், தேவர்க்கும் பார்ப்பனர்க்கும் பொருள் கொடுப்பதாகவும் அதனைச் சுருக்கிவிட்டது. கழுவாய்க் கோட்பாடு பழைய வழிபாட்டு நெறிகளில் குறுக்குவெட்டாகப் பாய்ந்து தனக்கென நிலையான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டது.

தமிழிலக்கியத்தில் ஆண்டாளின் பாடல்களைச் சரியாக இனங்கண்டு கொண்டவர்கள் மிகச் சிலரே. "ஆண்டாள் பாடல்களில் குமுறும் உணர்வு சோகம்தான்" (ப.182) என்பது மறுபொருள்கோடலுக்குச் சரியான எடுத்துக்காட்டாகும். கீழ்ப்படிதல் என்ற ஒழுக்கக் கோட்பாட்டின் உருவாக்கத்தில் எதிர்ப்புறமாக வன்முறை உணர்வு ஊடாடிக் கிடப்பதையும்அது அரச வன்முறைக்குச் சட்டத் தகுதியை ஏற்படுத்துவதையும் புறம்34ஆம் பாட்டின் வழி விளக்க முயல்வது ஏற்கக் கூடிய வகையிலே அமைந்துள்ளது.

ஒழுக்கவாதம் பற்றிய பார்வைகள் அதிகாரத்தோடு கூடி வளர்வதற்கு முன்புள்ள கால எச்சங்கள் சில, சங்க இலக்கியங்களிலே காணப்படுகின்றன, அங்கிருந்து தொடங்கி காலங்காலமாக ஒழுக்கப்பார்வைகள் மேலும் மேலும் இறுகிக் கொண்டே போகின்றன செய்தியை இன்னும் காவிய வரலாற்றுணர்வுடன் பார்க்க வேண்டிய தேவை நமக்கிருக்கிறது. எனவே முதல் முயற்சி என்கிற 'கனிவான' பார்வையில் ராஜ் கௌதமன் நூல் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகி விடுகிறது.

பெருவாரியான மக்கள் திரள், பண்பாட்டுத் தளத்தில் கொஞ்சம் கொஞ்சமாக ஒடுக்கப்பட்ட கதையினைத் தமிழிலக்கியங்கள் பக்கம் பக்கமாக வரைந்து தள்ளியிருக்கின்றன. இந்தப் பக்கங்களில் சிலவற்றை ஒவ்வொன்றாகப் புரட்டிக் காட்டுகிறார் ராஜ் கௌதமன்.

எதிர்தலையில் நின்று கேட்கப்படும் மற்றொரு கேள்விக்கும் நாம் பதில் சொல்லியாக வேண்டும். இனக்குழு கரைவு, அரசுருவாக்கம், அரசர் வணிகர் உறவு, பார்ப்பன வேளாளர் கூட்டணி, வைதீக வளமை என்று பார்த்துக் கொண்டே செல்வதும் ஒற்றைப் பரிமாணப் பார்வைதானே? இந்த நேர்கோட்டுப் பார்வை எல்லைக்குப் புறம்பாகச் சமூகம் இயங்கவேயில்லையா? என்பது மாதிரியான கேள்விகள் எளிதில் தள்ளிவிடக் கூடியன அல்ல. இந்த இடத்தில்தான் நூலின் எல்லை பற்றிய விவாதம் தொடங்குகிறது.

எல்லாவற்றிலும் மறுபொருள் தேடும் முயற்சியில் ஈடுபடும்போது, மரபுவழிப் பட்ட தமிழ்ப் புலவர்கள் தந்த கால வரிசையினை அப்படியே பின்பற்றுதல் என்பது ஓட்டக்காரனின் காலில் தளையாகப்படுகிறது. இந்த இலக்கியங்களின் 'பிரதியின் ஏற்புடைமை', இவற்றின் 'கால ஏற்புடைமை' ஆகியவை பெருத்த

விவாதத்திற்குரியவை. அகநானூற்றையும், திருக்குறளையும் பரிபாடலையும் ஒரே கால எல்லைக்குள் அடக்க முடியுமா? இந்த நெடிய இலக்கியப் பரப்பில் உள்முரண்கள் ஏதும் தோன்றவேயில்லையா? சைவ சமயத்துக்குள்ளிருந்து ஒரே காலத்தில் வெளிவந்த ‘கவுணியர்கோன் ஞானசம்பந்தன்’ என்ற தன்அறிமுகக் குரலும் ‘கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்’ என்ற குரலும் நேர் எதிர்முனையாகத் தெரிகின்றனவே! இதற்கான காரணம் என்ன? நூலுக்குள்ளே விடை இல்லாத கேள்விகள். இது போலும் நிறைய.

‘இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈபவர்க்கருளும் வைத்தார்’ எனவரும் அப்பர் தேவாரப் பாடலைச் சாமர்த்தியமாக மேற்கோள் காட்டி ‘அறத்துக்கு மூலம் வைதீகம் என்கிறது’ (ப.52) என்கிறார் ராஜ் கௌதமன். இப்பாடலின் அடுத்த அடி “கரப்பவர் (மறைப்பவர்) தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்” என்பதாகும். சமநிலை அழிந்து போனால் ஆபத்து காத்திருக்கின்றது என்று சிலருக்கு அச்சமூட்டும் இந்தப் பாட்டு “வைதீகம்” ஆகாது. வைதீகம் என்ற சொல்லை வேதத்தின் தலைமையைக் ‘கொள்கையளவில்’ ஒத்துக்கொண்டவர்கள் மீதெல்லாம் திணிக்க இயலாது. வைதீகம் என்பது வேதத்தை மட்டுமே ‘சுத்த சுயம்பு’வாகக் கொண்டு பொருண்மை நிராகரிப்பையும், பார்ப்பன மேலாண்மையினையும் ஒருசேர முன்வைக்கும் தத்துவமாகும். பார்ப்பனர்களின் சந்தியா வந்தனம் என்ற அடிப்படையான வைதீக வழக்கத்தைப் பார்ப்பனருடன் நின்று கொண்டே அப்பர் கண்டிக்கிறாரே? அதனை எப்படிப் பொருள் கொள்வது?

தமிழிலக்கியப் பரப்பில் அதிகார எதிர்ப்புக் குரலாக, நிறுவன எதிர்ப்புக் குரலாகக் குறைந்தது இரண்டு நூற்றாண்டுகாலம் சித்தர்களின் முழக்கம் கேட்கிறது. நாம் இன்னமும் கழற்றிக் கொள்ள முடியாத “வேதமாயை”யிலிருந்து விடுபடத் துடித்த முதற்குரலாக வரலாற்றில் அவர்களுடைய குரலையே கேட்க முடிகிறது. அதிகார மையங்களுக்கு எதிரான அவர்களது பாடல்கள் மடங்களிலிருந்து தொகுக்கப்படவில்லை. பெருவாரியான ஒடுக்கப்பட்ட மக்களே அப்பாடல்களுக்கு உ.வே. சாக்களாகத் திகழ்ந்திருக்கின்றனர். சித்தர்களது குரல்களை எதிர்கொள்வதற்குரிய வலிமை தமிழ்நாட்டில் நிலவிய அரசதிகாரத்தால் இயலாமற் போயிற்று. ‘நாதசித்த வழிபாடு’ என்ற பெயரில் சித்தரமரபோடு பண்பாட்டுச் சமரசம் செய்துகொள்ள

முன்வந்த வேளாளரின் குரல் அதன் பின்னர் அதிகாரக் குரலாகத் தமிழக வரலாற்றில் ஒலிக்கவில்லை. வேளாளரைப் புறந்தள்ளிவிட்டு புதிய, பிறமொழியாளரான, அதிகார மையத்தை வருணாசிரமம் இங்கே கொண்டு வந்து தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. இசுலாமியத் தாக்குதலில் வடநாட்டில் பௌத்தம் அழிந்துபோக வருணாசிரமம் தாக்குப் பிடித்த கதையினை அம்பேத்கார் விரிவாகச் சொல்லுவதனை இங்கே நினைவிலே கொள்ள வேண்டும். வைதீகம் இங்கே பார்ப்பனியத்தின் காவல் கோட்பாடாக மட்டுமே இருந்தது. வருணாசிரமமே (விசயநகரப் பேரரசர்களால்) இங்கே இந்துத்துவத்திற்குக் கால்கோள் இட்டது என்பதே வரலாற்று உண்மை.

“இலக்கியப் பிரதிகள் புனைந்து கூறும் வரலாற்றைச் சரிபார்த்துக் கொள்வதற்கான அறிவுச் சொல்லாடல்கள் கிடைக்கவில்லை” என்பதனால் “குறியீட்டு ஒழுங்கின் ஓரங்கமான இலக்கியப் பிரதியை மட்டும் வைத்துப் பொருள் கோடல் செய்ய வேண்டியுள்ளது” என்கிறார் ராஜ் கௌதமன். நமக்கு எழும் கேள்விகள், இந்த அறிவுச் சொல்லாடல்கள் மட்டும் ஒரு சமூகம் உயிர்த்தும் இருந்தும் வாழ்ந்தும் வந்த தடயங்களை முழுவதும் காட்டிவிடுமா? அல்லது கையில்கிடைக்கும் கருத்தியல் தளங்கள் சமூகத்தின் பெருவாரியான மக்களின் வாழ்வை முழு வலிமையுடன் ஒழுங்கு செய்தவை எனச் சொல்லிவிட இயலுமா? காலங்காலமாக நூற்றுக்குத் தொண்ணூறு பேர் புலால் உண்ணும் தமிழ்ச் சமூகத்தை இந்த எழுத்துப்பிரதிகளை மட்டும் நம்புபவர்கள் ‘புலால் வெறுக்கும் சமூகம்’ என்றுதானே கருத முடியும். முழுமையான பார்வைக்கு வரலாற்று ஆதாரங்கள் தேடிப் புறப்பட்ட ஆய்வாளர்கள் எத்தனை பேர்? இந்த எழுத்துப் பிரதிகள் காட்டுவதாக ராஜ் கௌதமன் முன்வைக்கும் கருத்தியலுக்கு மாறான தடயங்களை ஒவ்வொரு கட்டத்திலும் பெருவாரியான மக்களின் வாழ்வியற் சடங்குகளிலிருந்து காட்ட முடியும். வீட்டுச் சடங்குகள் சாதிச் சடங்குகள், கோயிற் சடங்குகள், நடைமுறைகள், பழமொழிகள் எனச் சொல்லாடலுக்கு வெளியிலும், உள்ளுமாகத் தமிழ்ச் சமூகம் வெளிப்படுத்தும் கருத்தியலுக்கும் அறிவுச் சொல்லாடல்களுக்கும் இடையிலுள்ள வெளி தனியாக அளந்தறியப்பட வேண்டிய பெரும் பரப்பாகும். அவ்வெளியினை அணுகி அறிந்தால் மட்டுமே நமது புரிதல் முழுமையாகும். இல்லையென்றால் ‘விதவை மறுமணக்

கோட்பாடே பெரியாரின் கண்டுபிடிப்புத்தான்' என்றுகூட வாதாடும் கருத்து வறட்சியாளர்களுடன் நாமும் கைகோத்துக் கொள்ள வேண்டியது வரும்.

அடுத்து, தமிழிலக்கியத்தின் நெடிய பரப்பினை முழுவதும் அறிந்த கருத்தியலாளர்கள் நம்மிடையே மிகக் குறைவு. அப்படி ஒரு பாவனையைத் தான் தமிழாசிரியர்கள் பலர் வைத்துக் கொண்டுள்ளனர். ஆனால் தமிழிலக்கியப் பரப்பினைக் குறுக்காக விசாரிக்க நமக்குப் போதிய நூல்கள் இருக்கின்றன என்ற உண்மையினையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

'மடிவாய்' குறித்து ராஜ் கௌதமன் கூறுவது மேற்கோள் அளவில்கூட ஏற்கத்தக்கதன்று. 'மடிவாய் இடையர்' என்பது கால்நடைகளை ஒழுங்குபடுத்தும் சீழ்க்கை ஒலியாகவே சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை' என்பது காதல் உறவு பற்றிய செய்தியே (பக்.17). அகத்திணைக் கலைச்சொல்லான 'நிறை' அண்மைக்காலம் வரை 'நிறையழிஞ்சவ' என்று வசவுச் சொல்லாகவும் வழங்கி வந்தது. இதனைப் புறவாழ்க்கைக் களத்தில் பொய், பொய்ச்சாட்சி கூறாமை என்று பொருள் விரித்துக் காட்டுவதனை ஏற்க முடியாது. அது போலவே ஒரு இலக்கியப் பிரதியினைப் பற்றிய முழுமையான பார்வை இல்லாமல் பெரியாழ்வார் பாடலைப் பற்றிக் கருத்துரைக்கிறார் ராஜ் கௌதமன், சரி கதைக்கு வருவோம். பெரியாழ்வாருக்கு மனிதப் பிறவி, உடல்மீது ஏகப்பட்ட கோபம். சீழ், மண், மலம், ஊத்தை கொண்ட இந்த உடல்மீது ஈ மொய்ப்பதை அருவருப்புத் தோன்றும்படி வருணிக்கிறார். இப்படிப்பட்ட உடலை உடைய குழந்தைகளுக்குப் பெற்றோர் ஆசையாகக் கண்ணன் என்று கடவுளின் பெயரை வைப்பதை இவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. – 'ஊத்தைக் குழியில் அமுதம் பாய்வது போல் உங்கள் மூத்திரப் பிள்ளையை என் முகில் வண்ணன் பேரிட்டு ஆடித்திரிமினோ' என்று கோபித்துக் கொள்கிறார்" என்றெழுதுகிறார் ராஜ் கௌதமன் (பக்.122)

இத்தகைய தவறான மேற்கோள்கள் எழுத்தின் மீதான நம்பிக்கையைச் சிதைத்துவிடும். மேற்கோள் காட்டப் பெற்ற பாடல் மட்டுமன்று அந்தப் பதிகத்திலுள்ள பத்துப் பாடல்களும், 'பிள்ளைகளுக்குக் கண்ணன் பேரை இடுங்கள்' என்று வேண்டும் (சீரணிமால் திருநாமமே இடத்தேற்றிய) பாடல்கள் ஆகும். சிக்கல் இத்தோடும் அமையவில்லை. சமணத்தின் தாக்கத்தினால் மனித உடலின் அழுக்கைச் சொல்லி வெறுப்பேற்றுவது தமிழிலக்கியத்தில் இருபதாம் நூற்றாண்டு வரை பதிந்து போன மரபாகும். இந்த இலக்கிய மரபினை எதிர்க்கும் முதற்குரலை – அது எவ்வளவுதான் வலிமை குறைந்ததாக இருந்தாலும் – பெரியாழ்வாரே ஒலிக்கிறார்.

> பூணித் தொழுவினில்புக்குப்
> புழுதியளைந்த பொன்மேனி
> காணப் பெரிதும் உகப்பன்"

என்று மாட்டுத் தொழுவிலே வேலை செய்து வந்தவனது உடற்புழுதியை அவன் தாய் கொண்டாடுகிறாள். புழுதியோடு மூத்திரமும் பெரியாழ்வாருக்குப் பாடு பொருளாயிற்று. தெருவிலே விளையாடும்குழந்தை சிறுநீர் கழித்துவிட்டு, தாயின் நினைப்புடன் உடனே வீட்டுக்குள் ஓடி வந்து, அமர்ந்து வேலை செய்கிற தாயினைப் பின்னாகச் சேர்த்துக் கட்டிப்பிடிக்கிறது. மிச்சமிருக்கிற சிறுநீர்த்துளி தாயின் முதுகிலே சொட்டுச் சொட்டாகப் படிகிறது.

> மொட்டு நுனையில் முளைக்கின்ற முத்தேபோல்
> சொட்டுச் சொட்டென்னத் துளிக்க துளிக்க என்
> குட்டன் வந்தென்னைப் புறம் புல்குவான்

என்று தாய் மகிழ்ச்சியால் சிலிர்த்துப் போகிறாள். இதுவும் பெரியாழ்வார் பாட்டுதான். எழுத்துப் பிரதிகளில் கருத்தியல் தளத்தில் இந்த எதிர் மரபு தொடர்ந்து "திரௌபதி தீட்டுக்குரிய காலத்தில் இருந்தபொழுது கூப்பிட்டாள். கடவுள் வந்தான். எனவே பக்தி செய்வதற்குச் சுத்தம், வளமை, தகுதி காலம் என்றெல்லாம் பார்க்க வேண்டாம்" என்று 13ஆம் நூற்றாண்டு (ஆசார்ய ஹிருதயம்) வரைவந்திருக்கிறது. சுத்தம் x அசுத்தம் என்ற கோட்பாட்டை உடைக்கும் முயற்சி ஒன்று வைணவத்துக்குள் இருந்திருக்கிறது என்பதற்கான சான்றுகள் இவை.

"பார்ப்பனர்கள் வீட்டில் சமஸ்கிருதமும் வெளியில் தமிழும் உபயோகித்தார்கள்' (பக்.210) என்பது போன்ற செய்திகள், குறைந்த அளவு கள ஆய்வேதும் இல்லாமல் மரபுகளைப் புரிந்து கொள்ளும் முயற்சிகள் தோற்றுப் போகும் என்பதற்கான அடையாளமாகும். பார்ப்பனர்கள் சமஸ்கிருதத்தைத் தொழிலுக்குரிய 'புனித மொழியாக மட்டுமே கொண்டிருந்தார்கள். பார்ப்பனப் பெண்களுக்கு வேதக்கல்வி மட்டுமன்று; சமஸ்கிருதக் கல்வியும் தடை செய்யப்பட்டிருந்தது. அதனால்தான் சமஸ்கிருதம்

பார்ப்பனருக்கு வீட்டுமொழியாக விளங்காமற் போயிற்று. அப்படியிருந்திருந்தால் பெரியாரின் வேலை இன்னும் எளிதாகப் போயிருக்கும்.

தமிழிலக்கியம், சமூகம் என எதைப் பேசினாலும் சமஸ்கிருத மூலம் தேடும் 'மோஸ்தர்' (பெரியபுராணத்துக்கு உபமன்யு பக்த விலாசம், திருவிளையாடற்புராணத்துக்கு ஹாலாஸ்ய மகாத்மியம், மெய்கண்டார் நூலுக்கு ரௌரவ ஆகமம்) ராஜ் கௌதமனையும் தொற்றிக் கொண்டிருப்பது மகிழ்ச்சி தரவில்லை. 'அதிதி பூசை' (பக்.40) பற்றிக் குறிப்பிடுகிறார்கள்.

இராத்திரி நேரங்களில் ஊர் மடத்தில் வந்து படுத்திருக்கும் வெளியூர்க்காரனை விசாரித்து 'இராச்சோறு' கொடுக்கும் பழக்கம் இந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை கிராமங்களில் உயிரோடு இருந்தது. 'இராமடம் ஊட்டுவாரைப் போலே' என்று இந்த வழக்கத்தை உரையாசிரியர்களும் குறிப்பிட்டுள்ளனர். அது போலவே வள்ளுவர் சொன்ன மருந்து 'ஆயுர்வேதம்' என்கிற (பக்.20) பரிமேலழகரின் பார்வை எதிர்மரபு தேடுவோர்க்கு ஏற்ற வேலையன்று. நாட்டு மருத்துவம் தென்னாட்டுக்கும் உண்டு, வடநாட்டுக்கும் உண்டு. இவ்வகையான 'வறண்ட பார்வைகள்' நூலின் நோக்கத்தைத் திசை மாற்றிப் போட்டுவிடும் ஆபத்தான பார்வைகளாகும்.

வெள்ளைக்காரன் காலத்தில்தான் வேளாளர்கள் பார்ப்பனர்களோடு மோதத் தொடங்கினார்கள். இது 'பதவிச் சண்டை' என்று கைலாசபதி விதைத்த 'மலிவான கருத்து மாயை' இன்றும் நம்மைவிட்டு விலகிப் போகவில்லை என்பதற்கும் ராஜ் கௌதமன் சாட்சியாகிறார் (பக்.214). திராவிட இயக்கத்தின் தோற்றக்காரணிகளைக் கொச்சைப்படுத்த முனைந்தவர்கள் தோற்றுப் போன செய்தியினை ராஜ்கௌதமன் இன்னும் ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்? "தமிழ்நாட்டின் நாகரிகம் தோன்றிய காலத்திலேயே பார்ப்பனியம் இங்கிருந்தது" (ப.210) என்றால் ஆதிச்சநல்லூர் புதைகுழிகளை இன்னும் ஆழப்புதைத்துவிட வேண்டியதுதான்.

அதிர்ச்சி மதிப்பீடுகள் நிறைந்த ஒரு நூலை (அவர் மறுத்தாலும்) ராஜ் கௌதமன் படைத்திருக்கிறார். இத்தகைய மரபு மீறிய ஆய்வு முயற்சிகள் நமக்குக் காலத்தின் தேவையே. உடைபட வேண்டிய புனிதங்கள் தமிழ்ச் சமூகத்தில் இன்னும் நிறைய மிச்சம் இருக்கின்றன. விடை காண வேண்டிய கேள்விகளும், சந்தேகப்பட

வேண்டிய சொல்லாடல்களும் குவிந்து கிடக்கின்றன. எனவே இருப்பதை ஏற்றுக் கொள்ளும் 'பக்குவமில்லாதவர்கள்' மீது நிறையப் பேருக்குக் கோபம் வருவது இவர்களுடைய 'நோகாத பிழைப்பு' கெட்டுப் போய் விடுகிறது என்பதால் தான். கிளைத்துப் பார்த்துத் தரம் பிரித்தால் காய்கறிக் கடைக்காரருக்கும்தான் கோபம் வரும். ராஜ் கௌதமன் நன்றாகவே கோபமூட்டுகிறார்.

ஆனால் தேடப் போனவர்கள் எதையேனும் கொண்டு வரவேண்டும். விரக்தியும் சலிப்பும் மதிப்புப் பெறாத பொருட்கள். "சமர்த்தி சந்தைக்குப் போனால் வாங்கவும் மாட்டாள், விற்கவும் மாட்டாள்"

✧

ராஜ்கவுதமன் நூலுக்கான மதிப்புரை
காலச்சுவடு - ஜூலை 1999

11

அன்னம் பஹு குர்வீத

(உணவைப் பெருக்கிப் பகிர்ந்துண்ணும் பாரதீய சனாதன தருமம்)

உணவைப் பெருக்கிப் பகிர்ந்துண்ணும் பாரதீய சனாதன தர்மத்தின் விளக்க நூலாக 'அன்னம் பஹு குர்வீத' என்ற பெயரில் தமிழ் நூல் ஒன்று வெளிவந்துள்ளது. நூலாசிரியர்கள் ஜிதேந்த்ர பஜாஜ், மண்டயம் தொட்டமனெ ஸ்ரீநிவாஸ் ஆகிய இருவரும் ஆவர். நூலின் துணையாசிரியர் பெயரிலிருந்து அவர் 'திராவிட வேதப் பிரகர்த்தர்களின் வாரிசு எனத் தெரிகிறது. வடக்கும் தெற்கும் இணைந்து எழுதிய இந்த நூலுக்கு இரண்டு சங்கராச்சாரியார்கள், மூன்று ஜீயர்கள், பெஜாவர் மடாதிபதி ஆகியோர் ஆசி உரை வழங்கி இருக்கிறார்கள். விஜயலெட்சுமி ஸ்ரீநிவாஸ் தமிழாக்கம் செய்துள்ளார்.

பாரதத்தின் கடந்த கால உணவுக் கோட்பாடுகளையும் நிகழ்கால நிலைமைகளையும், வருங்காலத்துக்குத் தேவையான சிந்தனைகளையும் தன் பார்வையில் நூல் முன் வைக்கிறது.

இந்தியாவின் உணவுத் தேவை குறித்த கவலை அனைத்து இந்திய மக்களுக்கும் பொதுவானதுதான், சிந்திக்க முற்படுகிற சிலர் மட்டும் இந்தியாவின் உணவு உற்பத்தி முறைகளையும் சந்தைகளையும் பங்கீடும் முறைகள் பற்றியும் கவலைப்படுகிறார்கள். ஆசியுரை வழங்கிய பெரியவர்களுக்கு இந்தியாவின் 'ரேசன்' கடைகளைப் பற்றியோ அங்கே வழங்கப்படும் பொருள்களின் தரம், முறை பற்றியோ அனுபவம் இருக்க நியாயமில்லை.

மனிதகுல நாகரிக வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணிகளில் ஒன்று, ஒவ்வொரு மக்கள் திரளும் தனக்கென்று தேர்ந்தெடுத்துக் கொண்ட உணவு உற்பத்தி முறையும், தொழில் நுட்பங்களும், உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியும், உணவு குறித்த பண்பாட்டு வெளிப்பாடுகளும்தாம், இந்தியக் கலாச்சாரத்தைப் போலவே இந்திய உணவு வகைகளும், உற்பத்தி முறைகளும் பன்முகத் தன்மை கொண்டவைகளே. (இதை எழுதும் போது 13 நாள் ஆட்சியின் வாக்கெடுப்புக் கூட்டத்தில் ஜி.ஜி.சுவெல் வடகிழக்கு மாநிலங்களில் மாட்டிறைச்சி எப்படி அடிப்படை உணவாக விளங்குகிறது என்பதை விளக்கிப் பேசியது நினைவுக்கு வந்து தொலைக்கிறது)

'அன்னம்' என்ற சொல் அரிசியைக் குறிக்கவில்லை. சமைக்கப்பட்ட அரிசியைக் குறிக்கிறது. அன்னத்தைப் பகிர்ந்து உண்ணுதல் என்பது பிராமணர்களைத் தவிர ஏனையோர்க்கு விதிக்கப்பட்ட தர்மமாகத்தான் இருக்க முடியும். ஏனென்றால் பிராமணர்கள் (துறவிகள் உட்பட) மற்றவர்கள் கையால், 'அன்னத்தைப் பெற்றுக் கொள்வதில்லை. 'அரிசியினை' மட்டுமே பெற்றுக் கொள்வார்கள். அத்தனை ஏன், பிற சாதியினர் கையால் புழுக்கப்பட்ட (அவிக்கப்பட்ட) அரிசியினை உண்பது பாவமென்று கருதி பச்சரிசி உணவினைத் தேர்ந்து கொண்டவர்கள் அவர்கள். சமயத் தலைமை அதிகாரத்தைப் பெற்றிருந்தவர்களின் உணவு நெறி பாரதத்தில் இதுவாகத்தான் இருந்தது.

அன்னம் என்பது முழுமையான உணவினைக் குறிக்கும் சொல்லாகாது. இலை, தழைகள், கீரைகள், காய்கறிகள், பயறு வகைகள், நிலத்திற்கு கீழே வளரும் கிழங்கு வகைகள், இறைச்சி, மீன்- இவை எல்லாம் கலந்ததே உணவு வகையாகும். சங்க இலக்கியத்திற்குப் பின்வந்த தமிழிலக்கியத்தை - இருபதாம் நூற்றாண்டு வரை - படிக்கிற யாருக்கும், தமிழர்கள் எல்லோரும் புலால் உண்ணாதவர்கள்' என்ற மயக்கம் வந்துவிடும். அப்படித்தான் இந்த நூலைப் படிப்பவர்களுக்கும் 'பாரதம் புலால் உண்ணாத நாடு' என்ற மயக்கம் ஏற்படும்.

உணவும், உணவு வகைகளும் உணவு குறித்த வழக்கங்களும், நம்பிக்கைகளும் சடங்குகளும் கூட ஒரு மக்கள் திரளின் பண்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றன. சமூக, அரசியல் ஆதிக்கங்கள் இவற்றின் குறுக்கு வெட்டாகப் பாய்ந்து தங்கள் அதிகாரத்தை ஒழுங்குபடுத்தித் தக்க வைத்துக் கொண்டுள்ளன

என்பதும் வரலாற்று உண்மைதான். 'மாடு தின்னும் புலையா உனக்கு மார்கழித் திருநாளா?" என்ற கேள்வியோடு மட்டுமே இது நிற்கவில்லை. வேட்டச் செந்நாய் தின்று எஞ்சிய இறைச்சியினை உண்ணும் மலைச்சாதி மக்கள், நரிக்குறவர், எலிக்கறி தின்னும் புலையர், ஈசல் பிடித்து தின்னும் உடலுழைப்புச் சாதியினர், பன்றியைப் பலிகொடுத்து உண்ணும் மக்கள் என்று உண்ணும் உணவே மக்களை அடையாளம் காட்டி, பாரதத்தில் அதிகாரத்தை ஒழுங்கு செய்திருந்தது. தமிழிலக்கியத்திலிருந்து ஏராளமான மேற்கோள் தரும் இந்த நூலில் 'கொழுப்பு ஆ தின்ற கூர்ம படை மழவர்', ஆ உரித்துத் தின்றும் உழலும் புலையர்' பற்றிய குறிப்புகள் காணப் பெறவில்லை. ஆற்றுப்படை நூல்கள் காட்டும் இனக்குழு வாழ்க்கை உணவு முறைகள் பேசப்படவில்லை. மன்னர்கள் 'குளம் தொட்டு வளம் பெருக்கி' நெல் உற்பத்தியைப் பெருக்கினார்கள் என்றால் காடுகளில் வாழ்ந்த மக்கள் தீயிட்டு, நிலந்திருத்திப் புஞ்சை நிலங்களில் தானியங்களைப் பயிரிட்டனர். ஆனாலும் கூட இந்தியாவில் அதிகார வரிசை முறையினை உருவாக்கிய சனாதன தர்மம், உணவு நுகர்விலும் கூட அதை நிலைநிறுத்தி வைத்தது, பிராமணர்கள் புழுங்கல் அரிசியை மட்டுமன்று, பூமிக்கு கீழே விளையும் கிழங்குவகைகளையும் உண்ண மாட்டார்கள். காரணம் பூமிக்குக் கீழே விளைவன விலங்குகளாலும் சூத்திரர்களாலும் உண்ணப்பட வேண்டிய உணவுகளாகும். உருளைக் கிழங்கையும் புலாலையும் பிராமணர்களை உண்ண வைத்த 'நவீனம்' கூட அவர்களைப் பனங்கிழங்கை உண்ண வைக்க முடியவில்லை.

உலைச் சோற்றிலேயே உப்பை இட்டும் சமைக்கும் வழக்கம் ஒடுக்கப்பட்ட மக்களுடையதாக இருந்தது. பயறு வகைகள் 'கீழ் மக்களோடும்', இறப்புச் சடங்குகளோடும் தொடர்புபடுத்தப்பட்டன. இன்னும் தெளிவாகச் சொன்னால், பெருவாரியான மக்களின், பெருவாரியான உணவு வகைகள் திருக்கோயிலுக்குள் முழுமையாக தடை செய்யப்பட்டிருந்தன. இன்னும் கூட அப்பழக்கம் நடைமுறையில் உள்ளது. மிளகாய் வற்றலும், தட்டைப் பயறும், வெங்காயமும், உருளைக்கிழங்கும் தக்காளியும் கூட 'வசதி படைத்த' திருக்கோயில்களின் கருவறைக்குள் இன்றுவரை நுழைய முடியவில்லை. அவற்றை உற்பத்தி செய்யும் மக்களைப் போலவே. மாறாக 'துடியான' கிராமத்துத் தேவதைகள் அரபியர்களின் புகையிலைச் சுருட்டையும் 'பலியாக ஏற்றுக் கொள்கின்றன.

மனித மிருகம் வளர்ச்சி பெற்று மனிதக் கூட்டமாக, இனக்குழுவாக உருமாற்றம் பெற்றதனைக் காட்டி நிற்கும் சான்றுகளில் ஒன்று கூடிப் பகிர்ந்து உண்ணும் பழக்கமாகும், உற்பத்திமுறையில் பின்தங்கியவர்களாகவும், நகர நாகரீக வாசனை படாமலும் காடுகளுக்குள் வாழும் பழங்குடி மக்களிடம் திருமணச் சடங்கிலும், இறப்புச் சடங்கிலும் கூடிப்பகிர்ந்துண்ணும் வழக்கம் இருக்கின்றது. நகர நாகரிகத்தில் போல வெறும் வழக்கமாக இல்லாமல், சடங்குத்தன்மையோடு கூடியதாக இது இருக்கிறது. கூடி உணவு தேடி கூடிப் பகிர்ந்துண்ணும் வழக்கம் இன்றும் கூட ஒரு தொல்லெச்சமாக தமிழகத்தின் மலையடிவாரக் கிராமங்களில் இருப்பதைப் பார்க்கலாம்.

தைப் பொங்கலை அடுத்த மறுநாள் (கரிநாள் என்பது வழக்கு. 'கனு' என்பது மேலோர் மரபு) ஊரிலுள்ள மக்கள் சாதி மத வேறுபாடின்றி காட்டுப் பகுதியில் வேட்டைக்குச் சென்று முயல், உடும்பு, காட்டுக்கோழி, கவுதாரி போன்றவற்றை வேட்டையாடி ஊருக்குள் கொண்டு வந்து ஊர் நடுவில் இறைச்சியைப் பகிர்ந்து எடுத்துக் கொள்கிறார்கள். ஊர் மந்தை 'மன்றம்' ஆக மாற்றம் பெற்று வளர்ந்த கதையின் ஒரு பகுதி இது.

உலகின் தொடக்க காலத் தெய்வங்களில் இந்தச் சமமான பங்கீட்டு முறையினை ஒழுங்குபடுத்திய தெய்வம் ஒன்றும் உண்டு. இத்தெய்வம் பற்றி தொன்மையான தமிழிலக்கியத்தில் சில அருகிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இத்தெய்வத்தைப் 'பால்' என்றும் உரையாசிரியர்கள் 'பால்வரை தெய்வம்' என்று குறிப்பிடுகின்றனர். (பால்-வகுத்தல், பிரித்தல்) சமத்துவம் பேணிய இத்தெய்வத்துக்கு வேதமரபில் 'ரித்' என்ற பெயர் காணப்படுகின்றது. (இத்தெய்வங்களைப் பற்றி தமிழில் க.கைலாசபதியும், பேரா.எஸ்.ராமகிருஷ்ணனும் எழுதியுள்ளனர். ஆங்கிலத்தில் நரேந்திரநாத் பட்டாசாரியா எழுதியுள்ளார். கிரேக்க படிமரபில் இத்தெய்வத்துக்கு 'மீர' Morea என்று பெயர்.)

பகிர்ந்துண்ணும் கலாசாரம் இந்நாட்டுத் தொல்குடி மக்களிடம் அரும்பிய வெளிப்பாடாகும். மேலோர் மரபு பேசும் சனாதான தருமம் மக்கள் கூடியும் கலந்தும் உண்ணும் வழக்கத்தைத் தடை செய்தது என்பதே வரலாற்றுண்மையாகும்.

பிராமண 'யதி (துறவி) அரிசியை மட்டுமே பிச்சை ஏற்றான். சமணத் துறவியோ சமைத்த உணவையே கையினால் பிச்சை ஏற்றான். உணவாக்கத்திலும், உண்ணுவதிலும் சாதியத்தைத்

தாண்டிய மதம் சமணமாகும்; வைதீகமன்று. சமணரும் உண்ணும் மரபில் 'மேலோர்' மரபு பேணிய இடம் ஒன்று உண்டு. உண்ணும்போது பேசுவதைச் சமணம் தடை செய்தது. இந்த வழக்கமே "உண்ணும்போது உரையாடாதார்" என்று அப்பர் தேவாரத்தில் வசையாகவும் மாறியது.

"அனைத்துயிர்களும் அன்னத்திலிருந்து உற்பத்தியானவை; அன்னம் மழையால் உற்பத்தியாகிறது; மழை யக்ஞத்தால் சம்பவிக்கிறது; யக்ஞமாவது கருமத்தால், நற்காவியத்தில் உண்டாகிறது" (பக்.8) என்பதே இந்த நூலின் முதற்பகுதியின் அடிப்படையாகும்.

நூலின் ஆறாம் அத்தியாயம் மனுநீதியின்படி இல்லறத்தான் செய்ய வேண்டிய ஐந்து வகையான 'யக்ஞங்களைப்' பற்றிப் பேசுகிறது. அத்தியாபனம் - பிரம்மயக்ஞம், தர்ப்பணம் -பித்ருயக்ஞம், ஹோமம் தேவயக்ஞம், பலி இடுதல்- பூதயக்ஞம், அதிதி பூஜை - மனுஷ்ய யக்ஞம் ஆகியவையே மனு குறிப்பிடும் ஐந்து யக்ஞங்களாகும் (பக்.118). இந்த ஐந்து பிரிவுக்கும் பிரிவினர்க்கும் இல்லறத்தான் உணவளிக்க வேண்டும். ஆனால் தென்னகத்தில் வள்ளுவர் இல்லறத்தானுக்கு விதித்த 'ஐவர்க்கு அளித்தல்' வேறுபட்ட பட்டியலாக அமைகிறது. தென்புலத்தார் (முன்னோர்), தெய்வம், விருந்தினர், உறவினர், தான் என்ற வள்ளுவநீதி ஐந்து பேரைக் குறிப்பிடுகிறது. இரண்டுக்குள்ள வேறுபாடு கூர்ந்து கவனிக்கத் தக்கது. அடையாளச் சிக்கல் இத்தோடு அமையவில்லை.

உயிர் செகுத்து உண்ணும் வேள்விக்கு (ஹோமம்) உணவளிப்பதில் வள்ளுவர்க்கு உடன்பாடில்லை. மனுவின் கோட்பாட்டை விளக்கும் இடத்தில் நூலாசிரியர்கள் ஒரு சிக்கலை எதிர்கொள்கின்றனர். மனு குறிப்பிட்ட 'அதிதி' என்ற சொற்பொருளில் பிராமணர் அல்லாதவர்கள் சேரமாட்டார்கள் என்றசனாதனக்கொள்கையினை மறுக்கமுற்பட்டிருக்கின்றார்கள். மனுஸ்மிருதியின் 'அதிதி' பற்றிய வரிசைக்கிரமத்தை (பிராமண, சஷத்திரிய, வைசிய, சூத்திர) ஒப்புக்கொள்ளும் நூலாசிரியர்கள் (பக்.130) சிறிது நேரம் கழித்து 'பிராமணரல்லாதவர்கள் அதிதி அல்ல என்னும் மனுவின் மொழி ஒரு இலக்கணக் குறிப்பாகவே தோன்றுகிறது' (பக்.136) என்று சமாளிக்க முற்படுகின்றனர். 'பின்னும் மிருதிகள் செய்தார். அவை பேணும் மனிதர் உலகினில் இல்லை மன்னும் இயல்பின அல்ல அவை மாறிப்பயிலும் இயல்பனவாகும்' என்று 'ஸ்மிருதி நூல்களும் கால ஓட்டத்தில் பின் தங்கிப் போய்விடுகின்றன', என்ற பாரதியின் கருத்து நூலாசிரியர்களுக்கு எட்டவில்லை போலும்.

தேசிய இயக்கத்தில் காந்தியடிகளின் வருகைக்கு முன்னர் கலந்துண்ணும் வழக்கமே கிடையாது என்பது உண்மையல்லவா? 'கௌட சரஸ்வதி பிராமணர்கள் தவிர மற்றவர்கள் கையால் அவர் தண்ணீர்கூட அருந்தமாட்டார்" என்று காங்கிரஸ் தலைவரும் இந்து மகாசபையின் பிதாமகரும் ஆன பண்டித மதன்மோகன் மாளவியாவைப் பற்றி ராஜகுமாரி அமிருதகௌர் எழுதியதனை அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியுமா?

'கல்லைப் போட்டாலும் செரித்துக் கொள்ளுகிற வயிறு' என்று சொல்வார்கள்; அதன் பெயர் இங்கே 'இந்து மதம்' என்பதுதான். எந்தக் கருத்தைச் சொன்னாலும் எதிர்நிற்காமல் 'அதைத்தானே நானும் சொன்னேன்' என்று தன்மயமாக்கிக் கொள்ளும் கொடுமையான உத்தி இது. அதனால்தான் வைதீகத்தில் விரட்டப்பட்ட ஆபுத்திரன் கதையை மீண்டும் வைதீகம் தன்னதாக்கிக் கொள்ள முடிகிறது. இந்த நூலின் அநுபந்தத்தில் தமிழிலக்கியத்தின் பகுதிகள் கருத்து, சூழல் என எந்தப் பொருத்தமும் இன்றி மேற்கோள் காட்டப்பட்டிருப்பதைத் தமிழிலக்கியம் அறிந்தவர்கள் பார்வையிலே புரிந்துகொள்ள முடியும்.

அதனால்தான் "பால் பல வூறுக பகடு பல சிறக்க", "நெல்பல பொலிக பொன்பெரிது சிறக்க" என்ற உற்பத்திப் பண்பாடு சார்ந்த ஐங்குறு நூற்றுப் பாடல் இவர்களது கண்களுக்குத் தப்பியிருக்கிறது. 'கோயில் பிச்சை'யும் அன்னதானங்களும் மட்டுமே கண்ணில் பட்டிருக்கின்றன.

சின்னவயதில் ஆடிமாத இரவுப்பொழுதுகளில் நாங்கௗெல்லாம் தாய்மடியில் அஞ்சி ஒளிந்து கொள்ளும்படி ஓங்கி ஒலித்த இராப்பாடியின் (புரத வண்ணான்) குரல் எனக்கு நினைவுக்கு வருகின்றது. 'பட்டி பெருக, பால்பானை பொங்க, எட்டு லெச்சுமியும் ஏறிவிளைய கீழவீட்டு அம்மா படிபோடுங்க, மேல வீட்டு அம்மா படிபோடுங்க", உற்பத்திக் கலாசாரத்தையும், பகிர்ந்துண்ணும் பண்பாட்டினையும் எனக்குக் கற்றுக் கொடுத்தவன் அவன்தான். இந்த நூலாசிரியர்கள் அவனை அறியமாட்டார்கள்.

பீகார் அருங்காட்சியகத்திலுள்ள தீதர்கஞ்ச் யட்சி என்னும் சமண சிற்பத்தை நினைவு படுத்துவது போல அட்டைப்படச் சிற்பம் அமைந்துள்ளது. அதிலொன்றும் வியப்பில்லை. பௌத்த மரபின் 'சிந்தாதேவி'யும் சமணர்களின் அன்னதானக் கோட்பாடும்தானே வைதீக மரபின் அன்னபூரணித் தெய்வத்தை உருவாக்கின.

"தன் பிறந்த வீட்டுக்கு வருகை தந்திருக்கும் சுவாஸினிகள் குமாரிகள், வியாதியஸ்தர்கள், கர்ப்பிணிப் பெண்கள் முதலானோருக்கு" என்பதாக 'சனாதனம் தவறாத நடையில்' நூல் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

"இம்மாபெரும் புண்ணிய பூமியின் ஊடே மாபெரும் அன்னதானம் மீண்டும் தழைக்குமாக" (பக்.306) என்ற மாபெரிய வாழ்த்துடன் இந்த நூல் முடிந்திருக்கிறது. 'மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம்' மாய இந்த வாழ்த்துகள் போதுமானவையல்ல வழித்துறையுமல்ல.

✧

காலச்சுவடு
ஜனவரி-மார்ச் 2000

12

திருக்குறள் அறிமுகவுரை

உலக நாகரிகத்திற்குத் தமிழினத்தின் பங்களிப்புகள் பல. அவற்றுள் இரண்டைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஒன்று, தமிழிசை; மற்றொன்று திருக்குறள். தமிழில் மிகச் சில சொற்களில் ஆன கவிதை வடிவம் குறள் வெண்பா ஆகும். மிக விரிந்த உலகச் சிந்தனைகளை மிகக் குறுகிய வடிவத்தில் தரமுடியும் என்பதை உலக இலக்கிய அரங்கில் முதலில் வள்ளுவரே செய்து காட்டினார் எனலாம். சின்னக் குழந்தையின் சிரிப்பு முதல் 'மெய்யுணர்தல்' வரை வள்ளுவர் மண்ணுக்கும் விண்ணுக்குமான சிந்தனைகளைத் தம் அளவிற் சிறிய நூலில் பொதிந்து வைத்துள்ளார்.

வள்ளுவரது காலம் பல்வேறு அறிஞர்களால் கி.மு. முதல் நூற்றாண்டில் இருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை அறுதியிடப்படுகிறது. இலக்கிய வரலாற்று நோக்கில் பார்ப்பதானால், சங்க இலக்கியங்கள் பெரும்பாலானவற்றுக்குத் திருக்குறள் காலத்தால் பிற்பட்டது. சிலப்பதிகாரத்துக்கு முற்பட்டது.

இளங்கோவும், கம்பரும் ஆக்கியளித்த பேரிலக்கியங்களில் 'தமிழ்' என்ற அடையாளத்துக்குள்ளேயே அவர்களது முகம் தெரியும். வள்ளுவத்தை மட்டும் 'உலகப்பொதுமறை' என்கின்றோம். காரணம் என்ன? தமிழ் மொழியில் அமைந்தது என்பதைத்தவிர, இனம், நாடு குறித்த வெளிப்படையான தன்னடையாளம் எதையும் வள்ளுவர் தம்நூலில் கூற முற்படவில்லை. தமிழ், தமிழ்நாடு, வஞ்சி, மதுரை, பாண்டியர், சோழர் ஆகிய அடையாளம் காட்டும் எந்தச் சொல்லும் திருக்குறளில் காணப்படவில்லை. வள்ளுவரின் சமகாலத்தில் ஏன், அவருக்குப் பின்னரும் கூட

இந்தியத் துணைக்கண்டத்தில் இலக்கியங்களின் வழி அறம் பேச வந்தவர்கள் சாதி, சமயம், நிலப்பகுதி ஆகிய அடையாளங்களைத் தாண்டிச் செல்ல இயலவில்லை. வள்ளுவர் மனிதப் பொது அறம் பேசியவர். அவரது இயற்பெயர்கூட நம்மால் அறியப்பெறவில்லை. வள்ளுவர் என்பது ஒரு குடிப்பெயராகும். 'இன்பத்துப்பாலைக் கொண்டும் மக்கட்பேறு அதிகாரத்தைக் கொண்டும் அவர் மணமானவர், மழலை இன்பம் துய்த்தவர் என்பதை அறிய முடிகிறது.

'நேற்று வந்த பசி இன்றும் வந்துவிடுமோ', (குறள் எண்.1048) என்று அஞ்சுகிற இடத்திலும் 'நெருப்பிலே தூங்கலாம், பசியிலே தூங்க முடியாது' என்று தன்னிரக்கம் காட்டும் இடத்திலும் வறுமையோடு போராடிய வள்ளுவரின் தனி வாழ்க்கையினை நாம் உய்த்து உணரலாம். இவையன்றி, திருக்குறளிலிருந்து அந்த மானுடப் பெருமலையின் எந்தப் பக்கத்தையும் நம்மால் அறிய முடியவில்லை.

இனி, வள்ளுவரின் காலத்தில், தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த அல்லது தமிழ்ச் சமூகத்தை இயக்கிக் கொண்டிருந்த கருத்தியல்களை நோக்கலாம். தமிழகத்தில் புகுந்த வைதீகப் பார்ப்பனர்கள் தமிழ்நாட்டு அரசு அதிகாரத்திற்கு அருகில் அமர்ந்துள்ளனர். "ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப் பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்த" தமிழ் மன்னர்கள் இருந்திருக்கிறார்கள். மறுபுறமாக, வைதீகத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த சமண, பௌத்த மதங்கள் தமிழ்நாட்டில் தங்கள் செல்வாக்கைப் பரப்பத் தொடங்கியிருந்தன. வள்ளுவர் வைதீகத்திற்கு எதிராகக் குரலெழுப்பியவர். 'பிறப்பு வழி வேற்றுமையே' வைதீகக்கொள்கையின் உயிர்நாடி. இந்தக்கொள்கை அதிகாரத்திற்கு நெருக்கமாக இருந்தபொழுது 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற வள்ளுவரின் குரல் கலகக் குரல்தானே. அதுபோல 'அந்தணர்' என்ற சொல்லைப் பார்ப்பனர்கள் தமக்கு வழங்கிய காலத்தில், வள்ளுவர் அச்சொல்லுக்கு 'அந்தணர் என்போர் அறவோர்' என்ற எதிர்மறை வரைவிலக்கணம் தர முற்படுகின்றார்.

நமது நிகழ்கால நோக்கில் வள்ளுவத்திற்குப் 'போதாத காலம் ஒன்று இருந்தது. 17,18,19ம் நூற்றாண்டுகளில் தென்னகத்திற்கு வந்த, மேல்நாட்டு அறிஞர்கள் திருக்குறளை உச்சிமுகர்ந்து தலைமேல் வைத்துக் கொண்டாடினார்கள். ஆனால் 18ஆம்

நூற்றாண்டில் வந்த காலனிய அரசு கல்கத்தாவில் மையம் கொண்டிருந்தது. எனவே உள்நாட்டு நீதிமுறைகளைத் தொகுத்த காலனி ஆட்சியாளர்களின் பார்வையில் திருக்குறள் படவில்லை. அதன் விளைவாக மனுதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட 'இந்துச் சட்டம்' இந்திய ஏழை மக்களின் தலையில் விடிந்தது. ஆனாலும் கூட திருக்குறளை ஐரோப்பிய மொழிகளில் பெயர்த்த நன்றிக்குரியவர்களின் பெயர்களை இங்கே நினைக்கலாம்.

ஜி.யு. போப் (G.U.Pope), கிண்டர்ஸ்லி (Kindersley), எல்லீஸ் (F.W.Ellis), ட்ரூ (W.H.Dres), சார்லஸ் கி. கோவர் (C.E. Gover), ராபின்ஸன் (E.G.Robinson), லாசரஸ் (Rev.G.Lazarus), ஸ்காட்(T.M.Scott), பாப்லி (H.A.Popley) ஆங்கிலத்திலும், பெஸ்கிப் பாதிரியார் (Father Beschi), டாக்டர் கிரௌல் (Dr.Graul) ஆகியோர் இலத்தீன் மொழியிலும் ஏ.எப்.காம்மர்ஸ் (A.F.Commers), ப்ரீட்சிச் ரூகர்ட் (Friedrich Ruckert) ஆகிய இருவரும் ஜெர்மன் மொழியிலும் இ.ஏரியல் (E.Ariel), டிடுமாஸ் (P.G.De Dumast), எம்.லெமரேஸ், லூயி ஜெகோலியா (Louis Jacolliot), பொண்டேனோ (G.de. Barrigue de. Fontainieu) போன்றோர் பிரெஞ்சு மொழியிலும் திருக்குறளைப் பெயர்த்துள்ளனர். கி.பி.1810இல் கிண்டர்ஸி (Kindersley) திருக்குறளின் சில பகுதிகளை முதலில் அச்சு வாகனம் ஏற்றினார். அதே கால அளவில் 'எல்லீசன்' என்ற தம்பெயரைத் தமிழில் எழுதியவரும், அன்றைய சென்னை மாநிலத் தலைமை நிதி அதிகாரியுமான எல்லீஸ் (F.W.Ellis) வள்ளுவதாசனாக வாழ்ந்திருக்கிறார். கி.பி.1818இல் சென்னையில், உருவான குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க எல்லீஸ் வெட்டிய கிணறுகளில் ஒன்று சென்னை ராயப்பேட்டை பெரிய பாளையத்தம்மன் கோயிலில் இன்றும் உள்ளது. இக்கிணற்றின் கைப்பிடிச் சுவரில் பதிக்கப்பட்டுள்ள ஒரு கல்லில் எல்லீஸ் துரை 1818ம் ஆண்டில் வெட்டி வைத்த கல்வெட்டு இன்றளவும் நம் பார்வைக்கு உள்ளது. அதில்

சமயங்கொண்ட தொண்டிய சாணுறு நாடெனும்
ஆழியிலிழைத்த வழகுறு மாமணி
குணகடன் முதலாக குடகடலளவு
நெடுநிலத்தாழ நிமிர்ந்திடு சென்னப்
பட்டணத் தெல்லீச னென்பவன் யானே
பண்டார காரியப் பாரஞ்சுமக்கையிற்
புலவர்கள் பெருமான் மயிலையம்பதியான்

தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்
திருக்குற டன்னிற் றிருவுளம் பற்றிய
இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு
என்பதின் பொருளை யென்னுள்ளாய்ந்து..

என்ற வரிகளில் ஓர் அழகிய குறளை மேற்கோளாகக் கையாண்டிருக்கிறார்.

மற்றொரு கல்வெட்டு திண்டுக்கல் நகரிலுள்ள எல்லீஸ் கல்லறையின் மீது பொறிக்கப்பட்டுள்ளது இதில் எல்லீசன் என்றும் இயற்பெயருடையோன்

திருவள்ளுவப் பெயர்த் தெய்வஞ் செப்பி
அருள் குறள்நூலுள் அறப் பாலினுக்குத்
தங்கு பல நூல்உ தாரணக் கடலைப் பெய்(து)
இங்கி லீசுதனில் இணங்க மொழி பெயர்த்தோன்.

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு களிலிருந்து எல்லீஸ் துரையின் ஆழ்ந்த தமிழ்ப்புலமையையும் அவருக்குத் திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் இருந்த ஈடுபாடும் தெளிவாகத் தெரிகின்றன.

எல்லீஸ் மாநில நிதி அதிகாரியாகவும், அக்கசாலை (Mint) யின் தலைவராகவும் இருந்த காரணத்தால், திருவள்ளுவர் உருவம் பொறித்த (புழக்கத்தில் வராத) தங்க நாணயங்களை வெளியிட்டார் என்று தெரிகிறது. இந்நாணயங்களை அண்மைக்காலத்தில் நாணயவியல் அறிஞர்கள் ஐராவதம் மகாதேவன் அளக்குடி ஆறுமுக சீதாராமன் ஆகிய இருவரும் கண்டுபிடித்துள்ளனர்.

திருக்குறளின் பெருமையில் நாட்டமுடைய உரையாசிரியர்கள் பலர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளனர். 12ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே, பரிமேலழகர் உள்ளிட்ட பத்துபேர் குறளுக்கு உரை செய்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டில் சாதி, சமய எல்லை கடந்து 50க்கும் மேற்பட்டோர் உரை எழுதியுள்ளனர். திருக்குறளுக்கு எழுந்த உரை நூல்களுள் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவை சில. பரிமேலழகர், மு.வரதராசனார், தேவநேயப் பாவாணர் ஆகியவரோடு ஐரோப்பிய மொழிகளில் பெயர்த்த வீரமாமுனிவர் இந்நூலின் அறத்துப்பாலுக்கும் பொருட்பாலுக்கும் தமிழில் உரை எழுதியுள்ளார்.

திருக்குறளுக்கு இருபதாம் நூற்றாண்டில் ஒரு பெண்மணியும் உரை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க செய்தி. திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஜெமீன் தாரிணி கி.சு.வி. இலட்சுமி அம்மணி என்பார் 1929ல் திருக்குறள் தீபாலங்காரம் என்ற பெயரில் சாது அச்சுக்கூடப் பதிப்பாக ஒரு உரை நூலை வெளியிட்டுள்ளார்.

ஜார்ச் உக்ளோ போப் என்ற ஜி.யு.போப் (1820-1908) என்பது தமிழர்கள் நன்றியுடன் நினைக்கக்கூடிய பெயர்களில் ஒன்று. திருக்குறளை முழுமையாக ஆங்கிலத்தில் முதலில் மொழிபெயர்த்தவர் இவரே. 1886இல் இவரது திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியானது. தமிழ் எழுத்து இலக்கியங்களை முறையாகப் பயின்ற ஜி.யு போப் தமிழ்ப் பேச்சு மொழியின் நுட்பங்களையும் உணர்ந்தவர். அவரது 'திருவாசக' மொழிபெயர்ப்பு உலகறிந்த ஒன்று. சைவ சாத்திர நூலான 'திருவருட் பயனையும், தமிழ்ச் சமூகத்தின் எட்டாம் நூற்றாண்டு வாழ்வியலைக் காட்டும் 'புறப்பொருள் வெண்பாமாலை' என்னும் இலக்கண நூலையும் மொழிபெயர்த்துள்ளார். நீதி நூலான நாலடியாரையும் மொழிபெயர்த்தார். புறநானூற்றின் சில பாடல்களை மொழி பெயர்த்ததோடு அந்நூல் குறித்த கட்டுரைகளையும் அக்கால இதழ்களிலே எழுதியுள்ளார். போப் இலண்டனில் 1908இல் காலமானார்.

போப் குறள் மொழிபெயர்ப்பு நூலைப் பின்னர் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இருபதாம் நூற்றாண்டில் வெளியிட்டது. அதில் போப் எழுதிய முன்னுரையின் சில பகுதிகள் விடுபட்டுள்ளதாக கா.மீனாட்சிசுந்தரம் குறிப்பிடுகின்றார்.

இங்கு திருக்குறளுக்கு மட்டும் போப்பின் ஆங்கில மொழிபெயர்ப்பு எடுத்தாளப்பட்டுள்ளது. இந்நூல் வெளியீடு குறளை யாவரிடத்தும் கொண்டு செல்வதற்கும், தமிழ் அறியாதாரிடத்தும் குறளை அறிய வைப்பதற்குமான முயற்சியாகும்.

✧

யாதுமாகிப் பதிப்பகம் வெளியிட்ட
ஜி.யு.போப் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்புக்கான
முன்னுரை

13

பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும் காலம் எல்லாம்

உத்தமதானபுரம் வேங்கட சாமிநாதையர் எனும் உ.வே.சா என்பது இருபதாம் நூற்றாண்டுத் தமிழர்களால் நன்றியுணர்வுடன் நினைக்கப்படும் பெயராகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தொடங்கிய அவரது 60 ஆண்டுகாலப் பேருழைப்பு தமிழர்களின் இலக்கியப் பெரும் புதையலைக் கண்டெடுத்துக் கொண்டு வந்தது. உலக நாகரிகத்திற்குத் தமிழர்களின் பங்களிப்பான சங்க இலக்கியங்களை தேடிக் கண்டெடுத்து அச்சிட்டு வெளிப்படுத்தியது அவர் தமிழ்ச் சமூகத்திற்கு செய்த மிகப்பெரிய தொண்டாகும். 87 வயது வரையிலான அவரது முழு வாழ்க்கையும் இப்பெரும் பணிக்கென நேர்ந்து விடப்பட்டது போலவே அமைந்திருந்தது.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனும் இரண்டு பெரும் இலக்கியத் தொகுதிகளை அவர் தேடி நடந்த காலத்தில் தமிழநாட்டிலே மின்சாரம் கிடையாது. பேருந்து வசதிகள் கிடையாது. உணவகங்களோ, தங்கும் விடுதிகளோ கிடையர்து. ஒன்றிரண்டு தொடர்வண்டித் தடங்கள் மட்டுமே இருந்தன. அவரது பயணத்தின் பெரும் பகுதி மாட்டு வண்டிகளில்தான் கழிந்தது.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை மட்டுமின்றித் தமிழர் பெருஞ்செல்வங்களான சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகியவற்றையும் அவரே உரையுடன் அச்சிட்டு வெளிக்கொணர்ந்தார்.

ஐயர் அவர்களின் திருநெல்வேலிப் பயணங்கள் அவரது வாழ்வில் குறிப்பிடத் தகுந்தவை. இச்சிறு வெளியீடு வாசிப்பவர்களுக்கு இதனை நன்கு உணர்த்தும். இதற்கான பின்புலத்தை நாம் விளங்கிக் கொள்வது அவசியம். ஐயர் அவர்கள் பெற்ற பெரும்பேறு அவரது பதினாறாவது வயதில் அவரது தந்தையார் அவரை திருசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தமிழ் பயில மாணவனாகச் சேர்த்துவிட்டதுதான். பிராமணர்களாகப் பிறந்தவர்கள் தமிழிலக்கியக் கல்வியை விரும்பாத காலம் அது. அவருக்குக் கிடைத்த மற்றொரு வாய்ப்பு தன் ஆசிரியர் வழியாக திருவாவடுதுறை மடத்தோடு கிடைத்த தொடர்பாகும். திருவாவடுதுறை மடத்துத் தலைவர்கள் அக்காலத்தில் தமிழிலக்கியத்தில் மிகுந்த பயிற்சி உடையவர்களாக இருந்தனர். சைவர்களுக்கான மடம் என்றாலும் அம்மடத்தில் பெரும்பாலும் திருநெல்வேலிச் சைவ வேளாளர்களே மடாதிபதிகளாகவும், தம்பிரான்களாகவும் பொறுப்பேற்று இருந்தார்கள்.

காலனிய ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் பெருமளவு கல்வி அறிவு பெற்றவர்களாகவும் அவர்களே இருந்தார்கள். அவர்களின் வீடுகளில் நிறைய ஏடுகளைச் சேர்த்து வைத்திருந்தார்கள். இலக்கியப் பயிற்சியும், ஏடு சேகரிப்பும் உடையவர்கள் 'பிள்ளை' என்ற தங்களின் சாதிப் பட்டத்திற்குப் பதிலாக 'கவிராயர்' என்ற பட்டம் சூட்டிக் கொண்டார்கள். தமிழ்க் கல்வி பயில விரும்பிய அக்கால ஐரோப்பியர்களில் பலருக்குக் கவிராயர்களே ஆசிரியர்களாக இருந்திருக்கின்றனர். 1832இல் பாளையங்கோட்டையில் இருந்து கொண்டு ரேனியஸ் அடிகளார் என்ற செருமானியர் 'பூமி சாஸ்திரம்' என்ற முதல் தமிழ் அறிவியல் நூலை எழுதினார். இவருக்குத் தமிழாசிரியராக வாய்த்தவர் பாளை, வண்ணார்பேட்டையில் இருந்த திருப்பாற்கடல்நாதன் கவிராயர் ஆவார். இவரது குடும்பத்தாரைப் பற்றியும் உ.வே.சா. தம் நூலில் குறிப்பிடுகின்றார். வடமொழி அல்லாத தமிழ் மரபுகளை ஐரோப்பியர் அறிந்து கொள்ள, கவிராயர்களே பெரும் உதவியாக இருந்துள்ளனர். ஐயருக்குக் கிடைத்த திருவாவடுதுறை மடத்துத் தொடர்பு பழந்தமிழ் இலக்கியச் செல்வங்களைத் திருநெல்வேலி மாவட்டத்தில் தேடுமாறு அவருக்குக் கைகாட்டி உதவியது.

ஐயர் அவர்கள் பதிப்பித்தநூல்களின் முன்னுரையிலிருந்து ஒவ்வொரு நூலுக்கும் அவருக்குத் திருநெல்வேலி

மாவட்டத்திலிருந்து ஒன்று அல்லது இரண்டு பிரதிகள் கிடைத்திருக்கின்றன என்பது தெரிய வருகின்றது. அவரது திருநெல்வேலிப் பயணம் நிகழ்ந்த காலமெல்லாம் 1888, 1889, 1890 ஆகிய ஆண்டுகளில் ஆகும். அக்காலத்தில் திருநெல்வேலியிலிருந்து கிழக்கே வெள்ளூர், ஸ்ரீவைகுண்டம், பெருங்குளம், ஆழ்வார் திருநகரி ஆகிய ஊர்களுக்கும் தெற்கே களக்காடு ஆகிய ஊர்களுக்கும் மேற்கே அம்பாசமுத்திரம் வீரகேரளம்புதூர் (ஊற்றுமலை), குற்றாலம் ஆகிய ஊர்களுக்கும், வடமேற்கே கடையநல்லூர், சங்கரன்கோவில், கரிவலம்வந்தநல்லூர் ஆகிய ஊர்களுக்கும் அவர் மாட்டு வண்டியிலே பயணம் செய்திருக்கின்றார் என்பது தெரிகின்றது. பத்துப்பாட்டு மூலம் முழுவதும் அடங்கிய பிரதி அவருக்கு களக்காட்டிலிருந்த தெற்கு மடத்தில்தான் கிடைத்தது. ஐயர் அவர்கள் கைக்குக் கிடைத்த ஏடுகள் எல்லாம் அரைப்பிரதிகளும் குறைப்பிரதிகளும்தான். ஏடுகளில் சில மட்டுமே எடுத்துப் பயன்படுத்தும் நிலையில் இருந்தன.

ஐயர் அவர்களின் நண்பரும் அவரைப் போன்றே பதிப்புத்துறையில் ஈடுபட்டவருமான யாழ்ப்பாணத்து சி.வை. தாமோதரம்பிள்ளை அக்காலத்தில் ஏடுகள் கிடைத்த நிலையினைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "ஏடு எடுக்கும்போது ஓரஞ்சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முறிகிறது. ஒற்றை புரட்டும் போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோவென்றால் வாலுந் தலையுமின்றி நாலு புறமும் பாணக் கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது" படிப்பாரும் பாதுகாப்பாரும் இல்லாமல் கரையானால் சிதிலமடைந்த ஏடுகளின் நிலைமை இப்படித்தான் இருந்தது.

இந்த நிலையிலிருந்து ஏடுகளை வாசிப்பதே பெருந்துன்பம். அவற்றின் பாட வேறுபாடுகளைக் கண்டறிந்து மூலப்பிரதியினை மீட்டுருவாக்கம் செய்வதென்பது ஞானசம்பந்தர் செய்ததுபோல எலும்பைப் பெண்ணுருவாக்கிய கதைதான். அத்தோடு உரைகளையும் படித்து, அவற்றின் பொருளை உணர்ந்து, விளங்காத பகுதிகளுக்கு உரை எழுதி, ஒப்புமைப் பகுதிகளையும் பிற இலக்கியங்களிலிருந்து கண்டெழுதி, அன்றைக்கிருந்த அச்சுக்கூட வசதிகளைக் கொண்டு இவற்றை வெவ்வேறு எழுத்துருக்களில் பதிப்பித்தது என்பது இன்றைக்குப் பல்கலைக் கழகத் துறைகளாலும் இயலாத செயலாகும். அந்தப் பேருழைப்பிற்கு

நன்றி செலுத்தும் விதமாகவே சென்னைப் பல்கலைக்கழகம் அவருக்கு 1932ல் டாக்டர் பட்டம் வழங்கியது. 1948இல் அவர் பணியாற்றிய மாநிலக் கல்லூரி முன்னர் அவருக்குச் சிலை வடிக்கப்பட்டது.

அவரது பேருழைப்பினை அக்காலத்தில் கண்டு வியந்த அறிஞர்கள் சி.வை.தாமோதரம் பிள்ளை, ஜி.யு.போப், பாரீஸ் நகரப் பேராசிரியர் ஜூலியன் வில்சன் ஆகியோர் ஆவார். திருவாவடுதுறை மடத்தைப் போல அவரை ஆதரித்த பெருமக்களில் சேலம் இராமசாமி முதலியார், பூண்டி அரங்கநாத முதலியார், வித்துவான் தியாகராசச் செட்டியார், பாண்டித்துரைத் தேவர் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர் ஆவார்.

தமிழ் இன்று செம்மொழி என்று உயர்தகுதியினை அடைந்துள்ளது. இதற்கான அடிப்படை தமிழில் பிறந்த சங்க இலக்கியங்களே ஆகும். அவற்றை மீட்டெடுத்துத் தந்த உ.வே. சா தமிழ் இனத்தின் நன்றிக்குரியர். அவரின் சங்க இலக்கிய மீள் கண்டுபிடிப்பே வைதிகத்துக்கு மாற்றான ஒரு பெரும் பண்பாடு தென்னிந்தியாவில் பிறந்து வளர்ந்த வரலாற்றுண்மையினைத் தமிழ்நாட்டுக்கு எடுத்துக்காட்டியது. அதுவே தமிழ்த்தேசிய இன அடையாளத்தைக் கண்டது. திராவிட இயக்கத்தார்க்கும் முற்போக்கு இயக்கத்தார்க்கும் அடுத்த கட்ட வளர்ச்சிக்கான திசையினையும் காட்டியது.

சென்னை அரசாங்கக் கல்வித்துறை 1906ல் ஐயரவர்களுக்கு 'மகாமகோபாத்யாய' (பெரும்பேராசிரியர்) பட்டம் வழங்கிய போது தமிழ்ச் சமுதாயத்தின் நன்றியை ஐயரவர்களுக்குக் கவிஞர் பாரதியார் பின்வருமாறு புலப்படுத்தினார்.

நிதியறியோம் இவ்வுலகத் தொருகோடி
இன்பவகை நித்தம் துய்க்கும்
கதியறியோம் என்று மனம் வருந்தற்க
குடந்தைநகர்க் கலைஞர் கோவே
பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெல்லாம் புலவோர் வாயிற்
துதியறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்குவாயே

✧ தமுஎகச வெளியிட்ட உ.வே.சா சிறுவெளியிட்டுக்கான முன்னுரை

14

தேவாங்கர் வாழ்வும் வழிபாடும்

கடந்த இருபது ஆண்டுகளாக தமிழில் புதிய அறிவுத்துறைகள் மலர்ச்சி பெற்று வருகின்றன. அவற்றுள் ஒன்று இனவரைவியல் (Ethnography) ஆகும். திரு.சொ.சாந்தலிங்கத்தின் நூல் இந்த வகையினைச் சேர்ந்ததாகும். மலர்ந்து வரும் அறிவுத்துறையில் வெளிவரும் நூல் என்பதால் இந்நூல் வரவேற்புக்கும் பாராட்டுக்கும் உரியதுதான்.

பெரியாரின் பகுத்தறிவு இயக்கத்தைப் படித்த தமிழர்கள் தவறாகப் புரிந்து கொண்டதனால் தங்கள் சாதி உட்பட, சாதிகளைப் பற்றிய எழுத்தும்பேச்சும் தவிர்க்கப்பட வேண்டியவை என்று தவறாகக் கணித்து விட்டனர். அண்மையில் நாட்டார் வழக்காற்றியல் துறையின் எழுச்சிக்குப் பின்னர் இக்கருத்து தவறு என்பது நிலைபெற்று விட்டது. தமிழ்நாட்டைப் போல நெடிய வரலாறும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாதிகளையும் உடைய சமூகத்தின் தொல்வரலாறு சாதிப்புராணங்களிலும், தொன்மங்களிலும் சடங்குகளிலும் புதையுண்டு கிடக்கின்றது என்பதை இப்போதுதான் நாம் உணர்கிறோம்.

தமிழ்நாட்டில் இத்தகைய உணர்வைத் தோற்றுவித்த ஆய்வாளர்களில் அறிஞர் மா.இராசமாணிக்கனார், எம்.சீனிவாச அய்யங்கார் ஆகிய இருவரையும் நன்றியோடு நினைவு கூறுதல் வேண்டும். அந்த வகையில் தமிழ்ச்சாதிகள் மட்டுமின்றி தமிழகத்துக்குள் புலம் பெயர்ந்த பிறமொழிச் சாதித் தொகுதிகளும் ஆராய்ச்சிக்கு உரியனவாகும். தமிழகத்திற்குள் புலம் பெயர்ந்து வந்த பிறமொழிபேசும் சாதியர்கள்தான் தமிழகத்தில் பருத்தி உற்பத்திக்கும் கடந்த பத்து நூற்றாண்டுகளாக மிகப்பெரிய பங்களிப்பைச் செய்து வந்துள்ளனர் என்பது தமிழ்நாட்டின்

சமூக, பொருளாதார வரலாற்றில் மிக முக்கியமான வரலாற்றுப் பதிவாகும். புலம் பெயர்ந்த மக்களானாலும் அவர்கள் திராவிடக் கலாச்சாரத்தின் பங்காளிகளாகவே இருந்து வருகின்றனர் என்பதும் சமூக வரலாற்றுண்மையாகும்.

திராவிடக் கலாச்சாரத்தின் அடிக்கூறுகளின் மையமான ஆதிச்சநல்லூர் நாகரிகம் தொட்டு நம்மோடு கலந்து நிற்பது தாய்த் தெய்வ வழிபாடாகும். தமிழ்நாட்டில் கன்னடம் பேசும் தேவாங்கரின் சௌடாம்பிகை அம்மன் வழிபாடும் அந்த வகையிலேயே சேர்த்து எண்ணப்பட வேண்டியதாகும்.

இன்னும் ஒரு வரலாற்றுக் குறிப்பினையும் இவ்விடத்தில் பதிவு செய்ய வேண்டும். தமிழ்நாட்டு அரசுகளில் முழுநேரப்படை வீரர் எண்ணிக்கை மிக குறைவு. போர்க்காலங்களில் நெசவு, கோயிற் காவல் முதலிய பணி செய்யும் சாதியரும் ஆயுதம் ஏந்திப் போராடி இருக்கின்றனர். சௌடாம்பிகை அம்மன் வழிபாட்டில் சத்தி நிறுத்துதல் என்னும் சடங்கு கன்னட தேவாங்கர், குறுவாள் (அ) குத்துவாள் ஏந்திப் போராடிய சாதியர் என்பதைக் காட்டுகின்றது. பேராண்மையோடு தங்கள் குருதியினைத் தெய்வத்திற்குப் படைக்கும் இச்சடங்கும் திராவிடப் பண்பாட்டின் ஒரு கூறுதான். இன்னும் தெளிவாகச் சொல்லுவதனால் கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் ஒருதிரத்தில் உதித்தெழுந்த கதையின் பகுதி இது.

சிலநாட்கள் என் மாணவராகவுமிருந்த திரு.சொ. சாந்தலிங்கம் அவர்களிடமிருந்து நானும் சில விளக்கங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறேன். அவரின் இந்தச் சிறுநூல் அவர் புதிய துறையில் தடம் பதித்திருப்பதைக் காட்டுகிறது. இப்புது நெறியில் அவரும் ஏனைய தமிழ் ஆய்வாளர்களும் இன்னும் நெடுந்தூரம் போக வேண்டும். அப்போதுதான் தமிழக வரலாறு முழுமை பெறும்.

நூலாசிரியரின் முயற்சிக்கும் உழைப்புக்கும் எனது பாராட்டுகள்.

✧

முனைவர் சொ.சாந்தலிங்கம் நூலுக்கான அணிந்துரை.

15

மரபும் புதுமையும்

தகவல் தொடர்பு சாதனங்களின் வீச்சுகளுக்கு உட்பட்ட ஒரு பத்தாண்டுகளில் ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலை சமூக மாற்றத்துக்கான கருத்துக்களைப் பேச இவ்வளவு இளைஞர்களை ஒருசேரச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நான் நகரத்தின் உட்பகுதியில் வசிக்கிறேன். ஞாயிற்றுக் கிழமை மாலை மாடியில் இருந்து பார்த்தால் மதுரை குண்டு வீச்சில் காலியான நகரம் போல இருக்கும்.

மரபு-புதுமை என்கிற இரண்டு சொற்கள் அடிக்கடிப் பேசப்படுகிற சொற்கள். இன்றைக்கு நாம் எங்கே நின்று கொண்டிருக்கிறோம்? நம்முடைய நாடு எங்கே நின்று கொண்டிருக்கிறது? இந்த நாட்டினுடைய பெருவாரியான மக்களின் ஆசைகள்-கோபங்கள்-ஏக்கங்கள்-தாகங்கள்-நம்பிக்கைகள்-கனவுகள் இவைகளெல்லாம் என்னென்ன? என்பதெல்லாம் பற்றி உங்களுக்குத் திட்டவட்டமான கருத்துக்கள் இருக்குமென்று நினைக்கிறேன்.

பன்னாட்டு மூலதனமுடைய பெரிய நிறுவனங்கள் இந்தியாவுக்குள் இறங்கி இருக்கின்றன. எந்த தேசத்திலே உப்பெடுப்பதற்காக காந்தியடிகள் பெரிய போராட்டத்தை நடத்தினாரோ அந்த தேசத்தில் அதே மாநிலமாகிய குஜராத்தில் உப்பெடுத்து விற்பதற்காக கார்கில் இண்டியா என்ற வெள்ளைக்காரக் கம்பெனியை கூட்டி வந்தார்கள். உப்பெடுப்பதற்கு 50,000 ஏக்கர் நிலத்தைக் கொடுத்தார்கள். உப்புச்சத்தியாக்கிரகம் ஒரு வரலாற்றுக் காரியமாகப் பேசப்படுகிற

தேசத்தில், உப்பெடுக்க மறுபடியும் அவனைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். நாட்டின் நிலைமையைச் சொல்ல இன்றைக்கு இது ஒன்று போதும். இன்னொன்றையும் சொல்ல வேண்டும். அதே குஜராத் மாநிலத்தில் 50,000 மக்கள் திரண்டு எழுந்து நிலத்தைக் கொடுக்கக் கூடாது என்று போராடினார்கள். அரசாங்கம் எல்லாவிதப் பாதுகாப்பும் கொடுத்தபிறகும் கூட, கார்கில் இண்டியா நிறுவனம் உப்பெடுக்கிற தொழிற்சாலையை நம்மால் நடத்த முடியாது என்று விட்டுவிட்டுப் போய்விட்டது. அதுவும் இன்றைய இந்தியாதான்.

சரி. மரபு என்கிற செய்தியைப் பற்றிப் பேசுவோம். மரபு என்று சொன்னவுடன் ராஜா, ராணி, கோட்டைகள் வேகமாக வந்து கொண்டிருக்கிற குதிரைகள் என்று எல்லோரும் ஏதோ ஒரு பழைய காலத்தை நினைக்கக் கூடாது. மரபு என்பது வழிவழியாக வருகிற ஒரு வழக்கம். ஆனால் அது வெறும் வழக்கம் அல்ல. அந்த வழக்கம் உருவாக பல ஆண்டுகாலம் ஆகி இருக்கின்றது. மரபுகள் உருவாக பலநூற்றாண்டு காலம் ஆகி இருக்கின்றது. மரபுகள் பேணப்பட வேண்டியன என்கிற கருத்து நம்முடைய அறிஞர்களால் 2000 ஆண்டுகளுக்கு முன்பே வைக்கப்பட்டிருக்கிறது.

தொல்காப்பியத்தில் மரபியல் என்று ஒரு இயல் உண்டு. அதற்கு முன்னாலேயே ஆக்கப்பட்ட மரபுகள் இருக்கின்றன அல்லவா? தொல்காப்பியர் சொல்லும் மரபுக்கும் இன்றைய நம்முடைய வாழ்க்கைக்கும் சம்மந்தம் இருக்கிறதா? இருக்க முடியும் என்று நம்புகிறீர்களா? இன்றைக்கும் கன்றுக்குட்டி என்றுசொல்கிறோம். கீரிக்குட்டி என்று சொல்வதில்லை. கீரிப்பிள்ளை என்று சொல்கிறோம். அணில் பிள்ளை, தென்னம்பிள்ளை என்று சொல்கிறோம். இது ஒரு சொல் மரபு. இவ்வகையான சொல்மரபு உட்பட பல மரபுகளை அவர் பதிந்து வைக்கிறார். அவ்வளவுதான். அந்தக் காலத்திலே நாம் நின்று கொண்டிருக்கிறோம் என்பதோ அவர் சொன்ன மரபுகளை அப்படியே பின்பற்ற வேண்டுமென்பதோ நம்முடைய நோக்கமல்ல. அணிலுடைய குஞ்சை அல்லது குட்டியை கீரியினுடைய குட்டியை அல்லது குஞ்சை பிள்ளை என்று சொல்வது மரபு. சொல் மரபு. தொல்காப்பியத்தை நம் வாத்திமார்கள் படித்ததில்லை. ஆனால் பிள்ளை என்று சொல்கிறார்கள். இப்படி ஒவ்வொரு அசைவுகளிலும் மரபு வெளிப்படுகிறது.

விருந்தாளி வந்தால் இப்படிச் செய்வது நம் மரபு என்று குழந்தைக்குச் சொல்லிக் கொடுக்கிறோம். பரிமாறுவதற்கு கூட ஒரு மரபு இருக்கிறது. முதலில் உப்பை வைக்கவா வத்தலை வைக்கவா என்று. தென்கலை வைணவர்கள் என்று வைணவரில் ஒரு பிரிவு உண்டு. அவர்கள் பிரிவுக் காரணம் கேட்டால் இதையும் ஒரு காரணமாகச் சொல்வார்கள். தத்துவார்த்த ரீதியாகப் பல காரணங்கள் இருந்தாலும் சாப்பிடும் போது உப்பை முதலில் வைப்பார்கள். நாங்கள் வைக்க மாட்டோம் என்பார்கள்.

சொல் மரபு. இலக்கண மரபு. கவிதை மரபு வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு சமூக உறவிலும் ஒவ்வொரு தனி மனித உறவிலும் விளைகின்ற மரபுகள்-பேணப்படுகின்ற மரபுகள் என்று நிறைய உண்டு. நாம் அமெரிக்கச் சமுதாயம் அல்ல. 300 400 ஆண்டுகளுக்குள்ளாக பத்து பேர் ஒன்று கூடி வாழும் சமூகம் அல்ல. நாம் நெடுங்காலமாக ஒரு மண்ணிலே ஒரு பண்பாட்டைத் தோற்றுவித்தோம். நமக்கு ஒரு பண்பாடு, ஒரு மரபு, இம்மரபு எல்லா நிலைகளிலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. உணவிலே உடையிலே பேசுகிற முறையிலே மரபுண்டு. இன்னார் இன்னாரிடத்திலே இப்படிப் பேச வேண்டுமென்று ஒருசில மரபுகள் இருக்கின்றன. பொருளாதார மரபுகளுண்டு. கல்வி மரபுகளுண்டு. எல்லாத்துறைகளிலும்-மனித அசைவுகள் எங்கெங்கு உண்டோ அங்கெல்லாம் மரபுகளுண்டு. சின்ன அசைவுகள் முதற்கொண்டு.

சாதாரணமாக என் வீட்டில் வேட்டியை - கைலியை மடித்துக் கட்டிக் கொண்டிருக்கிறேன். சகோதரி ஏதோவொன்று என்னிடம் கேட்க வாராங்க. அவர்கள் என்னை நெருங்கும் போது மடித்துக் கட்டிய கைலியை இறக்கிவிட்டுவிட்டேன். இது மரபு. வெறும் உடலசைவு அல்ல. இழக்கக் கூடாத மரபுகளை இழந்து தொலைத்திருக்கிறோம். இழக்க வேண்டிய மரபுகளை கட்டி அழுகிறோம்.

புதுமை என்றால் என்ன?

மரபும் புதுமையும் என்கிற இதே தலைப்பில் நண்பர் சிற்பி அவர்களின் கவிதைக்கு விளக்கம் எழுதினேன். கொஞ்சம் மறுத்தும் எழுதினேன். அவர் சொல்கிறார் 'மரபு பட்டை உரித்துக் கொண்டு புதுமை தருவது. பட்டை உரித்துக் கொள்வது வெறுமனே காலம்சார்ந்த பரிமாணம் மட்டும்தான். பாம்பு

ஆண்டுகள் ஆயின என்று அர்த்தம். காலம் என்கிற பரிமாணம் ஒரு பொருளின் மீது வினைப்படுவதால் மட்டும் புதுமை நிகழ்ந்துவிடாது. அதற்கப்பாலும் புதுமை உண்டு.

ஆயிரம் ஆண்டுகள் என்று ஆலமரத்தைச் சொன்னால் எப்போது அது புது மரம்? எப்போது வாடுகின்றது? பாரம்பரியமான தன்னுடைய பழைய மரபணுக்களை அது நிறைய நிராகரிக்கலாம். ஒட்டுமொத்தமாக அல்ல. பாரம்பரியமான வாழ்க்கை முறையை நிராகரித்துவிட்டு அதை புதிது பண்ணுவதல்ல. சுவற்றை வெள்ளையடித்து கொத்தி பூசி, புதிது செய்வது போலல்ல. பழைய சமூக அமைப்பினுடைய ஏதேனும் ஒரு உறுப்பை ஏதேனும் ஒரு நிறுவனத்தை ஏதேனும் ஒரு கருத்தை முற்றிலும் நிராகரித்துவிட்டு புதியது ஒன்றைக் கட்டி எழுப்புவது சிக்கல். ஒன்றை எவல்யூசன் என்பார்கள். ஒன்றை ரெவல்யூசன் என்பார்கள். இரண்டுக்குமிடையே காலப் பரிமாணம் என்று சொல்லுவார்கள். புரட்சிக்குப் பின்னால் நடந்த விளைவுகளை கணக்கிட்டுப் பார்த்து சில மரபுகளை நாம் தவறவிட்டுவிட்டோம் என்று சொன்னார்கள்.

உளவுத் துறையிலே ஒரு மரபுண்டு. எனது நண்பர் ஒருவர் நெடுங்காலம் சோவியத் ரஷ்யாவில் இருந்தார். சுற்றுலா போய் திரும்பியவர் இல்லை. கணிசமான காலம் வாழ்ந்தவர். அவர் சொன்னார். இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுவதில் பழங்கள் அதிகம் உண்டு. புளிப்பு உள்ள பழங்கள் நம்முடைய பகுதியில் பூமத்திய ரேகை அருகேதான் அதிகம் விளையும். நம்நாட்டில் வாழைப்பழம் விலை ஏறியதற்கு ஏற்றுமதி ஆவது ஒரு காரணம். இன்னும் இங்கே 60 லட்சம் கால்நடைகள் இருக்கின்றன என்றாலும் நல்ல தோலில் செய்த காலணி நமக்குக் கட்டுப்படியாவதில்லை. காரணம் நிறைய தோல் ஏற்றுமதி. அதைப் போல வாழைப்பழம் நிறைய ஏற்றுமதியாகிறது. அதை வாங்க ஒரு கிலோமீட்டர் கூட சோவியத் ரஷ்யாவில் மக்கள் நீண்ட வரிசையில் நிற்பார்கள் என்று. நான் ஏன் என்று கேட்டேன். நண்பர் சொன்னார். புளிப்பும் இனிப்புமான பழங்கள் ஓரளவுக்கு அங்கும் உற்பத்தியாகின்றன. அது கிட்டத்தட்ட நின்று போய்விட்டது. ஏனென்றால் பனிப்பகுதியில் புதர் செடிகளில் விளைகிற பழங்கள்தான் உண்டு. புரட்சிக்குப் பின்னாலே கூட்டுப் பண்ணை வருகிற போது ஒரு பெரிய நிலமாக ஆக்குகையில் வரப்புகள் எல்லாம் அழிந்து விட்டன. வரப்புகள் அழிந்து

போனதால் வரப்புகளில் நின்ற புதர் செடி பழங்களும் அழிந்து போய் விட்டன. கூட்டுப்பண்ணையின் பின்விளைவுகளில் இது ஒன்று. ஆக பழ உற்பத்தி அங்கு குறைந்துவிட்டது.

மரபு என்பதை பொருளாதாரம் - சமூகம் சார்ந்த ஒன்றாகப் பேசாமல் பண்பாடு சார்ந்த ஒன்றாக நான் பேச விரும்புகிறேன். சங்ககாலப் பாடல் ஒன்று. வயலிலே நெல் அறுத்திருக்கிறார்கள். பயிர்களின் அடித்தாள் இன்னும் இருக்கின்றது. வயலில் ஈரம் இருக்கிறது. அதை உழுதுவிட்டுப் போகும் போது பின்னால் விதைத்துவிட்டு போவார்கள். உழுது விதைக்கும் இடைவெளியில் வயல்மீன் எடுக்கிறார்கள்.

தாமிரவருணிப் பாசன வயல்களில் மீன் உண்டு. நான் சிறுவனாக இருந்த போது மீன் பிடித்திருக்கிறேன். உண்ண மாட்டேன். எனது வீட்டில் உண்ணுவார்கள். பெரும்பாலும் வயலில் விளைவது உழுவை மீன்கள்தான். வயலில் விளையும் அல்லது கலிக்கும் என்று சொல்வார்கள். culture என்பதற்கு சரியான தமிழ்ச்சொல் கலிப்பு என்பதுதான்.

கலித்தல் - பெருகுதல்

அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர

ஒரு வயலில் ஒரு பயிர் அறுத்தாயிற்று. ஒரு பயிர் விளையப் போகிறது இரண்டுக்கும் நடுவில் மீன் விளைகிறது. உற்பத்தி சார்ந்த கலாச்சாரம் இதில் வெளிப்படுகிறது. என்றைக்கு யூரியாவும் காம்போசும் வயலில் இறங்கியதோ அன்றே மீன்போச்சு. நெல் உற்பத்தி கூடிவிட்டது. மீன் உற்பத்தி குறைந்துவிட்டது. வயல் உழுவை அழிந்தது தெரியாமல் போய்விட்டது. வயல் உழுவை என்றால் யாருக்கும் தெரியாது. பொருள் அழிகிறது, செயல் அழிகிறது. சிந்தனை அழிகிறது. ஒரு மரபை பின்விளைவைக் கவனிக்காமல் முரட்டுத்தனமாக அழிக்கும் போது அது எதுவரைக்கும் பாதிக்கிறது?

அக்கானி என்று ஒன்று உண்டு. நெல்லுக்கு மாற்றாகத்தருவார்கள். அவ்வளவும் குளுக்கோஸ். என் தந்தையும் நானும் அவர் தந்தையும் அருந்தியது. என் மகனுக்குக் கிடைக்கவில்லை. கரும்பு உற்பத்தியின் விளைவாக சீனி அதிகமாக-

காப்பி என்ற பானத்தின் நுகர்வு அதிகமாக அதிகமாக, கரும்பு உற்பத்தி அதிகமாக அக்கானி என்ற பொருள் அழிந்தது. சொல்-பொருள் ஒரு அனுபவம் அழிந்தது. அடுத்த தலைமுறைக்கு அக்கானி காய்ச்சத் தெரியாது.

சோழர் காலத்தில் நிலத்திற்கு ஒரு வரி போடுகிறான். பயிருக்கு ஒரு வரி, ஊடு பயிருக்கு ஒரு வரி வேலிப் பயிருக்கு ஒரு வரி, வரப்புப் பயிருக்கு ஒரு வரி போடுகிறான். ஒரு நிலம். நாலு வகையான வரி. என்ன கொடுமையான ஆட்சி என்று ஒரு புறம், இன்னொரு புறம் ஒரு நிலத்தில் ஒரே நேரத்தில் நாலு பொருள்கள் விளைந்தன என்பதுதான் கணக்கு. நஞ்சை நிலத்து வயல் வரப்பில் மருந்து செடிகளைப் பயிரிடும் மரபு நமக்கு இருந்தது. செங்கொடுவேரி என்ற மருந்துப்பயிர். அதற்கு வரி போட்டிருக்கிறான்.

சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி என்று சொல்வார்கள். சயின்ஸ் என்றால் என்ன? டெக்னாலஜி என்றால் என்ன? விஞ்ஞானத் தொழில் நுட்பம் அவ்வளவுதான். ஆர்க்கிமிடிஸ் மிதத்தல் விதியை கண்டுபிடிக்கும் முன்பே மனிதன் படகைக் கண்டுபிடித்துவிட்டான். ரோமானியக் கலங்கள் பூம்புகார் துறைமுகத்தில் வந்து நின்றாயிற்று. அது டெக்னாலஜி. மிதத்தல் விதியைக் கண்டுபிடித்தது சயின்ஸ். பாரம்பரியமான அறிவுத் தொகுதி முழுக்க தொழில்நுட்ப ரீதியாக அமைந்தது. அதனால் காலிலே புண்ணானதும் மருந்தை அரைத்துக் கட்டினால் அம்மருந்து பயனளிக்காமல் போவதில்லை. பக்க விளைவுகளையும் உண்டாக்காது. ஏனென்றால் அது பல்லாயிரக்கணக்கான முறை சோதனை செய்யப்பட்டது. ஆனால் விஞ்ஞானக் கோட்பாடுகள் அடுத்த ஐந்தாண்டில் மற்றொரு விஞ்ஞானியால் நிராகரிக்கப்படுகிறது. கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்த விஞ்ஞானத்தை நம் தலையில் கட்டினான். என்ன நடந்தது? ஏன் எதற்கு என கேள்வியில்லாமல் பாரம்பரிய மரபுகள் எல்லாவற்றையும் நிராகரித்தோம். பண்பாட்டின் சல்லிவேர்கள் அறுந்து போயின. அறுந்து போகப் போக வேரிலே சிக்கல் ஏற்பட்டது. வேரில் புழு தாக்கினால் அது கொழுந்தில் தெரியும். வேரிலே வெக்கை கட்டியதால் மேலேயிருக்கும் முடி வாடுகிறது. நம்முடையே குழந்தைகளிடத்திலே இளைஞர்களிடத்திலே இளம் பெண்களிடத்திலே மாறுதல் ஏற்படுகிறது. பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வெவ்வேறு பிராண்ட் சோப்பை மாற்றச்

சொல்கிறார்கள். வெவ்வேறு பிராண்ட் என்றாலும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இந்துஸ்தான் லீவர், கோத்ரேஜ் அண்ட் பாயிஸ் என எல்லாம் ஒரே இடத்திலிருந்து வரும்.

நான் நாகர்கோயிலில் கலை இலக்கியப் பெருமன்ற நிகழ்வில் பேசியது எழுத்தாளர் பொன்னீலனுக்கு மிகவும் பிடித்துவிட்டது. எனது சின்ன மகள் 'பரணிபட்டுச் சென்டர் ஆகா பரணிப் பட்டுச் சென்டர் என்று பாட்டுப் பாடியது. இது தொலைக்காட்சியில் வருவது. பாட்டுப் பாட வேண்டுமென்ற ஆசை இயல்பானது. சரியானது. பாட்டுப் பாடிக் கொண்டே நடந்து போவார்கள். ஆனால் பாட்டின் பொருள்? குழந்தைக்கு இசைப் பசி உள்ளது. மனிதனைப் போல மற்ற பாலூட்டிகளுக்கும் இசைக்கு மயங்கும் தன்மை உள்ளது. ஆனால் குழந்தை இந்தப்பாடலைப் பாடியது கொழுந்து வாடுவதற்கான அடையாளம்.

உணவு, உடை என்று உற்பத்திக் கலாச்சாரத்தோடு தொடர்புடைய மரபுகளைத்தான் நாம் கையைக் கழுவி இருக்கிறோம். உடை ஒரு தேசத்தினுடைய பருவகாலச் சூழலுக்கு ஏற்பபரிணமித்துள்ளது. இறுக்கக்கட்டியவேட்டி நமக்குவேண்டாம் என்று வைத்துக் கொண்டால் முழுக்கால் சட்டை சித்திரை வெயிலில் எப்படி வந்தது. தென் அமெரிக்க நாடுகளில் அரைக்கால் சட்டை கலாச்சாரமாக இருக்கும்போது, இங்கு அது கலாச்சாரம் ஆகாமல் தடுக்கப்படுகிறது. முழுக்கால் சட்டை அரைக்கால் ஆனால் கோடிகோடியாக லாபம் குறைந்துபோகும். எப்படி நல்ல புத்தகம், நல்ல சினிமா உங்கள் கண்ணுக்குக் கிடைக்காமல் பார்த்துக் கொள்கிறார்களோ அப்படி. 'அக்ரகாரத்தில் கழுதை', 'மோகமுள்', 'பதேர் பாஞ்சாலி', மதுரையில் போட தியேட்டர் தரமாட்டார்கள் என்பதே உண்மை. ஊருக்கு வெளியே ஜெயராஜ் தியேட்டர்தான் கிடைக்கும். இப்படிப் பத்து படங்கள் பார்த்தால் உங்கள் சுவை மாறிவிடும் லாப நோக்கமுடைய வணிக சினிமா படுத்துவிடும். இதுவே எல்லாத்துறைகளிலும் நடக்கிறது.

உற்பத்திக்கலாச்சாரத்திலிருந்து அந்நியப்பட்டுக்கொண்டே போகிறோம். எனது அம்மாவுக்கு ஐம்பது வகையான உணவுகள் சமைக்கத்தெரியுமென்றால் என் மனைவிக்கு நாப்பது, முப்பதுதான் தெரியும். ஊறுகாயும் வற்றலும் வெப்ப மண்டலத்துக்கான மழைநேர உணவுகள். வெயில் காலத்தில் மருந்தாகும் உணவுகள். எந்த நாட்டை எடுத்தாலும் மருந்துக்கும் உணவுக்கும் வித்தியாசம் இருக்காது. ஐரோப்பிய விஞ்ஞானம் மருந்து வேறு உணவு

வேறு என்று கற்றுத் தந்தது. அதைப் பிடித்துத் தொங்குகிறோம். குழந்தை மருத்துவத்தில் மட்டும் கொஞ்சம் மருந்தும் உணவும் பேசப்படுகிறது. நாட்டு வைத்தியரிடத்தில் பத்தியம் உண்டு. ஆங்கில மருத்துவரிடம் கிடையாது. மூன்றாம் உலக நாடுகளைக் கொள்ளை அடிக்க மருந்து வேறு.. உணவு வேறு..!

மருந்து உற்பத்தி மரபிலிருந்து அந்நியப்பட்டோம். நான் பிறந்தபோது கூட கோரோசனை எல்லாம் கொடுத்திருக்காங்க. கோரோசனை கிராமங்களில் எல்லா வீடுகளிலும் இருக்கும். சின்ன சிவப்பு உருண்டை. முப்பது ஆண்டுகளுக்குள்ளாக அது காணாமல் போய்விட்டது. பன்னாட்டு மூலதனக் கம்பெனிகள் இந்நியாவுக்குள் அவ்வளவு மருந்துகளை இறக்குமதி செய்துள்ளது. எந்தக் காற்று வீட்டுக்குள் நுழைகிறதென்று உங்களுக்குத் தெரிவதில்லை. சிறுநீரகத்துக்குப் பக்கத்தில் மாடும் பசுவும் அதிகமான சத்துக்களை சேர்த்து வைத்துக் கொள்ளும். பசுவினுடைய அட்ரினல் சுரப்பியை எடுத்து மருந்து கலந்து குழந்தைக்கு கொடுப்பார்கள். பசுவினை அறுத்துப் பார்த்தபோது என்னது இது என்று எடுத்து வைத்திருந்து மருந்து என்று கொடுத்தார்கள். பல நூற்றாண்டுகால மரபில் பசுவின் அடினைல் கிளாண்டை மருந்தாக மனிதன் கண்டுபிடித்தான் அதற்கு கோரோசனை என்றுபெயர்.

பாட்டிக்கு இருந்த மருத்துவ அறிவுத் தொகுதி உங்களது சகோதரிக்கு இருக்கிறதா? குழந்தைக்கு காய்ச்சல் என்றால் மெட்டாசின் வாங்கிவா என்கிறோம். போலாபார்.. அனசின்.. என்று பெயர் தெரியும். அதனுள் இருக்கிற ரசாயனம் தெரியாது. நுகரும் பொருளின் உற்பத்தி ஞானத்தோடுதான் தொழில்நுட்பம் வளர வேண்டும். உங்கள் சகோதரிக்கு நெல்லிக்காய் ஊறுகாய் போடத் தெரியாததற்கு காரணம் எங்கோ இருக்கிற இம்பீரியலிசத்தின் கை இருக்கிறது. ஏகாதிபத்தியம் உங்கள் வீட்டு ஊறுகாய்ப் பானையை உடைக்கிறது. உற்பத்தி அறிவைப் பிடுங்கிக் கொள்கிறது. நீ ருசி வாங்கு அல்லது கம்பெனி ஊறுகாய் வாங்கு என்று உன்னிடம் சொல்கிறது. இந்த உணர்வுகளோடு மரபுகளைப் பற்றி விஞ்ஞானத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். மரபைப் பற்றித் தெரியாதவர்கள் உண்மையைப் பற்றிப் பேசக்கூடாது.. மரபுகளை உணர்க.கடவுள் உட்பட எல்லாவற்றையும் நிராகரிப்போம். அறிந்து நிராகரிப்போம். உணர்ந்து நிராகரிப்போம். இன்றையக் கல்வி முறை மரபு அறியாமல் உங்களைப் பார்த்துக் கொள்கிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் கெமிஸ்டரி படிக்கிறவனுக்கு சங்க இலக்கியம் எதற்கு என்று.. அகநானூறு, புறநானூறு தெரியக்கூடாதென்று பாடத்தைக் குறைத்தார்கள். உயர்நிலைப் பள்ளியில் படிக்க முடியாத பாடல் அது: அதைப்படிக்க சரியான வயது இதுதான். சிந்தனையாளர்களின் கடும் எதிர்ப்புக்குப் பிறகு மீண்டும் சேர்த்தார்கள். மரபை நீங்கள் தெரிந்து கொள்ளக் கூடாது. ஏனென்றால் உங்கள் மீது படரக்கூடிய ஏகாதிபத்தியம் மரபு இல்லாதது.

நேற்றின் அனுபவங்களை நிராகரித்தவனுக்கு நாளை என்பது கிடையாது. மரபை உணர்க. எல்லாமரபையும் உடைத்து விட்டுக் கவிதை எழுதுக.. ஆத்மாநாம் மாதிரி எழுதினாலும் சரி.. வைரமுத்து மாதிரி எழுதினாலும் சரி.. ஆனால் யாப்பிலக்கணத்தைத் தெரிந்து கொண்டு நிராகரியுங்கள்.

தேவையும் அனுபவமும் அடுத்த கட்ட சிந்தனைக்கு உங்களைக் கொண்டு போகும். என் தகப்பனுக்கு மண்ணெண்ணை விளக்கு போதும். எனக்குப் போதாது வெளிச்சம். காற்று வேண்டும். இருட்டும் திருட்டு பயமும் இருந்த காலத்தில் சிறிய சன்னல் இருந்தது. இப்போது போதாது.. உடைத்துப் பெரிய சன்னல் கட்ட வேண்டும்.

சீர்திருத்தம் என்பதே மரபை மீறிய புதுமைதான். ஊறிப்போன விசயத்தை முதலில் உடைத்தது சித்தர்களின் கலகமரபும் ராமனுஜர் மரபும் ராமானுஜர் மரபு மென்மையானது. ஆனால் ஆழமான வேர்களைக் கொண்டது. இவர்கள் இரண்டு பேரும் பெற்ற வெற்றி சிறியது. ஆனால் வரலாற்றில் அவற்றின் பாதிப்பு இருந்தது. மறு நூற்றாண்டிலே நம் மரபிலே ஒரு விபத்து நடந்தது. மலிக்காபூர் வடக்கே இருந்து படையோடு வந்து விட்டான். சிறிய குடிசையில் தீவிபத்து என்றால் தெருவின் மனநிலையே மாறிவிடும். யார் வீட்டிற்குள்ளும் யாரும் புகுந்து தண்ணீர் எடுப்பர். அதுபோல மலிக்காபூர் வந்ததும் சித்தர்களின் கலக மரபு விரிவடையாமல் நின்றுவிட்டது. அந்த நெருப்பின் மீது இந்த நெருப்பு தண்ணீராக வந்து விழுந்தது.

திட்டமிட்ட தீர்க்கமான வெற்றியினை மரபுகளை நிராகரிப்பதில் பெற்றவர் தந்தை பெரியார் ஒருவர்தான். நிராகரிக்கப்பட வேண்டிய மரபுகளை நிராகரிப்பதில் பெரிய வெற்றியை பெரியார்தான் பெற்றார். பிரசன்ஸ் ஆப் திங்ஸ் என்பது போல ஆப்சன்ஸ் ஆப் திங்ஸ் என்பதையும் பார்க்க வேண்டும். உண்மையைப் போல இன்மையும் ஆய்வுக்குரிய விசயம். சிறுபான்மை மக்களுக்கு பெரியாரின் அருமை பெரியாரின் இறப்புக்குப் பின்தான் தெரிந்தது. பெரியார் இருந்தபோது பெரியாரின் பணியின் வீச்சினை உணரவில்லை. பெரியார் இறந்த பிறகுதான் தமிழ்நாட்டில் சிறுபான்மையினருக்கு ஏற்பட்ட உணர்வு நெருக்கடிகள் இவ்வளவு காலம் நம்மைக் காப்பாற்றியது, அரசியல் சட்டம் அல்ல. பெரியாரும் அவரது சிந்தனைகளும்தான் என்பதை உணர்ந்தார்கள். சித்தர்களில் சிலர்தான் கடவுளை நிராகரித்தார்கள். ராமனுஜர் கடவுளை நிராகரிக்கவில்லை. பெரியார் ஒருவர்தான் விஞ்ஞானப்பூர்வமாக துணிச்சலாக கடவுளை நிராகரித்தார்.

வைணவமாகட்டும் சைவமாகட்டும். ஏன்? மார்க்ஸ் ஆகட்டும். முதலில் எதிரியின் கருத்தை மறுத்தல் பிறகு தன் கருத்தை நிறுவுதல். பிறர் மதம் மறுத்தல் தன் மதம் நிறுவுதல் இதுதான் முறையியல். தமிழ்ச்சிந்தனை மரபு இதுதான். நம்முடைய மரபுகள் முற்றாகச் செத்துப் போய்விடவில்லை. தினம் தினம் சாகடிக்கப்படுகின்றன என்பதே உண்மை.

✧

எழுத்து வடிவம்
வே.சங்கர்ராம்

1995-ஆம் ஆண்டு மதுரை அறிவுச்சுடர் நடுவம் நடத்திய கூட்டத்தில் பேசியது.

16

நமது பண்பாட்டில் மருத்துவம்

பண்பாடு என்ற சொல்லை, நாம் மிகச் சுருக்கமாகவே புரிந்து கொண்டிருக்கிறோம். உண்மையில் பண்பாடு என்பது தனிமனித ஒழுக்கம் சார்ந்த ஒன்றன்று. பண்பாடு என்பது ஒரு சமூகத்தினுடைய வெளிப்பாடு, ஒரு மக்கள் திரள், தன்னை வெளிப்படுத்திக்கொள்கிற முறை. சொல்லாலே, செயலாலே, கருத்தினாலே தன்னை வெளிப்படுத்திக் கொள்கிற முறைக்குத்தான் பண்பாடு என்று பெயர். நம்முடைய தெய்வங்கள், நம்முடைய இசை, நம்முடைய கலை, நம்முடைய உணவு, நம்முடைய உடை, நம்முடைய உடையை நாம் செய்கிற முறை, நம்முடைய உடையை நாம் உடுத்துகிற முறை எல்லாமே பண்பாடு சார்ந்த அசைவுகள்தான்.

பண்பாடு என்பது ஒரு முழுமையான பொருள். இந்த முழுமை சார்ந்த பார்வை இல்லாது போன காரணத்தினாலேதான், ஒரு (wholostic approach) இல்லாது போன காரணத்தினாலேதான் பண்பாடு பற்றிய நமது பார்வை மிகவும் பலவீனமாக இருக்கிறது.

பண்பாடு என்பது, நம்முடைய ரத்த ஓட்டத்தோடு கலந்ததாகும். அது நமது மூச்சுக்காற்றைப் போல, நான் உங்கள் முன்னாலே மூச்சுவாங்கிக்கொண்டு பேசிக் கொண்டிருக்கிறேன் என்று நினைவிக்கவில்லை. நாம் மூச்சு வாங்கிக் கொண்டு இருக்கிறோம் என்பது எப்போது தெரியும் என்றால், மூக்கிலே ஏதேனும் அடைப்பு ஏற்பட்டால் நாம் அதை உணர்கிறோம்.

பண்பாடு என்பதை அது மீறப்படுகிறபோது உணர்கிறோம். இன்னொரு கட்டமாக, தேவைப்படுகிறபோது பண்பாட்டை உணர்கிறோம். நம்முடைய வீட்டிற்குத் தண்ணீர் போதாது என்கிறபோது நம்முடைய வீட்டிலே மண்ணிற்குக் கீழாகவே தண்ணீர் இருக்கிறதே என்று எனக்குத் தோன்றும்.

எனவே சமூகத் தேவை ஏற்படுகிறபோதும் நடைமுறை வாழ்க்கை மீறப்படுகிறபோதும் நாம் பண்பாட்டைப் பற்றி கவலைப்படுகிறோம்.

உலகமயமாக்கம் என்ற சொல்லை ஏன் திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டிருக்கிறோம்? உலகமயமாக்கம் என்பது பொருளாதார நடவடிக்கைஎன்றுதான் பத்திரிகைபடிப்பவர்களும், மெத்தப்படித்தவர்களும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையில் உலகமயமாக்கல் என்பது கலாச்சாரத்தாக்குதல் மிகப்பெரிய தொன்மையான கலாச்சாரமுடைய தமிழ் மொழி பேசுகிற மக்கள் மீதும் இந்தியாவில் மற்ற மொழி பேசுகின்ற மக்கள் மீதும் அது மூலதனத்தால் தொடுக்கப்பட்டிருக்கிற கலாச்சார யுத்தம். இந்தக் கலாச்சார யுத்தத்தை நம் மீது தொடுத்திருப்பது யார் என்று கேட்டால் மிக, மிகப்பெரிய நம்பமுடியாத அளவு பன்னாட்டு மூலதனமே எனலாம்.

ஒரு 150 ஆண்டுகால காலனி ஆட்சியிலே எதை, எதை எப்படிப் பார்க்கவேண்டும் என்கிற பார்வையை நாம் இழந்து போயிருக்கிறோம். அதன் விளைவாக நாம் இன்று எப்படிக் கட்டப்பட்டிருக்கின்றோம்? இன்று இங்கு இருக்கிற, குறிப்பாக 25 வயதுக்குக் கீழாக இருக்கிற இளைஞர்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்கள் உளவியல் எப்படி கட்டப்படுகின்றது? எது எது தேவையோ, அதையெல்லாம் தேவையில்லை என்கிறது. எது எது மறக்கப்பட வேண்டியதோ அதையெல்லாம் நினைக்கப்பட வேண்டும் என்கிறது. எதையெல்லாம் மீற வேண்டும் என நினைக்கிறோமோ, அதற்கெல்லாம் அடங்கிப் போக வேண்டுமென்கிறது. உண்மையிலே கலாச்சார போலித்தனத்தால் நாம் கட்டப்பட்டிருக்கிறோம்.

பன்னாட்டு மூலதனம் என்பது இப்பொழுது என்ன செய்கிறது என்றால், தான் எந்தெந்த நாடுகளிலெல்லாம் கொள்ளையடிக்கப்போகிறோமோ அங்கெல்லாம் முதலில்

பண்பாட்டு வன்முறையை ஏவுகிறது. வன்முறை என்றால் நமக்கு தோன்றுவது கத்தி, கம்பு, ஏ.கே.47. ஆனால் பண்பாட்டு வன்முறை என்பது மிகவும் நுட்பமானது. இதற்கு உதாரணம் தரலாம் என நினைக்கிறேன். தினத்தந்தியிலே சுக்குக்கு என்ன பயன், மிளகுக்கு என்ன பயன், தூதுவளைக்கு என்ன பயன் என்று ஒரு சின்ன இடத்திலே போடுவார்கள். அதற்கு என்ன பெயர் தருவார்கள் என்றால் 'பாட்டி வைத்தியம்', இதற்கு மரபுச் சொல் கை மருத்துவம் அல்லது வீட்டு மருத்துவம். இச்சொல்லுக்குரிய பாரம்பரியமான அறிவுத் தொகுதி என்னுடைய வீட்டிலேயே பிறந்த எல்லா பெண் பிள்ளைகளுக்கும் பங்கிடப்பட்டிருக்கிறது. முந்தைய சமுதாயத்திலே. அதை என் சகோதரிக்கும், என் மனைவிக்கும், என் மகளுக்கும் சிறுதுளி தெரியும். அதை ஏன் பாட்டி வைத்தியம் என்று சொல்கிறார்களென்றால் அது ஒரு வன்முறையான நிகழ்வு. உங்கள் மேனியின் சிகப்பழகிற்கு என்று சொல்கிறார்களல்லவா? அதுவும் ஒரு பண்பாட்டு வன்முறைதான். பாட்டி வைத்தியம் என்ற சொல்லே ஒரு பண்பாட்டு வன்முறைதான். எப்படியென்றால், பாட்டி எப்படி சமகாலச் சமூகத்தோடு இயங்கிச் செல்ல முடியாதோ, அதுபோல இந்த மருத்துவமும் சமகாலச் சமூகத்தோடு இயங்கிச் செல்ல முடியாது. பாட்டி எப்படி பரிவோடு பார்க்கப்பட வேண்டியவளோ, அதுபோல இந்த மருத்துவமும் பரிவோடு பார்க்கப்பட வேண்டியது, அவ்வளவுதான்.

இது என்னுடைய வைத்தியம். அது பாரம்பரியமான வேர்களை என்னிடத்திலே கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. நாம் மிக ஆழமான வேர்களைக் கொண்ட ஆலமரம் போன்றவர்கள். நமது பண்பாட்டு வேர்கள் மிக ஆழமானவை. நீளமானவை. மிகத் தொன்மையானவை. நமக்கு அருகில் இருக்கும் ஆதிச்சநல்லூர்ப் பண்பாட்டிலிருந்து நமக்குச் சில செய்திகள் தெரிகின்றன. அந்த மக்கள் தாய்த் தெய்வத்தை வணங்கி இருக்கிறார்கள். கி.மு. 10ம் நூற்றாண்டு அளவில் வெண்கலம் பயன்படுத்தி இருக்கிறார்கள். உலோகவியலிலே அவர்களுக்கிருந்த அறிவு தொல்லியல் ஆய்வாளர்களுக்கெல்லாம் பெரும் வியப்பைத் தருகிற செய்தி.

இந்தியாவினுடைய மற்ற பகுதிகளிலெல்லாம் இரும்புக்காலம் முடிந்து வெண்கலக்காலம் தொடங்குகிறது. ஆனால் இங்கு இரும்புக்காலம் தோன்றுகிற போதே

வெண்கலக்காலம் தோன்றியிருக்கிறது. தொல்லியல் ஆய்வாளர்கள், இந்தியாவிலேயே இரும்பை உருக்குகிற தொழில்நுட்பம் தாமிரபரணிக் கரையைப் போல் எங்கும் சிறந்ததாக இல்லை என்கிறார்கள். வெண்கலம் என்ற கலப்பு உலோகத்தைச் செய்கிற முறைக்கு அவர்கள் பயன்படுத்திய உலைகள் நமக்குக் கிடைத்திருக்கிறது. அவர்கள் பயன்படுத்திய, உலோகத்தை உருக்கி ஊற்றுகிற சுடுமண் குழாய்களை நானும், நண்பர் லெனா.குமார் போன்றவர்களும் வீரவநல்லூர்க்கருகில் கண்டு பிடித்திருக்கிறோம். அவர்கள் என்ன கலனை (உருக்குவதற்கான பாத்திரம்) பயன்படுத்தினார்கள்? அவர்கள் என்ன எரிபொருளைப் பயன்படுத்தினார்கள்? வெப்பம் பற்றிய அவர்களின் அறிவு என்னவாக இருந்தது. இவையெல்லாம் ஆராய்ந்து கண்டு பிடிக்கப்பட வேண்டியவையாகும்.

நம்முடைய முன்னோர்கள், நமக்கு நல்ல வீட்டை, நல்ல காற்றை, நல்ல மண்ணை, இவை எல்லாவற்றையும்விட இவை பற்றிய அறிவையும் விட்டுச் சென்றிருக்கிறார்கள். இதை உணரும்போதுதான் பண்பாடு பற்றிய அடையாளங்களைப் புரிந்து கொள்கிறோம்.

இந்தப் பின்னணியிலேயே நாம் மருத்துவம் பற்றி பேசலாம். பண்பாட்டில் மருத்துவம் மட்டும் இல்லை. நம்முடைய இசை, கலை, நாடகங்கள், இலக்கியம், சிற்பம், சமயம், அந்த சமயம் சார்ந்த வாழ்வியல் விழுமியங்கள் இவையெல்லாம் சேர்ந்ததுதான் பண்பாடு, மருத்துவம் என்ற சொல்லுக்குத் தமிழில் வேர்ச்சொல் "மரு" என்பதுதான். மரு என்ற சொல்லுக்கு தமிழில் மணம் என்பதாகப் பொருள் இருக்கிறது. இந்தச் சொல் எப்படி வந்திருக்கக் கூடும்? தாவரங்களை வகைப்படுத்துகிற போது மனிதன் அந்த மணங்களிலிருந்துதான் வகைப்படுத்தி இருக்க வேண்டும். மருக்கொழுந்து என்றால் மணமுள்ள கொழுந்து என்று அர்த்தம். இந்த மணம் தாவரங்கள் மட்டுமல்ல, அசைகின்ற உயிர் உலகத்திற்கு கூட உண்டு. உதாரணமாக, புனுகுப் பூனை பார்த்திருப்பீர்கள்.

எனவே இந்த மரு என்ற சொல், தாவரங்களை மணங்களினாலே அறிவதில் இருந்துதான் வந்திருக்கும் என நினைக்கிறேன். எனவே உணவாகட்டும், மருந்தாகட்டும், தாவரங்கள் எனும் நிலை உயிர்களை அவற்றின் மணத்தைக்

கொண்டே அறிவதென்பது மிகவும் நுட்பமானது.

அறிவு என்பது எழுத்து மூலம் சார்ந்ததுதான் என்று கருதக் கூடாது. அப்படிக் கருத வைத்தது European Epistomology ஐரோப்பிய மெய்காண் முறைமை. அதனால்தான் ஐரோப்பியர் எழுதத் தெரியாதவனெல்லாம் முட்டாள்" என்று சொன்னார்கள். எழுதத் தெரியாத நம் முன்னோர்களுடைய தாவரம் பற்றிய அறிவு பொய்யானதா? அவர்களுடைய மருந்து பற்றிய அறிவு பொய்யானதா? உலகம் பற்றிய அறிவு, அவர்களது வாழ்வியல் விழுமியங்கள் பற்றிய தன்னுணர்ச்சி பொய்யானதா?

எனவே அறிவு என்பது எழுத்து மரபு சார்ந்தது. எழுத்து வருபவனுக்குத்தான் அறிவு வரும் என்பது ஒரு பொய். எழுத்துப் பிறப்பதற்கு முன்னாலேயே அறிவு பிறந்தது. எழுதப்படிக்கத் தெரியாத ஒருவன், ஒரு அழகான சிற்பத்தை ஆக்க முடியும். ஒரு நாற்காலியைச் செய்ய முடியும். இது எழுத்து மரபு பிறப்பதற்கு முன்னாலேயே பிறந்த அறிவு. இதைத்தான் கார்ல் மார்க்ஸ் 'தொகுக்கப்படாத அறிவு" என்று சொல்வார்.

எப்பொழுது நீங்கள் எல்லாவற்றையும் புத்தகமாக / பனுவலாக (textualize) பண்ண விரும்புகிறீர்களோ, எழுத்து மூலம் கொள்ளைக் கொண்டு போய் "இதுதான் இதுதான்" என்று சொல்கிறீர்களோ, அப்போது அது முடிந்துபோகிற விசயம். தோழர் அ.மார்க்ஸ் கூறியதுபோல, சித்த மருத்துவ அறிவு ஏற்படுத்துப்பட்டதினாலே முடிந்துபோனது என்று நினைத்தால், நம்மைப்போல முட்டாள் யாரும் கிடையாது. ஏனென்றால் அண்டம் பற்றிய, பூமியைப் பற்றிய நமது அறிவு இன்னும் முழுமையானதல்ல. அறியப்படாத மனிதரைப் போல, அறியப்படாத தாவரங்கள் நிறைய இருக்கின்றன. அறியப்படாத உயிரினங்கள் நிறைய இருக்கின்றன. இவைப் பற்றிய அறிவு பெருகப் பெருக மனித வாழ்க்கை இன்னும் எளிமையாகும் இன்னும் இனிமையாகும்.

எனவே இந்த எழுத்து மரபுக்கு முந்திய அறிவு காட்டு வாழ்விலிருந்து, மணத்திலிருந்து பெற்ற மருத்துவ அறிவுதான். மணங்களைக் கொண்டு தாவரங்களை வகைப்படுத்திய அறிவுதான். மனித உடம்பிலிருந்தே மனிதன் நிறைய விசயங்களைக் கற்றுக் கொண்டான். வெட்டுகின்ற ஆயுதத்தை, குத்திக் கிழிக்கின்ற ஆயுதத்தை, அரைக்கின்ற ஆயுதத்தை இவற்றையெல்லாம்

மனிதன் தன் பல்வரிசையிலிருந்தே கற்றுக் கொண்டான். தன்னை முழுமையான ஒன்றாகக் கருதி, தன்னிலிருந்தே கற்றுக்கொண்ட விசயம். இப்படித்தான் மருத்துவ அறிவு தொடங்கி இருக்கிறது.

மருத்துவ அறிவு ஏனைய அறிவைவிட கூர்மையானதாக இருக்க வேண்டும். "மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்" என்பது சங்க இலக்கியம். நோயாளிக்கு அவன் விருப்பப்பட்டதைக் கொடுக்காமல் ஆய்ந்து ஆய்ந்து மருந்து கொடுத்தானே, எனவே ஆராய்ச்சி இந்த மருத்துவ உலகிலிருந்துதான் துவங்குகிறது.

மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் இது professional Ethiics என்று சொல்லக்கூடிய தொழில் சார்ந்த அறம். இது வேறு யாரையும்விட மருத்துவம் செய்பவருக்கே அவருடைய தொழில் சார்ந்த அறம் முன்னிலைப்படுத்தப்படுகிறது தமிழ்ச் சமூகத்திலே.

இந்த அறம் முன்னிலைப்படுத்தப்பட்ட காரணத்தினாலேதான் அரசுகள் எல்லாம் உருவாகிறபோது, சொத்துகள் எல்லாம் பிறக்கிறபோது, ஆசைகள் உருவாகிறபோது மருத்துவத்தை ஒரு தொழிலாக, ஒரு முழுநேரப் பணியாக யாரும் கையிலெடுத்திருக்க மாட்டார்கள். எனவேதான், துறவிகள் சித்த மரபுக்கு முன்னாலே இங்கே சமண மரபு என்று ஒன்று இருந்தது. நாமெல்லாம் ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களெல்லாம், சமணர்களாகத்தான் இருந்தோம். இன்றைக்கும் சமண மதத்தினுடைய தாக்கம் நம் வாழ்வில் உள்ளது. சமண மதம் நான்கே நான்கு விசயங்களைத்தான் வலியுறுத்தும். அந்த நான்கு என்னவென்றால்,

சோற்றைக் கொடையாகக் கொடுப்பது (அன்னதானம்)

கல்வியைக் கொடையாகக் கொடுப்பது (ஞானதானம்)

மருந்தைக் கொடையாகக் கொடுப்பது (ஔசத் தானம்)

அடைக்கலம் கொடுப்பது (அடைக்கல தானம்)

இந்த நான்கையும் கழித்துவிட்டுப் பார்த்தால் அந்த "யுனெஸ்கோ" என்ற அமைப்பே இல்லை.

கல்வியைக்கொடையாகக்கொடு,மருந்தைக்கொடையாகக் கொடு. இப்படிச் சொன்னது, உலகத்திலேயே சமண மதம் ஒன்றுதான். அது வேதத்தை எதிர்த்த மதம். வைதீகத்தை நிராகரித்த மதம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அது திகம்பர துறவிகள் இருந்த மதம். அவர்கள் மருத்துவ ஏடுகளைத் தவிர

வேறு எதையும் கையிலே வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்கள் வாழ்ந்த குகைகளிலே குடிக்கத் தண்ணீர்குழி மட்டுமே உண்டு. குடிக்க டம்ளர்க்கூடக் கிடையாது. ஆனால் மருத்துவ ஏடு மட்டும் இருக்கும். முழுநேர மருத்துவப் பணியாளராக, ஒரு நாளைக்கு ஒரு பொழுது மட்டும் சாப்பிட்டு, பட்டினி கிடந்த துறவிகள் இருந்தனர். இந்த மருத்துவம் இப்படித்தான் பாதுகாக்கப்பட்டு வந்தது. இப்படித்தான் இருந்தனர் அந்த மருத்துவ அறிஞர்கள். ஆனால் ஒன்று, நீங்கள் இன்று சொல்வது போல அசையும் உயிர்களெல்லாம் அந்த மருத்துவத்திலே கிடையாது. ஏனென்றால் அவர்கள் புலால் உண்ணாதநோன்பிகள் ஆவார். அதேபோல உலோகங்கள் சார்ந்த மருத்துவமும் அவர்களிடம் கிடையாது. அவர்கள் முழுக்க முழுக்க மூலிகைகளைப் பயன்படுத்துகிற மருத்துவர்களாகவே இருந்தார்கள். இன்றைக்கும் அழிந்துவிட்ட சமணக் குகைகள் நெல்லை மாவட்டத்திலே இருக்கின்றன.

இந்த மதத்தை வீழ்த்திவிட்டு வைதீகம் வந்தது. பாண்டிய அரசு, சோழ அரசு என்று இனக்குழுக்கள் எல்லாம் கரைக்கப்பட்டு, கரைக்கப்பட்டு அரசுகள் உருவாகும்போது மருத்துவம் தொழிலாக ஆகிறது. அதுவரை மருத்துவனும், ஆசிரியனும் காசு பெறக்கூடாது. அதுவரை மருந்து விற்பனைக்குரிய பொருளன்று. மருந்து விற்பனைக்குரிய பொருளன்று என்ற எண்ணம் கி.பி.7ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டிலே இருந்தது. 12, 13ஆம்நூற்றாண்டு வரை இன்னொரு நினைப்பும் இருந்தது. அது, சோறு விற்கக் கூடாது. நெல் விற்கலாம். அரிசி விற்கலாம். வைதீகம் தமிழ்நாட்டை முழுவதும் வென்றெடுத்த பிறகுதான் சோற்றுக்கட்டியினை சத்திரங்களில் விற்க ஆரம்பித்தனர். 20ஆம்நூற்றாண்டின் நடுப்பகுதிவரை தண்ணீர் விற்கக் கூடாத பொருளாக இருந்தது. இதுதான் பண்பாடு.

எனவே, தமிழ்நாட்டில் அரசு எந்திரம் உருவான போது, வைதீகம் அதற்கு குறுக்குவெட்டாகப் பாய்ந்தது. ஏனென்றால், அதுதான் அரசுக்கு உவப்பான சித்தாந்தமாக இருந்தது. அப்பொழுதுதான் மிகப்பெரிய சமூக நிறுவனமாகக் கோயில் உருவானது. மாவட்ட ஆட்சித்தலைவரிடம் எவ்வளவு அதிகாரம் புதைந்துகிடக்கிறதோ அவ்வளவு அதிகாரம் கோயிலிலே இருந்தது. இந்தக் கோயில் அதிகாரத்திலிருப்பவர்கள், நாம் என்ன சாதி? நாம் எங்கே இருக்கலாம். எப்படி உடுத்தலாம்?என்பதையெல்லாம் தீர்மானித்தனர். மருத்துவத்தைச் செய்துவந்த சாதியினர்

கோயிலுக்கு வெளியே நிறுத்தப்பட்டார்கள். (அன்றைய கணக்குப்படி பார்த்தால், குலம் அல்லது குடி, இன்றையக் கணக்குப்படி சாதி).

அதற்கு முன், அரசு உருவாகிறபோது அக்குடிகளின் நிலைமை என்ன என்று கேட்டால், உங்களுக்கு மிகவும் வியப்பாக இருக்கும். கி.பி.8ஆம் நூற்றாண்டிலே மாறஞ்சடையன் என்கின்ற பாண்டியனுக்கு முதலமைச்சராக இருந்தவர் மருத்துவ சாதியைச் சார்ந்தவர். இவர் இறந்தப்பிறகு இவரது தம்பி முதலமைச்சராகிறார். இவர்கள் மானூருக்குப் பக்கத்திலே இருக்கிற களக்குடி எனும் ஊரைச் சார்ந்தவர்கள். இவரைப் பற்றியும், இவரது தம்பியைப் பற்றியும் பேசுகிற கல்வெட்டு ஒன்று மதுரை மாவட்டம் ஆனைமலை நரசிங்கப் பெருமாள் கோயிலிலிருக்கிறது. எனவே ஒரு காலத்தில் அரசனுக்கும், அரசதிகாரத்திற்கும் நெருக்கமாக மருத்துவர்கள் இருந்திருக்கிறார்கள்.

அதற்குப் பின், அரசதிகாரம் பெருகப் பெருக அரசுகள் பேரரசுகளாக மாற, மாற கோயில்கள் துணை நிறுவனங்களாக ஆக, ஆக மருத்துவம் செய்கிற சாதி வெளியில் வைக்கப்பட்டது. அப்புறம் வைதீகம் அரசை கையிலெடுத்துக் கொண்டது. இன்றைக்கும் போல, அன்றைக்கும் எழுதப்படாத அதிகாரம் அதன் கையிலே இருந்தது. மருத்துவக் காரணம் என்ற பெயரில் மருந்துப் பொருள்களின் மீது வரிவிதித்தனர் அரசர்கள். இது நம் பண்பாட்டிலே ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றம்.

அ.மார்க்ஸ் சொன்னதுபோல, ஆகயிரண்டு மேல்சாதியிலே யாரும் மருத்துவராகக் கூடாது. மருத்துவத் தொழில் செய்யக்கூடாது. ஏனென்றால் அவர்களுக்கு மற்ற எல்லாரும் தொடப்படாத சாதி. இந்த தொடப்படாத சாதிக்காரனுக்கு எப்படி உடம்பைத் தொட்டு மருத்துவம் செய்வது? எனவே மருத்துவர்கள் பட்டுத் துணியைப் போட்டு 'நாடி' பார்த்தனர்.

இன்னொரு செய்தி, சித்த மருத்துவத்திலே இரசவாதம் என்றும் ஆங்கிலத்திலே alchemy என்றும் சொல்லப்படும் கீழ் உலோகங்களை உயர்ந்த உலோகங்களாக்கும் முறை சொல்லப்பட்டுள்ளது. ஒரு பேரரசு உருவாகிறபோது அது பல நிகழ்வுகளைக் கண்கொத்திப் பாம்பாகக் கவனித்துக் கொண்டிருக்கும். அரசுகள் alchemy வளர்வதை விரும்பாது. ஏனென்றால், ஒருவன் இரும்பைத் தங்கமாக்குகிற விசயத்தைக் கண்டுபிடித்து விட்டால், ஒரே நாளில் அந்த அரசாங்கத்தைக்

கவிழ்த்துவிட முடியும். எனவே அரசு அதை விரும்பாது. எனவே இந்த அரசியல் உருவான போது alchemy முழுமையாக அரசினாலே தடைசெய்யப்பட்ட ஒன்றாக இருந்தது.

சோழ அரசின் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று, அடித்தள மக்களைச் சார்ந்து நிற்கிற வணிக குழுக்களை அது புறந்தள்ளியதாகும். இதனால் மக்களுடைய எதிர்ப்பு அரசுக்கு உருவானது. மக்களுடைய எதிர்ப்பை அணிதிரட்டியவர்கள் சித்தர்கள். இவர்கள் நகர்ப்புறத்துக்கு வரவே இல்லை. எனவே இந்தச் சித்தர்களெல்லாம் கிராமப்புறத்துக்குப் போனார்கள். மருந்து அவர்களுக்கு ஒரு வலிமையான ஆயுதமாக இருந்தது. ஏனென்றால் மருத்துவனுக்கு மட்டும் எந்த நேரத்திலும், எங்கும் நடக்கின்ற உரிமையைச் சமுதாயம் அளித்திருந்தது. எனவே மக்களுடைய நம்பிக்கையை அவர்கள் பெற்றிருந்ததற்கு இந்த மருந்து எனும் ஆயுதம்தான் காரணம். சித்தர் மரபு வளர்ந்தபோதுதான் நஞ்சை மருந்தாகப் பயன்படுத்தக்கூடிய முறை பிறந்தது. அதற்கு முன் அது இருந்ததாகத் தெரியவில்லை சித்தர்களையும் மக்களையும் இணைத்தது மருந்து.

நாங்கள் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிற காலம் வரைக்கும் சித்தர்கள் இலக்கியத்தை மதிக்கவே மாட்டார்கள். “ஆச்சு போச்சுன்னு பாட்டு எழுதியிருக்கான். இதை கல்லூரி பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க முடியுமா?” என்பார்கள். இப்பொழுதுதான் கலக மரபு சித்தர்கள் என்று சொல்லி சித்தர் பாடல்களைக் கொஞ்சமாவது வைத்திருக்கிறார்கள்.

மிகச்சில ஏடுகள் தவிர, 19ஆம் நூற்றாண்டிலே மக்களிடம் மனப்பாடமாக இருந்ததைப் பெற்றுத்தான் பெரும்பாலான சித்தர் பாடல்களை அச்சிட்டுவந்தார்கள். அதனாலேயே அதில் சில தவறுகள் எல்லாம் இருந்தது. ஆயிலைத் (oil) தடவுவாய் என்றெல்லாம் பாட்டிருக்கிறது. இந்த ஏடுகளெல்லாம் திருவாவடுதுறை மடத்திலேயோ, தருமபுரம் மடத்திலேயோ, குன்றக்குடி மடத்திலேயோ இருக்காது. இங்கெல்லாம் சங்க இலக்கியமிருக்கும். தேவாரம் இருக்கும். திருவாசகம் இருக்கும். ஆனால் மருத்துவ ஏடுகள் இருக்காது ஏனென்றால் இவை மக்களிடமிருந்து பெறப்பட்டுத்தான் பதிப்பிக்கப் பெற்றன. இதற்கு திருத்திய பதிப்பு கொண்டு வருவதற்கு ஒரு உவே. சாமிநாதய்யர் கிடைக்கவில்லை. ஏனென்றால் இவை மடங்களில் பாதுகாக்கப்படவில்லை.

ஆங்கிலம் தெரிந்தால் எல்லாம் தெரிந்துவிடும் என்கிற ஒரு கலாச்சார போலித்தன்மை நம் முதல் எதிரி. இந்தப் போலித்தன்மையை முதலில் உடைக்க வேண்டும். இதை ஒரு வன்முறையாகக் கொண்டு வருகிறார்கள்.

நான் முதலிலேயே கூறியபடி, இந்த “பாட்டி வைத்தியம் என்ற சொல் ஒரு வன்முறை”. நம்முடைய பாரம்பரியமான வேர்களை எல்லாம் அழித்தால்தான் (பண்பாடு என்பது ஆணிவேராகவும், பக்கவேர்களாகவும், சல்லி வேர்களாகவும் அமைந்தது. இதை அறுத்து எறிந்தால்தான்) பன்னாட்டு முதலாளிகளுக்கு எதையும் சந்தைப்படுத்த முடியும். எனவே ஆங்கில மருத்துவம் வருகிறபோதே அதிகாரத்தோடு வருகிறது. எதுவரைக்கும் அதிகாரத்தோடு வந்தது என்று கேட்டால் 1920 வரைக்கும் கீழ்சாதிக்காரர்கள் யாருமே மருத்துவராக முடியாது. அதுவரை மருத்துவக்கல்லூரியிலே சேர வேண்டுமானால் குறைந்தபட்சம் சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்ற விதி இருந்தது.

ஆங்கில மருத்துவம் படிப்பதற்கு இது ஒரு முன் நிபந்தனை, இன்றுபிற்படுத்தப்பட்ட,மிகவும்பிற்படுத்தப்பட்ட,தாழ்த்தப்பட்ட என்றெல்லாம் சொல்கிறோமே, இந்தச் சாதிகளிலே எத்தனை பேருக்கு அன்றைக்கு சமஸ்கிருதம் தெரிந்திருக்கும்? 1920ல் பனகல் அரசரின் நீதிக்கட்சி அமைந்த பிறகுதான் அந்த ஆணையை நீக்கினார்கள். அதுவரை ஆங்கில மருத்துவம் என்பது மேல் சாதி அதிகாரத்தோடு கட்டப்பட்டிருந்தது. அதிகாரம் என்பதே இங்கு சாதி வழியாக கட்டப்பட்டது. நம்மால் இன்றைக்கும் கூட அதை முழுமையாக உடைத்து எறிய முடியவில்லை.

சித்த மருத்துவம் நோயாளியை மதிக்கின்ற மருத்துவ முறையாகும்.

உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வான்
மற்றிந்நாற் கூற்றே மருந்து

என்பது வள்ளுவர் கண்ட மருத்துவ நெறியாகும்

நோயாளி மதிக்கப்பட வேண்டியவன். நோயாளிகளிடமிருந்து மருத்துவர் கற்றுக் கொள்ளக் கூடிய விசயங்களும் இருக்கிறது. ஆங்கில மருத்துவம் நடைமுறையில் அதை ஏற்றுக்கொள்வதில்லை. மருத்துவரிடம் நோயாளி ஒரு கேள்வி கேட்டால் நோயாளியை ஆங்கில மருத்துவர் மதிப்பதில்லை.

எனவே நோயாளி மதிக்கப்பட வேண்டியவன் என்பதையும், அவனிடம் இருந்து கற்றுக் கொள்ள விசயம் இருக்கிறது என்பதையும் நிராகரிக்கிறது அந்த மருத்துவம்.

இயல்பான நிகழ்வுகளை, இல்லாத நோய்களை எல்லாம் கண்டுபிடிக்கிறார்கள். எப்படி? பிரசவம் என்பது ஒரு இயல்பான நிகழ்வு. கருக்கொண்டிருக்கிற ஒரு பெண்ணை ஒரு ஆங்கில மருத்துவரிடம் அழைத்துப்போனால் அந்தப் பெண்ணை அந்த மருத்துவர் ஒரு நோயாளியாகவே பார்க்கிறார். அப்படித்தான் அந்த மருத்துவமுறை, European Epistomology அவருக்கு கற்றுக் கொடுத்திருக்கிறது. அவரை அறியாமலே அந்த European Epistomologyக்கு அடிமையாய் இருக்கிறார். கருக்கொண்ட பெண்ணை ஒரு நோயாளியாகப் பார்ப்பது மாபெரும் தவறு. கருக்கொள்ளுதல் என்பது ஒரு இயல்பான நிகழ்வு. அது எப்படி நோயாகும்? மருத்துவர்கள் இல்லாமலேயே காலம் காலமாக எத்தனையோ மகப்பேறுகள் நடந்திருக்கின்றனவே.

கருக்கொண்டு நான்கு மாதம் ஆன பெண் ஒரு ஆங்கில மருத்துவரிடம் போகும்போது, “வயித்துல பிள்ளை எப்படி இருக்கிறதோ” என்று நினைத்துக் கொள்கிறாள். திரும்பி வரும்போது குழந்தை என்ற சொல்லை மறுத்துவிட்டு baby என்ற சொல்லோடு வருகிறாள். இங்கு கொள்ளை அடிக்கப்பட்டது நம்முடைய காசு மட்டுமல்ல நம்முடைய கலாச்சாரம். நம்முடைய மொழி.

பார வண்டி செய்கிற ஒரு ஆசாரிக்கு அதனைப் பற்றி முழுமையான அறிவு உண்டு. என்ன மரத்தில் செய்ய வேண்டும்? என்ன பட்டை போட வேண்டும்? எவ்வளவு பாரம் தாங்கும்? பட்டையினுடைய கனம் என்ன? என்று பொருள் பற்றிய முழுமையான அறிவு உண்டு. பொருளுற்பத்தி பற்றின இந்த முழுமையான அறிவு வேலைப்பிரிவினை (Division of Labour), சிறப்புப் பயிற்சி (Specialisation) இவற்றால் பாதிக்கப்பட்டுள்ளது.

இன்றைக்கு மருந்து பற்றிய முழுமையான அறிவு ஆங்கில மருத்துவர்களுக்குக் கிடையாது. மருத்துவப் பிரதிநிதிகள் போய் மருத்துவரிடம் விளக்கிச் சொன்னால்தான் உண்டு. எனவே பொருள் பற்றிய முழுமையான அறிவு இருக்கக் கூடாது என்பதிலே தெளிவாக இருக்கிறது. உலக மயமாக்கலுக்குப் பின்னணியில் இருக்கிற பன்னாட்டு மூலதனம்.

நமக்குக் காய்ச்சல் வருகிறது. நம்முடைய பாட்டி, வீட்டிலே இருக்கிற சுக்கு, மிளகு இன்னும் சில பொருட்களை இன்ன விகிதத்தில் என்று கலந்து குடிநீரிட்டுத் தருகிறாள். இரண்டு நாட்களில் சரியாக வில்லையா? நிலவேம்பைச் சேர்த்துக்கொடு என்கிறாள். பிணி பற்றிய அறிவு, எடுத்துக் கொள்ளக்கூடிய மருந்துப் பொருட்களைப் பற்றிய அறிவு, மருந்து பற்றிய அறிவு நம்முடைய பாட்டிக்கு இருக்கிறது. அவளே மருத்துவராக இருக்கிறாள். அவளே pharmachologistஆக இருக்கிறாள். அவளே நர்சாகவும் இருக்கிறாள்.

எனவே பொருள் பற்றிய இந்த அறிவைக் கொன்றழித்தது யார்? இதை மீட்டெடுப்பது யார்? மீட்டெடுப்பது எப்படி? என்பது தான் நம்முன் உள்ள கேள்வி.

இந்தபாரம்பரியமான அறிவுத்தொகுதி,மருத்துவத்துறையில் மட்டுமன்று எல்லாத் திசைகளிலும் கொன்றழிக்கப்படுகிறது என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

ஏனென்றால் இந்த வெப்பமண்டலம் பற்றிய அல்லது அண்டத்தின் இந்தப் பகுதியைப் பற்றிய அறிவை உள்வாங்கிக் கொண்ட ஒரு மருத்துவம், ஒரு இலக்கியம், ஒரு இசை இருந்திருக்க வேண்டுமல்லவா? இவை அனைத்தும் இல்லாமல் போனதற்கான காரணம் இந்த மூலதனத்தினுடைய உள்ளார்ந்த தன்மை “சுரண்டல்” என்பதுதான். அப்படியென்றால் இதற்கு எதிராக நாம் என்ன செய்ய வேண்டும்?

நம்முடைய முன்னோர்கள் எல்லாம் சமூகப் பொறுப்பு உடையவர்கள் என்பதினாலேதான் நமக்குச் சுத்தமான தாமிரபரணி நீரை விட்டுச் சென்றார்கள். அவர்கள் சமூக பொறுப்பு உடையவர்கள் என்பதினாலேதான் வயல்களிலே இரசாயன உரங்களை இடாமல், இயற்கை வளத்தை அப்படியே நம்கையில் தந்துவிட்டுப் போனார்கள். நாம்தான் ஃபாக்டம் பாசையும், யூரியாவையும் போட்டோம். பூச்சி மருந்துகளைத் தெளித்தோம். இதுதான் நம் பண்பாட்டிலிருந்து கற்றுக் கொண்டதாகும். கிடைக்கிற எல்லா புதிய அனுபவங்களையும் கொண்டு தனக்குத்தானே தகவமைத்துக் கொள்வது. அதுதான் நம் பண்பாட்டின் பலம்.

Cultural Osmosis என்று சொல்லுவார்கள். ஒரு நல்ல உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டில்

கோதுமை விளையாது. ரொட்டி கோதுமையிலே செய்கிற உணவு. ரொட்டியை ஐரோப்பியர் கொண்டு வந்தனர். ரொட்டி மட்டுமல்ல கேக், மக்ரூன் இன்னும் என்னென்னவோ கொண்டு வந்தனர். இந்த ரொட்டியை மட்டும் பிரசவித்த பெண்ணின் postal natal உணவாக மாற்றிக் கொண்டார்கள் இல்லையா? அதற்கு பெயர்தான் cultural omsosis கலாச்சார தகவமைவு. இது இந்தக் கலாச்சாரத்தின் பலமான அம்சம், இதையெல்லாம் நாம் இழந்து கொண்டு இருக்கிறோம் என்ற கவலையினை, அக்கறையினை, நாம் பெற்றதால்தான் நம்முடைய பாரம்பரியமான இந்த மருத்துவத்தை, நாளைய தலைமுறையின் தேவைக்கு ஏற்றதாக நம்மால் சீரமைக்க முடியும் எனக் கருதுகிறேன்.

✧

15/06/2005 அன்று Siddha Fest 05 விழாவில் நிகழ்த்திய உரை.

சாளரம் இலக்கிய மலர் 2008

17

தமிழ்நாட்டுக் கோசாம்பி

சற்றே குள்ளமான உருவம். சிவந்த நிறம். வாசிப்பின் வீச்சினைக் காட்டும் அகலமான பரந்த நெற்றி, தடித்த மூக்குக் கண்ணாடி, முழங்கைச் சட்டை, வேட்டியின் ஒரு நுனியை ஒரு கையில் பிடித்தவாறு பாளையங்கோட்டை தெற்கு கடைத்தெருவில் நடந்து செல்லும் அவரை 'வானமாமலை வாத்தியார்' என்றுதான் ஊர் மக்களுக்குத் தெரியுமே தவிர, "தமிழ்நாட்டுக் கோசாம்பி" என்று தெரியாது. அவர் மறைந்த பிறகு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியதும் தெரியாது.

அவர் எந்தக் கல்லூரியிலும் பணியாற்றியதில்லை. ஆனாலும் இன்றைய தமிழ் ஆய்வுலகத்திற்கு அவர் பேராசிரியர் நா.வானமாமலைதான். நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் ஒரு பழுத்த வைணவக் குடும்பத்தில் பிறந்தவர். நாற்பதுகளில் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஈர்க்கப்பட்ட தோழர்கள் ஆர்.நல்லகண்ணு, ஏ.நல்லசிவம், பாலவிநாயகம், பின்னாளில் புகழ்பெற்ற வழக்கறிஞரான நாங்குநேரி என்.டி.வானமாமலை, பாளை என்.சண்முகம், ஆர்.எஸ். ஜேக்கப் ஆகியோராடும் கட்சிப் பணியாற்ற முன்வந்த தோழர் அவர். சிறிது காலம் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிவிட்டு, பின்னர் கட்சியின் நெருக்கடியான காலத்தில் பள்ளிப்பணியை உதறிவிட்டு வந்தவர். தான் பிறந்த நாங்குநேரி வட்டத்தில் ஜீயர் மடத்திற்கு எதிராகத் தோழர் நல்லகண்ணு விவசாயிகளைத் திரட்டிப் போராடியபோது அவருக்குப் பின்னிருந்து உதவியவர். பொதுவுடைமை கட்சிக்கான சிறு வெளியீடுகளைத் தமிழாக்கித் தந்தவர். ஒருமுறை பாளை நகராட்சி உறுப்பினராகப் பணியாற்றிய அனுபவமும் அவருக்கு உண்டு. சிறைவாழ்க்கையும் அவருக்கு வாய்த்திருந்தது.

ஐம்பதுகளின் கடைசிப் பகுதிகளின் போது கல்வியுலகமும், தமிழ் ஆராய்ச்சி உலகமுமே அவருக்கு ஆர்வமாக இருந்தன. பெரியாரிடமிருந்து பிரிந்து வந்து பொதுவுடைமைக்காரரான சாத்தான்குளம் அ.ராகவன் நட்பும் அதற்கு ஒரு காரணமாகும். ஒரு காலத்தில் தமிழ் மரபு வழிப்புலமை சித்தர் பாடல்களை ஏற்றுக் கொள்ளாதது போலவே எழுத்தறியா மக்களின் பாடல்களையும் கதைப்பாடல்களையும் பழமொழிகளையும் ஏற்றுக் கொள்ள மறுத்தது. 1957இல் பேராசிரியர் நா.வா. 'தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள்' என்ற பெயரில் ஒரு சிறிய தொகுப்பினை ஆய்விற்கான குறிப்புகளுடன் வெளியிட்டார். அதுவரை அவற்றையெல்லாம் தமிழ் ஆய்வுலகம் அருங்காட்சியகப் பொருளாகவே ஒதுக்கி வைத்திருந்தது.

பேரா.நா.வா. அவை உயிருள்ள புழங்கு பொருள் என்பதனை மெய்ப்பித்தார். இன்றைக்கு வேரும் விழுதுமாகக் கிளைவிட்டு நிற்கின்ற நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுப் புலங்களுக்கு அவரே வித்தூன்றியவர்.

அறுபதுகளின் இறுதிப் பகுதியில் மதுரைப் பல்கலைக்கழகம் கட்டபொம்மன் கதை, கான்சாகிபு சண்டை, காத்தவராயன் கதை ஆகிய கதைப்பாடல்களை அச்சிட்டு வெளியிட்டபோது தமிழ்ப்பண்டிதம் நெற்றி சுருக்கியது. ஆனால் ஆய்வுலகம் வரவேற்றது. அக்கதைப் பாடல்களின் பதிப்பாசிரியர் பேரா.நா.வா. அப்பணியை அவரிடம் ஒப்படைத்தவர் பேரா.தெ.பொ.மீ.

ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் பொதுவுடைமைச் சித்தாந்தத்தை முறையாகப் பயின்ற தமிழ்நாட்டு இளைஞர்களில் பெரும்பாலானோர் பேரா.நா.வா, எடுத்த வகுப்புகளுக்குக் கடன்பட்டவராவார். 1971இல் தமிழ் வழிக் கல்விக்கு எதிரான குரல்கள் எழுந்தபோது அதனை எதிர்த்து பொதுக்கூட்டங்கள் நடத்தினார். 'தமிழால் முடியும்' என்ற நூலையும் எழுதினார்.

பேராசிரியர் நா.வா. கல்வியாளர் மட்டுமல்லர். எதிர்கால உணர்வுடன் கூடிய மிகச் சிறந்த ஆய்வாளரும் ஆவார். மணிமேகலை கூறும் பரபக்க லோகாயதம் குறித்தும் அவரால் எழுதமுடியும். பரிபாடலின் முருக ஸ்கந்த இணைப்புப் பற்றியும் அவரால் பேசமுடியும். அறுபதுகளின் கடைசிப் பகுதியில் அவர் 'நெல்லை ஆய்வுக்குழு' என்னும் அமைப்பினை நிறுவி ஆராய்ச்சி என்ற இதழினையும் தொடங்கினார்.

அவர் வாழ்ந்த காலம் வரை 24 முறை ஆராய்ச்சி காலாண்டு இதழாக வெளியாயிற்று. சோவியத் நாட்டு வித்தாலிக்கே. பூர்னிக்கோவுடன் தமிழ்நாட்டின் அ.ராகவன், மு.கு. ஜெகநாதராஜா, ஈழத்துப் பேராசிரியர் கா.சிவத்தம்பி, ஆ.சிவசுப்பிரமணியன், க.சுப்பிரமணியன், மே.து.ராசுகுமார் எனத் தமிழ் ஆய்வுலகத்தின் எல்லைகளை விரித்துக் காட்டிய பெருமை ஆராய்ச்சி இதழுக்கு மட்டுமே உண்டு. எளிய தமிழில் அறிவியல் கட்டுரைகள் பல எழுதிய பேராசிரியர், ரொமிலா தாபரின் நூலொன்றினை, 'வரலாறும் வக்கிரங்களும்' என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்த்தார். 'தமிழ் உரைநடை வளர்ச்சி' என்ற அவரது நூலும் காலத்தின் தேவையாகும்.

'தமிழர் பண்பாடும் தத்துவமும், விடுகதைகளும் பழமொழிகளும்' ஆகிய அவரது நூல்கள் தமிழ் ஆய்வுலகத்திற்குப் புதிய பரிமாணங்களைத் தந்தன. கர்நாடகத்தின் தார்வார் பல்கலைக்கழகம் அவரைக் கௌரவப் பேராசிரியராக நியமித்தது. தமிழில் எழுந்த நாட்டார் படைப்புகளை ஆய்வு செய்ய வைத்தது. ஆராய்ச்சி இதழில் ஒவ்வொரு கட்டுரைக்கும் அவர் எழுதிய முதற்குறிப்பு ஆய்வாளர்களுக்குப் புதிய வெளிச்சம் காட்டின.

'குகனொடும் ஐவரானோம்' என்பது போல அவரது ஆய்வு நட்புலகம், ரொமிலா தாபர் முதல் மயிலை சீனி வேங்கடசாமிவரை அகன்றது. எழுத்தாளர் கி.ரா முதல் சிட்டி வரை அதில் அடக்கம். 'தம்மின் தம்மக்கள்' என்ற திருக்குறள் அறிவுலக நாகரிகத்தின் அடையாளம் ஆகும். அந்த நயத்தக்க நாகரிகம் அவருக்கு வாய்த்திருந்தது என்பதற்கு அவர் உருவாக்கிய நெல்லை ஆய்வு வட்டத்திலிருந்து வெளிவந்த பேராசிரியர்களே சான்றாவர்.

தே.லூர்து, எஸ்.தோதாத்ரி, ஆ.சிவசுப்பிரமணியன், ந.முத்துமோகன், பொன்னீலன், சி.சொக்கலிங்கம், செந்தீ நடராசன், மே.து.ராசுகுமார், நா.இராமச்சந்திரன், வெ.கிருஷ்ணமூர்த்தி ஆகிய ஆய்வாளர்களின் ஆக்கத்தில் அவருக்குப் பங்குண்டு.

1980இல் போபாலில் மகள் வீட்டிற்குச் சென்றிருந்த பேராசிரியர் அங்கே காலமானார். பேராசிரியரின் ஆய்வுத் தொண்டினைத் தமிழர்கள் மறந்துவிட்டதில் வியப்பேதும் இல்லை. ஒருவேளை மீண்டும் மறப்பதற்காக நூற்றாண்டு விழா நேரத்தில் நினைப்பார்களோ, என்னவோ!

✧

18

கல்லறைகள் அல்ல; விளை நிலங்கள்

வெகுசனக் கத்தோலிக்கத்தில் கல்லறைகள் என்ற தலைப்பில் அருட்திரு. இருதயராஜ் அடிகளார் எழுதிய நூலைப் படித்தேன்.

கிறித்துவ மதத்தின் பிற பிரிவுகளை விடக் கத்தோலிக்கம் தாராளவாதத் தன்மையுடையது என்பது அதன் பெயரிலேயே காணக் கிடைக்கிறது.

தமிழகக் கடற்கரைப் பகுதியில் கிறித்துவம் காலூன்றி ஐந்து நூற்றாண்டுகள் கழிந்து விட்டன. முதன் முதலில் கத்தோலிக்கத்திற்குள் வந்து சேர்ந்த மீனவ மக்கள் அக்காலத்தில் 'வெகுசனம்' என்ற அடையாளத்திற்குள் இருந்தனர்.

கத்தோலிக்கத்திற்குள் வந்து சேர்ந்ததும் அதுவரை தாங்கள் வழிபட்டு வந்த பூடங்களின் (பீடங்களின்) அமைப்பிலேயே குருசடிகளை அமைத்துக் கொண்டனர்.

குருசடிகள் விளக்கு மாடத்துடன் அமைந்திருந்தன. இதுபோன்ற விளக்கு மாடங்கள் வீட்டின் வெளிப்புறக் கதவையொட்டியும் அமைந்திருந்தன.

விளக்கு என்பது திராவிட நாகரிகத்தின் வலிமையான பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாகும். குத்துவிளக்கைப் போல கைவிளக்குகளும் அக்காலத்தில் வழக்கில் இருந்தன. மின்சாரம் வராத காலத்தில் அறைக்கு அறை எடுத்துச் செல்லும் இந்தக் கைவிளக்கிற்கு (hand lamp) காமாட்சி விளக்கு என்பது பொதுப்பெயராகும்.

திருச்சபை ஒளிதரும் பொருள் என்பதனால் இந்தக் குருசடி விளக்கு வடிவத்தை ஏற்றுக் கொண்டது. (இன்னும் என்னுடைய சேகரிப்பில் குருசடி விளக்கு ஒன்று உள்ளது).

எனவே கிறித்துவம் தமிழ் மண்ணில் கால் கொண்ட போதே இந்த வெகுசனத்தன்மையை ஏற்றுக் கொண்டது.

திராவிட நாகரிகத்தின் அசைக்க முடியாத பண்பாட்டுக் கூறுகளில் மற்றொன்று தாய் வழிபாடாகும். இன்றும் கிறித்துவரல்லாத பெருந்திரள் (இந்து) மக்கள் எல்லாத் தேவாலயங்களையும் மாதா கோயில் என்றே குறிப்பிடுவது கவனிக்கத் தகுந்ததாகும்.

இதனைச் சரியாகப் புரிந்து கொண்ட பெஸ்கி கத்தோலிக்கத்தை வெகுசனமயமாக்கும் பிரதான நோக்கோடு தேவ மாதா வழிபாட்டுக்கு முன்னுரிமை கொடுத்தார். தேவமாதாவுக்கு அவர் இட்ட தமிழ்ப் பெயர் பெரிய நாயகி என்பதாகும். உலகத்துயிர்களுக்கு தாயைப் போலப் பாதுகாப்பு தரும் உயிர் வேறெதுவுமில்லை. எனவே அன்னையின் காவலில் அமைந்த ஊர்களுக்கெல்லாம் காவலூர், காவனூர் எனப் பெயரிட்டார். அதன் பின்னரே தமிழ்ச் சமூகத்தில் கத்தோலிக்கம் அசைக்க முடியாதபடி கால் கொண்டது.

தென்னிந்தியத் திருச்சபையினர் பாளையங்கோட்டையில் 19ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் 'தேவமாதா வணக்கத்தவது' என்னும் நூலினை (1894இல்) வெளியிட்டார். அதற்குப் பதிலடியாகப் பாளையங்கோட்டையிலிருந்து ஜே.இராயப்ப உபதேசியார் எழுதி வெளியிட்ட 'மேரி' என்னும் நூல் வெளிவந்தது.

மேற்குறித்த பின்னணியில் சின்னமாயி, மரித்தியம்மாள் வழிபாடு நமக்கு அந்நியத்தன்மை கொண்டதாகத் தோன்றவில்லை. எல்லா உயிர்களுக்கும் உண்பதற்கான தகுதி அது பசித்திருக்க வேண்டும் என்பதே. உணவைப் பெறும் உரிமைக்கு வேறு தகுதி எதுவும் தேவையில்லை.

இந்த உண்மையை உணர்ந்த சின்னமாயி அம்மையார் கணவனுக்குத் தெரியாமல் ஏழைகளின் பசியாற தானியங்களை எடுத்துக் கொடுத்துவிடுகிறார். உணவுப் பிச்சை இடுவது பெண்களின் தனிஉரிமை என்பதனைத் தமிழ்நாட்டில் மணிமேகலை காலம் தொடங்கி இன்றைய வாழ்வியல் வரை காண்கிறோம்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்து விவசாயம் சார்ந்த தொழிலாளியாக வாழ்ந்து மறைந்த சின்னமாயி அம்மையார்

மண்ணின் மகத்துவத்தை உணர்ந்திருக்கிறார். மண்ணிலும் ஏழைகளின் மனத்திலும் விழுந்த விதைகள் முளைக்கத் தவறுவதில்லை என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கிறது. மண்ணில் புதைந்த நிலையிலும் அவர் கிறித்துவராக உயிர்த்தெழுந்துள்ளார். மறு உயிர்ப்பு (Re-generation) என்பது உழவு சார்ந்த வெகுசன மக்களின் பண்பாடாகும். இதுவே கிறித்தவரான சின்னமாயி அம்மையாரின் வாழ்விலும் நிகழ்ந்திருக்கிறது. வயிற்று வலியால் துடித்த கோனாருக்கு மண்ணையே மருந்தாகப் பரிந்துரைத்ததும் இதனால்தான்.

மரித்தியம்மாள் கல்லறை வழிபாடு குறித்த செய்திகள் எனக்கு வியப்பைத் தந்தன.

நெடும்பலம் சாமியப்பா (முதலியார்) நீதிக்கட்சியின் தலைவர்களில் ஒருவர். தந்தை பெரியாரின் நண்பர். அவர் நிலத்திலும் கிறித்துவம் உயிர்த்தெழுந்துள்ளது.

சின்னமாயி அம்மையார் தாய்த் தெய்வம் என்றால் மரித்தியம்மாள் கன்னித் தெய்வம் ஆகிறார்.

வீரமாமுனிவர்

உருவில்லா உருத்தாங்கி உலகிலொரு மகன் உதிப்பக்
கருவில்லாக் கருத்தாங்கி கன்னித்தாய் ஆயினையே

என்று தேவமாதாவை (Virgin Mary) பாடுகிறார். எனவே சாதி அரசியல் வேறுபாடுகளைத் தாண்டி மரித்தியம்மாள் வழிபடப் பெறுவதில் வியப்பொன்றுமில்லை.

நூலாசிரியரான அடிகளார், திருச்சபையின் உறுப்பினர் என்ற வகையில் இவ்விரு ஆலயங்களும் திருச்சபை நிருவாகத்தின் கீழ் வரவில்லையே என்று வருத்தப்படுகிறார். திருச்சபை பொறுப்பிலுள்ள எல்லாக் கோயில்களும் வேளாங்கண்ணி போல் மக்களை ஈர்க்கும் திறன் கொண்டவையல்ல. எனவே அடிகளாரின் வருத்தம் எனக்கு நியாயமாகத் தோன்றவில்லை.

அடித்தள மக்களின் ஆன்மீக உணர்வுகள் அவைகளாலும் ஆகமங்களாலும் உருவானவை அல்ல. அவை எளிய மக்களின் உரையிலும் நினைவுகளிலும் கனவுகளிலும் தங்கி வாழ்பவை. அங்கேயே வளர்பவை. எனவே திருச்சபை வரம்புக்குள் வரமறுக்கும் எளிய மக்களின் ஆன்மீக உணர்வுகளை அப்படியே பாதுகாப்பதே நல்லது என்று நான் கருதுகிறேன்.

அதிகார மையங்களுக்கு அப்பாற்பட்ட ஆன்மீக உணர்வுகளே (அதிலும் குறிப்பாக எளிய மக்களின் பெண்களின்) இந்த நாட்டில் சமயத்தையும் சமயச் சார்பின்மையினையும் ஒருங்கே பாதுகாத்துத் தருகின்றன.

அடிகளாரின் பரந்த நோக்கும் எழுத்து முயற்சிகளும் தொடரட்டும். வெல்லட்டும் எனப் பாராட்டுகிறேன்.

✧

(அ.இருதயராஜ் சே.ச அவர்கள் எழுதியுள்ள 'வெகுசனக் கத்தோலிக்கத்தில் கல்லறைகள்' எனும் நூலிற்கு அளித்த அணிந்துரை)

19

தெய்வங்களின் உணவுரிமை

தமிழக அரசு அண்மையில் கோவில்களில் உயிர்ப்பலி கொடுப்பதைத் தடுத்து நிறுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறது. புதிதாகச் சட்டம் எதையும் அரசாங்கம் இயற்றவில்லை. 1950ஆம் வருடம் -இயற்றப்பட்ட ஒரு சட்டத்தை அமல் நடத்துமாறு அரசாங்கம் கேட்டுக் கொண்டு இருக்கிறது. இதிலே என்ன எதிர்ப்பு வேண்டியிருக்கிறது என்று சில நண்பர்கள் கேட்கிறார்கள். புதிதாகச் சட்டம் இயற்றுவதுதானே நமது அரசாங்கத்திற்கு வாடிக்கை. இப்போது, அப்படியெல்லாம் ஒன்றும் இல்லையே, இருக்கிற சட்டத்தை அமல் நடத்தச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவுதானே என்று கேட்கிறார்கள். இந்த நாட்டில்? அது மைய அரசின் சட்டமாக இருந்தாலும் சரிதான் அல்லது அரசியல் சட்டத்தில் வரைவெல்லை காட்டப்பட்டிருக்கிற சட்டமாக இருந்தாலும் சரிதான். இருக்கிற எல்லாச் சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா? 1965ஆம் ஆண்டுக்குள்ளாக இந்தியாவில் இருக்கிற 14 வயதான அனைவருக்கும் இலவசமாகக் கட்டாயக் கல்வியைத் தரவேண்டும் என்று இந்திய அரசியல் சட்டம் ஓர் உறுதி மொழியினை அளித்தது. அது பிறகு பத்தாண்டுகளாகத் தள்ளிக் கொண்டே போனது. கடைசியாக என்ன சொன்னார்கள் என்றால் (ராஜீவ்காந்தி ஆட்சிக்காலத்தில்) Due to Financial அது நடைமுறைப்படுத்தப் முடியாத திட்டம் என்று கைகழுவி விட்டார்கள். இப்படி மத்திய அரசாலும், மாநில அரசாலும் கைகழுவப்பட்ட சட்டங்கள் நிறைய, நிறைய இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சைக்கிளில் இரண்டுபேர் செல்லக்கூடாது என்று ஒரு சட்டம் இருந்தது.

அந்தச் சட்டத்தை நடைமுறையில் வைத்துக் கொண்டே மனிதர்கள் உட்கார்ந்து செல்வதற்கான பின் இருக்கைகளை சைக்கிள் கம்பெனிகள் வடிவமைத்தன. பெரும்பாலோர் சைக்கிளில் இரண்டு பேராகத்தான் போனார்கள். வழியில் ஒரு காவலரைப் பார்த்தால் பத்தடிக்கு முன்னால் இறங்கி அவருக்கு அந்தப்பக்கம் பத்தடி சென்று ஏறிக்கொள்வார்கள் காவலரும் அதைக் கண்டும் காணாமல் விட்டுவிடுவார். சட்டத்தை கேலி செய்வது மாதிரி இருந்ததால் அந்தச் சட்டத்தை எம்.ஜி.ஆர் அரசாங்கம் நீக்கிவிட்டது. அமல்நடத்த முடியாத ஒரு சட்டம் எதற்கு? மக்கள் எதிர்க்கிற ஒரு சட்டம் எதற்கு என்று அதை நீக்கிவிட்டார்கள். இப்போது சைக்கிளில் இரண்டு பேர் போகலாம்.

அதுபோலவே, 1950-ல் ஒரு சட்டம்போட்டார்கள்; கோவில்களில் உயிர்ப்பலி கூடாது என்று. 53 ஆண்டுகள் ஆயிற்று. ஒரு போதும் சனங்கள் இதைக் கேட்கவில்லை என்பது மட்டுமன்று; அரசாங்கம் இதைக் கண்டுகொள்ளவில்லை என்பது மட்டுமன்று; அரசாங்கமே பல இடங்களில் மறைமுகமாக இந்தச் சட்டத்தை மீறியிருக்கிறது. நிறைய இடங்களில் கோயில்களில் உயிர்ப்பலி கொடுக்கிறபோது அந்த உள்ளாட்சி அமைப்புகளின் சார்பாகத் 'தலைக்கிடா' வெட்டுவது என்று வழக்கமாக இருந்தது. மேட்டூர் அணையில் காவிரித் தண்ணீரைத் திறக்கிறபோது கிடா வெட்டுவது அரசாங்கத்திற்கு வழக்கம். புதுஅணைகட்டித் திறக்கிற போதெல்லாம் கிடா வெட்டுவது, ஓர் உயிர்ப்பலி தருவது வழக்கம். மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல்துறை அதிகாரி போன்றவர்களெல்லாம் அங்கே இருப்பார்கள். இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அரசாங்க அதிகாரியின் நேரடிக் கட்டுப் பாட்டில் இருக்கின்ற பெருந்தெய்வ கோயில்கள் சிலவற்றில் உதாரணமாக அழகர்கோயில் கோயில் வளாகத்திற்குள்ளேயே நூற்றுக்கணக்கான ஆடுகள் ஆடித்திருவிழாவிலும் சித்திரைத் திருவிழாவிலும் வெட்டப்படுகிற போது, அந்த அதிகாரி பார்த்துக் கொண்டுதான் இருப்பார். அந்த பார்ப்பன அர்ச்சகர்கள் அந்த வழியாகத் தான் வருவார்கள் போவார்கள். எல்லோரும் பார்த்துக் கொண்டுதான் இருப்பார்கள். 53 ஆண்டுகளாக, ஒரு விழுக்காடு கூட மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு சட்டத்தை ஏன் இன்னும் எழுத்தில் வைத்திருக்க வேண்டும்? எத்தனைச் சட்டங்கள் கைகழுவப்பட்டுள்ளன மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று.

இந்திய ஆன்மீகமென்பது Personal God Relationship ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கடவுளுக்கும் ஓர் உறவு இருக்கிறது என்று சொல்லக் கூடிய வகையினைச் சார்ந்தது. அந்த வகையிலே ஒரு மனிதனுடைய ஆன்மீகத்துக்குக் குறுக்கே வருவதாக இந்தச் சட்டம் வந்திருக்கிறது. பாரம்பரியமான நமது மரபு. இந்த நாட்டில் இருக்கிற மக்களில் 90 விழுக்காட்டினர் புலால் உண்ணுகிறவர்கள் என்பது பழைய கணக்கு. புலால் உண்ணாதவரும் கூட இப்போது புலால் உண்ண வந்துவிட்டார்கள். அது ஓர் இயற்கையான விசயம். விஞ்ஞானப் பாடத்தில் "சுற்றுத் தருவார்கள் மனிதன் ஒரு ஹெர்பிவரஸ், கார்னிவரஸ், எல்லாம் கலந்த கலவை" என்று. புலால் உண்ணுவதற்கு அரசாங்கம் தடைவிதித்திருக்கிறதா என்றால் இல்லை. உயிர் செகுக்காமல் உண்ண முடியாது. கொல்லாதே புலால் உண்ணாதே என்று இந்த நாட்டில் முதன் முதலாகப் பேசிய நபர் திருவள்ளுவர்.

"அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று" என்றார் அவர்.

திருவள்ளுவரைக் காலம் தோறும் தலையில் வைத்துக் கொண்டாடிய தமிழர்கள், இந்த உணவு சம்மந்தப்பட்ட விஷயத்தில் மட்டும் (இரண்டு அதிகாரங்களை மட்டும், ஒன்று கள் உண்ணாமை, மற்றொன்று புலால் உண்ணாமை) காலம் தோறும், ஆண்டு தோறும், நாள்தோறும் அவரை நிராகரித்து வந்திருக்கிறார்கள். இதுதான் உண்மை. இப்போது எங்கே பிரச்சனை வருகிறது? உண்ணக் கூடாது என்று அரசாங்கம் சொல்கிறதா என்றால் இல்லை. உயிர் செகுக்கலாமாம். ஆனால் அதை எந்த இடத்தில் செகுப்பது என்று சொன்னால், அரசாங்கம் சொல்கிற இடத்தில்தான் செய்ய வேண்டுமாம்.

ஒவ்வொருவருக்கும் ஒரு 'வெளி இருக்கிறது. space இருக்கிறது. அந்த space பற்றிய உத்தரவாதத்தைக் காலங்காலமாகப் பண்பாடு தந்திருக்கிறது. பெருந்தெய்வக் கோயிலுக்கு உள்ளே இருக்கிற அந்த ஆறடிக்கு ஆறடி கர்ப்பக்கிரகத்தை மட்டும் பிராமணர்களுக்கு மட்டுமே அரசியல் சட்டம் உத்தரவாதம் செய்து தந்திருக்கிறதல்லவா, அது மாதிரி ஒரு space-ஐ அரசாங்கம் எனக்கு உத்தரவாதம் செய்து தரவேண்டும். செய்துதராவிட்டாலும், நான் காலங்காலமாக அனுபவித்து வருவேன் அது என்னுடைய வெளி என்பதில் எனக்கு உரிமை வேண்டும்.

நம்முடைய மரபு நம்முடைய வேர்கள் என்று சொன்னால், உயிர்ப்பலி கொடுப்பதுதான். உலகம் முழுக்க உயிர்ப்பலி கொடுக்கக் கூடாது என்று சொன்ன ஒரே மதம், ஒரே சிந்தனை இந்தியாவிலே தான் பிறந்தது. கி.மு.6ஆம் நூற்றாண்டில் பிறந்தது. தமிழ்நாட்டுக்கு கி.மு.6ஆம் நூற்றாண்டில்தான் வந்தது. அதுவரை பார்ப்பனர்கள் எல்லாம் புலால் உண்டார்கள். வேதத்தில், எல்லா வகையான உயிர்களையும் இவர்கள் பலியிடப் போய்த்தான் புத்தரே கொல்லாமையைப் பேசினார். புலால் உண்ணாமையைப் பேசவில்லை, கொல்லாமையைப் பேசினார். நம்முடைய மரபு என்னவென்று கேட்டால் சைவம், வைணவம் போன்ற ஆகம நெறிக்கு உட்பட்ட கோயில்களெல்லாம் உருவாவதற்கு முன்னாலே நம்முடைய முன்னோர்கள், இன்றைக்கு ஆக நெறிக்குள் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிற முருகனை எப்படி வணங்கினார்கள்? 'மறிக்குரல் அறுத்து, தினைப் பிறப்பு உரீஇ' வணங்கினார்கள். 'தோப்பிக் கள்ளொரு ரூஉப் பலிகொடுத்து' என்பது சங்க இலக்கியம். ஆடு பலி கொடுத்து இரத்தப்பலி கொடுத்துதான் வணங்கினார்கள். அப்படித்தான் நம்முடைய இலக்கியங்கள் எல்லாம் பேசுகின்றன. முருகன் ஏதோ காரணமாகக் கடைசியில் அதைவிட்டு விட்டார். அல்லது பார்ப்பனப் பெண்ணான அவரது இரண்டாவது மனைவி காரணமாக இருக்கலாம். இன்று முருகன் கோயில்களில் இரத்தப்பலி இல்லை. ஆனால் இன்னும் ஆட்டு வாகனம் இருக்கிறது. மறந்துவிடக்கூடாது. அதில் என்ன வருகிறது என்று கேட்டால் சுடலை ஆண்டவர் கோயில் பூசாரி சொன்ன மாதிரி, புலால் உண்ணாதவர்களெல்லாம் மேல் சாதி, புலால் உண்ணுகிறவர்கள் எல்லாம் கீழ் சாதி என்று இந்து சமூகம் என்று சொல்லப்படுகிற சமூகத்தை இரண்டாகப் பகுத்துக் காட்டுகிறார். 'வெளி' பற்றிய பிரச்சனை வருகிறபோது, இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். கடவுளுக்கு ஓர் உயிரைப் பலி கொடுத்து உண்ணுவது என்பது உலகளாவிய வழக்கமாகும். எல்லா உயிரையும் கடவுளுக்குப் பலிகொடுத்துத்தான் உண்ண வேண்டும் என்பது இசுலாமியர்களுடைய கருத்து, அதுதான் புனிதமான உணவு என்று அவர்கள் உறுதி செய்கிறார்கள். புளியம்பட்டி அந்தோணியார் கோயிலிலேயும் ஆடு வெட்டத்தான் செய்கிறார்கள். எனவே அது இந்து என்று சொல்லப்படுகிற சமூகத்தின் மீது மட்டும் திணிக்கப்படுகிற விசயம் அன்று. இந்து என்று சொல்லப்படுகிற சமூகத்தை உண்மையான இந்து சமூகமாக்கப் பின்னப்படுகிற ஒரு சதியாகத்தான் நான் இதைக் கருதுகிறேன்.

இரத்தப்பலி கொடுக்கும் இந்தப் பெருந்திரளான மக்கள் கூட்டம் இந்துக்கள் அல்ல. ஏனென்றால் இந்து என்பதற்கான வரைவிலக்கணம் இவர்களுக்கும் பொருந்தாது. ஒரு புனித நூல் கிடையாது. ஒரு கடவுள் கோட்பாடு கிடையாது. தெய்வம்தான் உண்டு. ஆகம நெறி கிடையாது. வணங்குபவர்க்கும் வணங்கப்படுபவருக்கும் இடையிலே வேறு எதுவும் கிடையாது. ஆத்மார்த்தமான உறவு தவிர. இந்த ஆத்மார்த்த உறவை, இந்த நாட்டு சைவம் கூட ஒத்துக் கொண்டு இருக்கிறது. கண்ணப்பன் கடவுளுக்குக் கறி கொடுக்கிறபோது எப்படிக் கொடுத்தான்? பன்றிக் கறியை அவித்து, அதுவும் நன்றாக வெந்திருக்கிறதா என்று வாயினாலே சுவைத்துப் பார்த்து, அதற்குப் பிறகு சிவபெருமானுக்குக் கொண்டுபோய் வைக்கிறான். சிவபெருமான் அதைஏற்றுக்கொண்டார்என்பதுதானே வரலாறு.இறைவனுக்குத் தான் உண்ணுவதை மட்டுமே ஒரு மனிதன் கொடுக்க முடியும். தமிழ்நாட்டில் எங்கேயாவது ஒட்டகம் பலி கொடுக்கிறார்களா இல்லையே. நான் என்ன உண்ணுவேனோ அதுதான் என் கடவுளின் உணவு. நான் என்ன உடுப்பேனோ அதுதான் என் கடவுளின் உடை. என்னுடைய கடவுள் என்னைப் போல மீசை வைத்திருக்கும். மீசை இல்லாத கடவுள் அவர்களைப் போல மீசை இல்லாமல் இருக்கும். என்னுடைய தெய்வத்திற்கு என்ன உணவு என்பதை நான் தீர்மானிக்க வேண்டும். ஏனென்றால், எங்களுடைய உறவு ஆத்மார்த்தமான உறவு. எங்கள் வீட்டுப் பக்கத்தில் ஒரு அம்மன் கோயில் இருக்கிறது. அந்த அம்மன்தான் எங்களுக்கெல்லாம் தாயாரைவிட மேலான தாயார். ஏன் தாயார்? அவள் என்னைப் போல புலால் உண்ணுவாள். தாய்க்கோழியைப் போல கோபப்படுவாள். தீமைக்கெதிராகக் கையிலே கடக்கென்று ஆயுதத்தைத் தூக்குவாள். பிள்ளைகளைக் காப்பாற்ற ஆயுதத்தை எப்போதும் பயன்படுத்துகிற நிலையிலேயே வைத்திருப்பாள். நான் இறந்து போனால் கதவை மூடி உண்ணாமல் இருப்பாள். என்னுடைய பிணம் அந்த வழியாகப் போன பிறகுதான் கதவைத் திறந்து குளித்துவிட்டுச் சாப்பிடுவாள். இதுதானே என்னுடைய ஆன்மீகம். நாட்டார் சமயத்தில் ஆத்மார்த்தமான உறவு தெய்வத்திற்கும் மனிதனுக்குமானது என்பது இதுதான். இந்த உறவுக்குள் அரசாங்கம் ஏதோ காலாவதியாகிப் போன ஒரு சட்டத்தை எடுத்துக் கொண்டு மூக்கை நுழைக்கிறது என்பதுதான் நமது கவலை.

நாட்டார் தெய்வ வழிபாடுதான் பெண்ணையும் தெய்வத்தின் பிரதிநிதியாக (சாமியாடியாக) அங்கீகரித்திருக்கிறது. இரத்தப்பலி பெறும் தெய்வங்களிலும் சரிபாதிக்குமேல் பெண் தெய்வங்கள்தான். இரத்தப்பலி கொடுக்கும் இந்த வழிபாட்டில்தான் தெய்வத்திற்கு மனிதனுக்கும் இடையிலே நிற்கிற பூசாரி எளியவனாகவும் இருக்கிறான். ஏழையாகவும் இருக்கிறான். குறிப்பிட்ட சில மணிநேரங்கள் மட்டும்தான் அவன் கையில் ஆன்மீக அதிகாரம் தரப்படுகின்றது. அதுவும் ஒரு அடையாளமாக, குறியீடாக மட்டும்தான்.

எனவே தான் சொல்கிறோம், உயிர்ப்பலி தடைச்சட்டம் நாட்டார் பண்பாட்டின் மீதும் அதன் சனநாயகத்தன்மை மீதும் தாக்குதல் நடத்த முன்வருகிறது. அரசு அந்தச் சட்டத்தைப் பெரும்பாலான மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்துத் திரும்பப் பெற வேண்டும்.

தீயின் தாக்குதலில்.. என்ற தலைப்பில் ஆனந்தவிகடனில் வெளியான மதன் கட்டுரை பார்ப்பனிய ஆன்மீகச் சிந்தனையின் வெளிப்பாடாகும். வேதகாலக் கடவுள்களைப் பட்டியலிட்டுப் பார்த்தால் பல செத்துப்போனது தெரியவரும் சமூக வளர்ச்சிப் போக்கில் அவை தேவையில்லாமல் போய்விட்டன என்பதே இதன் பொருளாகும். முதல்மட்டக் கடவுள்கள். இரண்டாம் மட்டக் கடவுள்கள் என்று பார்த்தது ஆன்மீக அதிகாரம் பெற்ற பார்ப்பனியமே தவிர எளிய மக்களின் ஆன்மீகம் அல்ல.

நரபலியின்கொடுமைகளைவிவாதிப்பதாகஅமைவதுஎன்று தோன்றினாலும் அதற்குக் குறையாத அருவருப்பு உணர்வினை நாட்டார் வழிபாட்டின் மீது பாய்ச்சுவதாகவே இக்கட்டுரை அமைகிறது. நாட்டார் ஆன்மிகத்தின் தகுதிப்பாட்டினை அதற்கு வெளியிலே நிற்பவர்களால் முழுமையாக உணரமுடியாது.

✧

வல்லினம்
ஆகஸ்ட 03 - ஜனவரி 04

20

மீனாட்சிப் பட்டினம்

"பட்டணந்தான் போகலாமடி பொம்பள, பணம் காசு தேடலாமடி" என்பது ஒரு பழைய திரைப்படப்பாடல். இந்த பாட்டின் உண்மையான பொருள் என்ன? நகரங்களில் தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்பு, தொழிலாளர் பெருக்கம், போக்குவரத்து வசதிகள், பணப்புழக்கம் எல்லாம் இருக்கும். அங்கே வாழ்க்கைக்கு எல்லாவிதமான உத்திரவாதமும் உண்டு என்பதுதான். பல ஊர்கள் இணைந்து நாடுகள் உண்டாகிறபோதே நகரங்கள் பிறந்து விடுகின்றன. எனவே உலகெங்கிலும் உள்ள நகரங்களைப் பற்றிய அறிவு என்பது மனிதனின் பொது அறிவு வளர்ச்சிக்குத் துணை செய்கின்றது.

மனித நாகரிக வளர்ச்சியில் குறிப்பிடத்தகுந்த ஒரு கட்டம் நகரங்களை உருவாக்கியது ஆகும். வாணிகத்திற்கான நெடுஞ் சாலைகள் சந்திக்கும் இடங்களில் அரசியல் தலைமைகள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தும் இடங்களாக நகரங்கள் உருவாயின. நீர் ஊர்திகள் வளர்ச்சி பெற்று கடல் வாணிகம் வளர்ந்த போது துறைமுக நகரங்கள் உருவாயின. உலகெங்கிலும் நகரங்கள் உருவான கதை இதுதான்.

உலகின் பழைய நகரங்களையெல்லாம் பாருங்கள் அவை ஏதேனுமொரு ஆற்றங்கரையில் அல்லது கடற்கரையில் அல்லது குன்றுகள் சூழ அமைந்திருக்கும். உலகின் பழைய நகரங்களில் ஒன்றான மதுரையும் அப்படித்தான். பரங்குன்றம் மலை, பசுமலை, சமணமலை, நாகமலை, அழகர்மலை, ஆனைமலை என்று குன்றுகள் சூழ வைகை ஆற்றங்கரையில் உருவான கோட்டை நகரந்தான் மதுரை.

காலப்போக்கில் பழைய நகரங்கள் அழிந்துபோகப் புதிய நகரங்கள் உருவாயின. காலவெள்ளத்தில் கரைந்து போகாமல் தம்மை இன்றளவும் நிலை நிறுத்திக்கொண்ட நகரங்கள் மிகச் சிலவே. தமிழ்நாட்டில் மதுரை, காஞ்சிபுரம் ஆகிய இரண்டு நகரங்களும் குறைந்தது 25 நூற்றாண்டுக் கால வரலாறு உடையனவாக இன்றளவும் வாழ்ந்து வருகின்றன. இவை இரண்டிலும் மதுரை தனிச்சிறப்புகள் பல உடைய நகரமாகும்.

தமிழ்நாட்டின் பழையகால நெடுஞ்சாலைகளும் புதிய நெடுஞ்சாலைகளும் சந்திக்கும் மையப் புள்ளியாக தென்தமிழ்நாட்டின் மதுரை அமைந்திருக்கின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் வாழ்ந்த தடயங்கள் மதுரைக்கருகில் உள்ள சிவரக்கோட்டையிலும்; துவரிமானிலும் கற்கருவிகளாக இன்றும் கிடைக்கின்றன. கற்காலத்தைத் தாண்டி வந்த நாகரிக மனிதர் வாழ்ந்த அடையாளங்களான ஈமத் தாழிகள் மதுரை நகரத்திற்கு உள்ளேயே கோவலன்பொட்டல், பழங்காநத்தம், அனுப்பானடி, தத்தனேரி ஆகிய இடங்களில் கிடைக்கின்றன. கிறித்துவுக்கு முற்பட்ட காலத் தமிழ்க் கல்வெட்டுக்கள் தமிழ்நாட்டிலேயே மதுரையைச் சுற்றித்தான் திருப்பரங்குன்றம், கொங்கர்புளியங்குளம், திருவாதவூர், அழகர்கோயில், அரிட்டாபட்டி, ஆனைமலை ஆகிய இடங்களில் அதிகமாகக் கிடைக்கின்றன. இவையெல்லாம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே தமிழர்கள் நாகரிகம் கண்ட பகுதிகளில் ஒன்றாக மதுரை இருந்ததற்கான சான்றுகள் ஆகும்.

மதுரை நகரத்தின் பழைய பெயர் குறித்து ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு கருத்துகளைச் சொல்கிறார்கள். புராணங்கள் பல கதைகளைச் சொல்கின்றன. கிறித்துவுக்கு முற்பட்ட காலக் கல்வெட்டுகளில் 'மத்திரை' என்ற பெயர் காணப்படுகிறது. கி.பி.750 முதல் 900 வரை உள்ள கல்வெட்டுகளில் மதுரை என்பதற்குப் பதிலாக 'மதிரை' என்ற பெயரே காணப்படுகிறது. பாமர மக்கள் வழக்கிலோ இது 'மருதை' ஆகும். குதிரை, பேச்சு வழக்கில் குருதை ஆனது போல மதிரையே பேச்சு வழக்கில் மருதை ஆனது என்று கூறுகின்றனர். இந்தக் கருத்துதான் ஏற்றுக் கொள்ளும்படியாக இருக்கிறது.

உலகில் பழைய நகரங்கள் எல்லாம் திட்டமிட்டு அமைக்கப்பட்டவையே. ரோம், வெனீசு, மொகஞ்சதரோ ஆகியவற்றைப் போல மதுரையும் திட்டமிட்டு அமைக்கப்பட்ட

ஒரு நகரமாகும். 'மதுரை நகரம் தாமரை பூப்போன்றது. அதன் தெருக்கள் தாமரைப்பூவின் இதழ்களைப் போன்றவை. இதழ்களுக்கு நடுவே அமைந்திருக்கும் பொட்டினைப்போலக் கோயில் அமைந்திருக்கிறது' எனப் பரிபாடல் இலக்கியம் பாராட்டுகின்றது. மாசி வீதிகளின் சந்திப்பில் மிகப்பெரிய தேரினைத் திருப்புவதற்கு வசதியாக வடம்போக்கித் தெருக்கள் அமைக்கப்பட்டிருப்பதும் தேர்வடங்களில் ஒன்றிரண்டை அத்தெருக்களுக்குள் கொண்டு சென்று மக்கள் இழுப்பதும் இன்றளவும் காணக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகும். நேராக அமைந்த மொகஞ்சதாரோ தெருக்களைப் போல அல்லாமல் மதுரை நகரத்துத் தெருக்கள் சற்றே வளைந்தவையாகும்.

தமிழ்நாட்டின் கோட்டை நகரங்கள் எல்லாமே நிறைய நீர் வசதிகளைக் கொண்டதாக இருக்கும். மதுரைக் கோட்டையும் ஒரு காலத்தில் அப்படித்தான் இருந்தது. வடபுறத்தில் வைகை ஆற்றை எல்லையாகக் கொண்டிருந்தது. அதன் மேற்குப் புறத்தில் மாடக்குளம் என்னும் மிகப்பெரிய குளம் இருந்தது. வைகையாற்றில் இருந்து ஒரு நீர்க்கால் பிரிக்கப்பட்டு 'கிருதமாலை' என்னும் பெயரோடு கோட்டையின் மேற்கு, தெற்குச் சுவர்களை ஒட்டி ஓடிக்கொண்டிருந்தது. கோட்டையின் வெளிப்புறத்தில் கிழக்கு வாசலை ஒட்டியும் வடக்கு வாசலை ஒட்டியும் இரண்டு தெப்பக்குளங்கள் இருந்தன. கோட்டையின் உள்ளே மேற்குப் புறத்தில் ஒரு தெப்பக்குளமும் கோட்டையின் நடுவில் அமைந்த கோவிலுக்குள் ஒரு தெப்பக்குளமும் ஆக இரண்டு இருந்தன. இவை தவிரப் பல கிணறுகளும் இருந்திருக்கின்றன. கோட்டையின் மழைநீர் வடிகாலாக கிருதமாலை நதியும் வைகை ஆறும் பயன்பட்டிருக்கின்றன.

தமிழ் இலக்கியம் காலந்தோறும் தவறாது பாடும் நகரம் மதுரையாகும். இலக்கியங்கள் பாடும் பழையாறை, பூம்புகார் போன்ற பழைய நகரங்கள் அழிந்து போயின. தஞ்சை, கருவூர்(கரூர்), காஞ்சி போன்ற நகரங்கள் சிதைந்து அளவில் சுருங்கிப் போயின. மதுரை நகரம் மட்டும் சித்திரத்துப் பூப்போல வாடாமல் இருக்கிறது.

அரசர்களாலும் பக்தர்களாலும் இலக்கியங்களாலும் கொண்டாடப்பட்ட நகரங்களில் மதுரையும் ஒன்று. இத்தோடு எளிய மக்களின் நாவில் அன்றாடம் ஒலிக்கின்ற தாலாட்டு, ஒப்பாரி, ஆட்டப்பாடல்கள், பழமொழி, விடுகதை கதைகள்

ஆகியவற்றிலும் தவறாது பேசப்படும் நகரம் மதுரையாகும். இந்தப் பெருமை தமிழ்நாட்டின் பிற நகரங்களுக்குக் கிடைத்ததில்லை.

நகரத்தின் தலைமைத் தெய்வமான மீனாட்சி மதுரைக்கு அரசி என்பது நாட்டு மக்களின் நம்பிக்கை. இன்றளவும் சித்திரைத் திருவிழாவில் மீனாட்சித் தெய்வம் திருமணத்திற்குமுன் பட்டாபிஷேகம் செய்யப்பெற்று, செங்கோல் ஏந்தி மதுரை நகரத்து வீதிகளில் திக்குவிசயம் செய்கின்றது. திருமணம் நடந்த பின்னரும் சுந்தரேசர் இராணியின் கணவராகவே கருதப்படுகிறார். அரசராகக் கருதப்படுவதில்லை. இந்திய வரலாற்றில் எந்தப் பெண் தெய்வமும் இப்படியொரு தனிச் சிறப்பைப் பெற்றது இல்லை. புராணக் கதையை அடிப்படையாகக் கொண்ட திருவிழாவாக இது இருந்தாலும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் திராவிட நாகரிகத்தில் பெண்களும் முடிசூடி ஆண்ட நிகழ்வினை இது நமக்கு நினைப்பூட்டுகிறது.

தமிழ்மொழி வளர்ச்சியில் மதுரை நகரம் தொடர்ந்து கணிசமான பங்கு வகித்து வந்துள்ளது. தமிழ்நாட்டு அரச மரபினரில் பாண்டியரே பழைய மரபினர் என்பது வரலாற்று அறிஞர் கொள்கை. பாண்டியர் சங்கம் வைத்துத் தமிழ் மொழியினை வளர்த்தனர் என்று செப்பேடுகளும் இலக்கியங்களும் கூறுகின்றன. சங்க இலக்கியப் புலவர்களில் மதுரையைச் சேர்ந்தவர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். பத்துப்பாட்டில் ஒன்றான மதுரைக் காஞ்சி மதுரை நகரத்தை மட்டுமே பாடுகின்றது. எட்டுத்தொகையில் ஒன்றான பரிபாடல் மதுரையினையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் பாடுகின்றது. சிலப்பதிகாரக் காப்பியம் மதுரை நகரத்தை மிக விரிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. தேவார மூவரும் ஆழ்வார்களும் மதுரை நகரத்தைப் பாடியுள்ளனர்.. திருவாசகமோ சிவபெருமான் கூலியாளாக வந்து 'மதுரை' மண் சுமந்து பாண்டிய மன்னனிடம் பிரம்படி பட்ட கதையைப் பாடுகின்றது. சிவபெருமான் மதுரையில் 64 திருவிளையாடல்களை நிகழ்த்திக் காட்டியதனைத் திருவிளையாடற் புராணம் பேசுகிறது. மதுரை நகரத்தின் மீது எழுந்த சிற்றிலக்கியங்கள் நூற்றுக்கணக்கானவை.

சங்க இலக்கியப் புலவர்களில் கணிசமானோர் மதுரை நகரத்துப் புலவர்களாகவே இருந்திருக்கிறார்கள் என்பதும் வரலாற்று உண்மையாகும். இருபதாம் நூற்றாண்டிலும் தமிழாராய்ச்சிக்குக் களமான தமிழ்ச்சங்கம் மதுரையில்தான் பாண்டித்துரைத் தேவரால் தொடங்கப்பெற்றது.

மதுரை நகரத்துத் தெருப்பெயர்கள் இன்னமும் இவ்வூரின் பழமையினையும் நகர அமைப்பினையும் தெளிவாகக் காட்டுகின்றன. வாழைக்காய்ப்பேட்டை, நெல்பேட்டை, தவிட்டுச்சந்தை, வெற்றிலைப்பேட்டை என வணிகப் பெருமைகாட்டும் இடப்பெயர்களைக் காண்பதோடு சித்திரக்காரர், எழுத்தாணிக்காரர், தென்னோலைக்காரர் எனக் கலைஞர்கள் வாழ்ந்த இடங்களையும் பெருமையோடு நம்மால் இந்நகரத்தில் காணமுடிகிறது.

பழந்தமிழரின் கலைத் திறனையும், நீர் மேலாண்மைத் திறனையும் தெளிவாகக் காட்டும் நகரம் மதுரை. 1000 அடி நீளம், 980 அடி அகலம் 20அடி ஆழம் உடைய மாரியம்மன் தெப்பக்குளத்தின் அலைகற்களோடு கூடிய கற்சுவர்களும், படிக்கட்டுகளும் தமிழர்களின் பொறியியல் நுண்ணறிவுக்கு அடையாளமாகும். அதன் சுற்றுச்சுவர்களும் சுவரில் அமைந்த சிலைகளும் மையமண்டபமும் தமிழர்களின் கலைத்திறனுக்குச் சான்றாகும்.

100 ஆண்டுகளுக்கு முன்புவரை மதுரை நகரம் தன் நீர்வளத்தைப் பாதுகாத்ததற்கான அடையாளங்கள் நிறைய இருக்கின்றன. பழைய கல்வெட்டுக்களில் 'மாடக்குளக்கீழ் மதுரை' என்றே குறிப்பிடப்படுகின்றது. மதுரையைச் சுற்றி இருந்த பெரிய குளங்கள் மட்டும் அல்ல. மதுரையின் வடதிசையில் ஓடிய வைகை நதியும், தென்திசையில் ஓடிய கிருதமாலை நதியும் ஊருக்கு கிழக்கே ஓடிய கால்வாய்களும் மதுரையின் நிலத்தடி நீர்வளத்தைப் பாதுகாத்தன. மதுரை நகரத்துக்குள் குடிநீர் வழங்கும் மூலங்களாக பெருமாள் தெப்பக்குளம், எழுகடல் தெப்பக்குளம், கிருஷ்ணராயர் தெப்பக்குளம், மைனாத் தெப்பக்குளம் ஆகியவை இருந்தன. இவையன்றி கோயிலுக்குள்ளும் குளம் இருந்தது. ஆற்று நீராலும் மழை நீராலும் இவை எல்லாம் நிரம்பி இருந்தன.

இன்று சுற்றுச்சூழல் சீர்கேட்டிலும், நீருக்கான மூலவளங்களை அழித்ததிலும் மதுரைநகரம் தன் பொலிவினை இழந்து நிற்கிறது. ஊருக்குள் இருந்த குளங்கள் மூடப்பட்டுள்ளன. நீரைச் சேமித்து வைக்கும் ஆதாரங்கள் எதும் இல்லை. வாணிகக் கழிவுகளும் மருத்துவமனைக் கழிவுகளும் வைகை ஆற்றைக் கூவமாக்கி விட்டன. மதுரை நகரத்தின் காற்றும் எண்ணெய் புகையினால் மாசுபட்டு விட்டது.

நமது முன்னோர்கள் அரிய கலைச் செல்வங்களையும் இலக்கியங்களையும் மட்டும் நமக்குச் சொத்தாக விட்டுவிட்டுப் போகவில்லை. தூய்மையான காற்றையும், நீரையும், நெடிய மரங்களையும் வளங்களை உருவாக்கும் மூல வளங்களாக நமக்குத் தந்து சென்றனர். நாளைய தலைமுறையினை மறந்து நம் தலைமுறையினை மட்டும் நினைத்தால் இயற்கை நம்மைப் பழிவாங்கும் என்பதற்கு இன்றைய மதுரை நகரம் ஒரு உதாரணம் ஆகும்.

இன்றளவும் மதுரையே தமிழர்களின் பண்பாட்டுத் தலைநகரமாகக் கருதப்படுகிறது. மதுரையைக் காப்பாற்றுவது நம் பண்பாட்டைக் காப்பாற்றுவதாகும்.

✧

21

நம்பமுடியாத புலமையாளர்

தமிழ்நாட்டில் அறியப்பட்டவர்களைப் போல் அறியப்படாத பெரிய அறிஞர்களின் பட்டியல் ஒன்று இருக்கிறது. அதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு சி.சு. மணி.

தொல்காப்பியம் உயிர்ஈற்றுப் புணரியலைப் பற்றிப் பேசவேண்டுமா? சங்க இலக்கியத்தின் பிசிராந்தையார் நட்பினைப் பற்றிப் பேசவேண்டுமா? பரிமேலழகர் உரைச் சிறப்பு என்ன? தமிழிலக்கிய நெடும் பரப்பில் எங்கே எந்தக் கேள்வி கேட்டாலும் பதில் சொல்லக் கூடிய ஓர் அறிஞர்.

சி.சு. மணி அஞ்சல் துறையில் எழுத்தராக இருந்தார். உண்மையிலேயே அவர் நெல்லை மாவட்டத்தில் எல்லா பேராசிரியர்களுக்கும் பேராசிரியர். எந்தத் தமிழ், ஆங்கிலப் பேராசிரியருக்கும் மரபு வழி இலக்கியத்தில் ஐயம் ஏற்பட்டால் அவரிடத்திலே போய்த்தான் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். அவரது வாசிப்பு அவ்வளவு விரிவானது. ஆழமானது; மிக நுணுக்கமானது.

கல்லூரியில் பி.ஏ பொருளாதாரத்தில் தான் அவர் பட்டம் பெற்றிருந்தார். ஆனால் அவரிடம் இசை உட்பட பல துறைப்புலமை இருந்தது.

அவர் தன்னைத்தானே கேலியாகச் சொல்லிக் கொள்ளுகிற மாதிரி புளிய மரத்தடியை விட்டு எங்கும் போகாமலேயே எல்லா ஞானத்தையும் பெற்றுக் கொண்ட நம்மாழ்வாராகவே அவர் விளங்கினார்.

யார் எப்போது என்ன வந்து கேட்டாலும் இல்லையென்று சொல்லாமல் கொடுக்கக்கூடிய ஒரு செல்வனைப்போல அவருடைய வீடு அறிவைத் தேடி வருபவர்களுக்கு திறந்தே கிடந்தது. உடல் நலம் குன்றியிருந்த கடைசி நிமிடம் வரை அது அப்படியேதான் இருந்தது.

உணர விரித்துரைத்தல் என்றால் அதுதான் நல்ல கல்வியின் பயன் என்று சொல்லுவார் வள்ளுவர். கற்றவன் அதை அடுத்தவர் உணருமாறு விரித்துச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லுகிற ஆற்றல் பேராசிரியர்களைவிட அவருக்கு நிறைய இருந்தது. அவர் எல்லோருக்கும் ஆசிரியராக மட்டுமன்று கடைசி நிமிடம் வரை மாணவனாகவும் இருந்தார். என்ன புதிய புத்தகம் வந்திருக்கிறது என்று கேட்பார். 69ஆம் வயதில் 2003 ஆம் ஆண்டு வெளி வந்த 'புனைகளம்' இலக்கிய இதழையும். வல்லினம் இதழையும் அவர் படித்திருந்தார். 'புனைகளம்' மூன்றாவது இதழ் ஏன் வரவில்லை என்று ஒரு மாதத்திற்கு முன்னால் கேட்டார்.

அவருடைய மரபு சைவ மரபு. அவருடைய தாயார் குமரகுருபரருடைய தம்பியின் வழியிலேயே வந்தவர். எனவே அவருக்கு ஒரு சைவ மரபுப் பின்புலம் இருந்தது. ஆனால் மத அடியாரைப்போல அவர் ஒரு போதும் நடந்து கொள்ளமாட்டார். தேவாரத்தை அவ்வளவு நுணுக்கமாகச் சொல்லுவார். 'சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்' என்ற சம்பந்தர் தேவாரத்திற்குச் சைவர்கள் சொல்லுகிற கதையை ஒப்புக் கொள்ளமாட்டார். இது அகப்பொருள் பாசுரம் என்பார். சிவஞான முனிவருடைய 'சத்சூத்திரர்' என்று சொல்லுகிற கருத்தை அவர் ஒப்புக் கொள்ளமாட்டார். சைவ சித்தாந்தம் ரௌரவ ஆகமத்தினுடைய மொழி பெயர்ப்பு என்று சொல்லக்கூடிய கருத்தையும் அவர் ஒப்புக்கொள்ளமாட்டார். 14 சாத்திரங்களுக்கும் உரை எழுதி ஒரு பல்கலைக்கழகம் செய்யவேண்டிய பெரும் பணியாகிய 'சிவஞான மாபாடியத்துக்கு ஆயிரம் பக்கங்களில் எளிய உரையை வரைந்திருந்தாலும் சிவதீட்சை பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் நல்ல சைவராக வாழ்ந்தார். சைவநெறி என்பது ஒரு வாழ்நெறி என்று அடிக்கடிச் சொல்வார்.

அவருடைய எழுத்துப்பணி மிக விரிவானது. 14 சாத்திரங்களுக்கும் உரை எழுதியிருக்கிறார். சிவஞான மாபாடியத்துக்கு உரை எழுதுவது அவ்வளவு எளிதான காரியமன்று, அதிலே உள்ள கடுமையான இலக்கணப் பகுதிகளெல்லாம்

யாரையும் மலைக்க வைக்கும். அது அவருடைய மிகப் பெரிய பங்களிப்பு 50, 60 ஆண்டுக்காலமாக யாருமே படிக்காது இருந்த சிவஞான மாபாடியத்தை இன்னுமொரு நூற்றாண்டு காலத்திற்கு ஒரு கல்லூரி மாணவன் தைரியமாகத் தொட்டுப் பார்க்கலாம். அந்த அளவுக்கு உரை எளிமையான உரை.

சைவம் மட்டுமல்ல, வைணவ நூல்களையும் படிப்பார். ஆச்சார்ய ஹிருதயமும். மும்முச்சுப்படியும், ஸ்ரீவைஷ்ணவ பூஷணமும் அவருடைய நாவிலே சாதாரணமாக வந்து விழும். 'செந்நிறத்ததமிழோசைஎன்றதனாலே அகஸ்தியமும் அனாதிஎன்று சொன்னாரல்லவா' என்று அவர் மேற்கொள்காட்டுகிறபோது நமக்குத் தலைசுற்றும். ஒரு திருநீறணிந்த சைவர் இவ்வளவு சாதாரணமாக மேற்கொள் காட்டுகிறாரேயென்று,

பைபிளிலே ஜேம்ஸ் எடிசன்னிலிருந்து 13 பதிப்புகள் அவரிடத்திலே இருந்தன. இமாம் காஸாலி பற்றிய நூல்களையெல்லாம் அவர் வைத்திருந்தார். ஒரு இஸ்லாமியரிடம் இமாம் காஸாலியரைப் பற்றி அவரால் பேச முடியும். கூடுதலாகச் சில விசயங்களைச் சொல்லவும் முடியும். அவர் கடைசியாக என்னிடத்திலே வாங்கிப் படித்த புத்தகம். சமண ஷியாத்வாதம் பற்றியது.

அவரது நினைவாற்றல் ஒரு கணிப்பொறியை நினைவு படுத்துவதாக இருந்தது. மனப்பாடமாகச் சொல்லி நடத்துவார். அவர் வீட்டு மாடியிலே ஒரு காலத்திலே எல்லோருக்கும் உணவளிக்கும் அளவுக்கு அவருக்குப் பொருள் வசதி இருந்தது. செய்தார். எல்லோரும் வந்து உட்கார்ந்திருப்போம். கேட்பவர்கள் பெறுவான் தவம் என்பது மாதிரி வந்து உட்காருவார்கள். சொல்லிக்கொண்டே இருப்பார் எல்லோரும் கேட்டுக்கொண்டே இருப்போம். எல்லாப் பக்கமும் சுற்றிச் சுற்றி வருவார்.

மூல இலக்கியங்களை மட்டுமல்லாமல் உரைகளையும் நுணுக்கமாகப் படித்திருந்தார்.சிலப்பதிகார உரையிலே அவருக்கு இருந்தப் பயிற்சி, பண்ணாராய்ச்சி வித்தகர் சுந்தரேசனார் போன்றவர்கள் மெச்சும்படி இருந்தது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார். பேரறிஞர் வானமாமலை, நுண்கலைச் செல்வர் சாத்தான்குளம் அ.ராகவன் போன்ற எல்லோரும் அவரை மதித்தார்கள். எல்லோரும் அவர் வீடு தேடி வந்து சென்றார்கள். குன்றக்குடி திருமடம் அவருக்கு சேக்கிழார் விருதை ஏற்படுத்திய முதல் ஆண்டு அழைத்து வழங்கியது.

பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே வரைக்கும் அவருடைய குரல்வளம் மிக அருமையாக இருந்தது. செவ்வியல் இசையையும் காவடிச் சிந்தையும் தேவாரத்தையும் பாடுவார். இத்தனைக்கும் ஓயாது புகைபிடிக்கிற வழக்கம் உடையவர். இருந்தாலும் அவரது குரல் மணிக்குரலாக இருந்தது.

அவருடைய நடை, தோற்றம், எழுத்து, பேச்சு, காசுக்கு தன்னுடைய புலமையை விற்காத வாழ்க்கை எல்லாமே கம்பீரம் நிறைந்ததாக இருந்தது. அந்தக் கம்பீரத்தைக் கடைசிவரை காப்பாற்றினார். ஆக, ஒட்டு மொத்தத்தில் நான் என்னுடைய குருநாதரை இழந்துபோனேன். சைவ உலகம் ஒரு மிகப்பெரிய சைவ சித்தாந்தியை இழந்துபோய் விட்டது. தமிழ் இலக்கியம் ஒரு பெரிய மரபிலக்கியப் பேரறிஞரை இழந்து போய் விட்டது. எங்கள் நெல்லை மாவட்டம் ஒரு பல்துறை அறிஞரை இழந்து போய்விட்டது.

✧

தீராநதி
செப். 2003

22

இருட்டறையில் வெளிச்சம் வரவேண்டும்

-அ. முத்துலிங்கம்

என் அண்ணன் ஒளிந்து கொள்வதற்கு அவசரமாக இடம் தேடினான். எனக்கு நாலு வயது மூத்தவன். அவனை அடிப்பதற்கென்று மாமா துடித்துக்கொண்டு தேடியலைந்தார். அவர் கையில் அகப்பட்டால் தொலைந்தான். நான் ஒரு குற்றமும் அறியாதவன் என்றாலும் அண்ணாவின் பின்னால் இழுபட்டேன். என்னுடைய அண்ணனின் காலின் வேகத்துக்கு ஈடுகட்டும் விதத்தில் அவனுடைய மூளையும் வேலை செய்யும். கனவிலும் மாமா கண்டுபிடிக்க முடியாத ஓர் இடத்தை அவன் மூளை தெரிவு செய்தது. அந்த இடம் எங்கள் கிராமத்து நூலகம். அவன் உள்ளே நுழைந்தான். நானும் அவன் பின்னால் முதன் முதலாக அந்த நூலகத்துக்குள் காலடி எடுத்து வைத்தேன்.

அப்படியே பிரமித்துப் போனேன். இவ்வளவு புத்தகங்களா! சிறுவர் பகுதியில் வண்ணப் படம் போட்ட அழகழகான புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. நான் உருவி எடுத்த புத்தகத்தின் பெயர் 'டாம் மாமாவின் இருட்டறை' அது ஒரு 40, 50 பக்கங்கள் இருக்கும். ஒரே அமர்வில் படித்து முடித்தேன். அந்த நாவலின் கதை அமெரிக்காவில் நடந்தது. எலைசா என்ற நீக்ரோ பெண் அடிமை தன் எசமானிடம் இருந்து தப்பி ஓடுகிறாள். அவளுடைய துயரத்தையும். அவளுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும், கொடூரங்களையும் சொல்வதுதான் கதை. சில கட்டங்களில் என் மனம் நடுங்கியது. இளவயதில் அப்படியே மனதில் பதிந்துவிட்டது.

அதைப் படித்தபோது அது Uncle Tom's cabin என்ற பிரபல அமெரிக்க நாவலின் மொழிபெயர்ப்பு என்பதோ, அந்த நாவலை எழுதிய பெண்மணியான Harriet Beecher stowe என்பவர் உலகப் புகழ்பெற்றவர் என்பதோ, அமெரிக்கப் போர் மூள்வதற்கும், அடிமை ஒழிப்புக்கும் அது காரணமாக அமைந்தது என்பதோ, உலகத்திலே பைபிளுக்கு அடுத்தபடி அப்போது அதிகமாக வாசிக்கப்பட்ட புத்தகம் என்பதோ எனக்குத் தெரியாது. சிறுவயதில் நடந்த ஓர் அற்புதமான விபத்து என்று இதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்படிச் சொன்னவர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியருமான டொக்டர் தொ.பரமசிவன். இவர் கடந்த ஜூன் மாதம் கனடாவின் Academy of Tamil Arts and Technology பி.ஏ இறுதி ஆண்டு மாணவர்களுடைய ஆய்வேடுகளைப் பரிசீலனை செய்வதற்காக வந்திருந்தார். கனடாவில் இரண்டு வாரம் இருப்பார்.

இவர் தங்கியிருந்த வீட்டின் அழைப்பு மணியை அடித்தேன். கதவைத் திறந்தது இவர்தான். கறுப்பு உருவம். மெலிந்த தோற்றம். வாரிவிட்ட கறுப்பு முடி. இடைக்கிடை வெள்ளை தலைகாட்டும் மீசை. சதுரமான கண்ணாடி. கொலர்கள் மொடமொடவென்று தூக்கி நிற்க, அப்போதுதான் பிரித்த வெள்ளைநிற நீளக்கைச் சட்டையை அணிந்தபடி வணக்கம் என்றார். பளீர் சிரிப்பு. இனிமையான சுபாவம். சிநேகமான உடல் மொழி.

இந்தச் சட்டை அழகாயிருக்கிறது என்றேன். ஒரு பேராசிரியரிடம் பேச வேண்டிய முதல் வசனம் அல்ல. என்றாலும் மனதில் பட்டதைச் சொன்னேன். அவர் வெட்கமாகச் சிரித்தார். நான் எளிமையாக உடுப்பவன். கனடா பயணம் முற்றானதும் கடையிலே போய் இரண்டு சேர்ட் வாங்கினேன். ஒரே தரத்தில் இரண்டு சேர்ட் வாங்கி ஊதாரித்தனம் செய்தது இதுவே முதல் தடவை. அவர் என்னிடம் மன்னிப்பு கேட்பது போல பேசிக்கொண்டே காரின் முன் இருக்கையில் ஏறி உட்கார்ந்தார். பெல்ட்டை பூட்டச் சொன்னேன். தன்னுடைய வலது கை நீளச் சட்டையின் பட்டனை இடது கையால் பூட்டியபடியே காரின் பெல்ட்டை இழுத்துக் கொளுவினார். அமைதியாக இருந்து பேசுவதற்காக பேர்ச் மவுண்ட் சாலையில் இருந்த Country Style உணவகத்தை நோக்கி நான் காரைச் செலுத்தினேன்.

பேராசிரியரிடம் இருந்தது நாலு மணி நேரமே. எனக்கோ கேட்க வேண்டிய கேள்விகள் நிறைய இருந்தன. கிளைக்குக் கிளை, கொப்புக்குக் கொப்பு மரத்துக்கு மரம் தாவும் அணிலைப்போல என் கேள்விகள் இருந்தன. ஆயிரம் ஒட்டுப்போட்ட ஒரு பிச்சைக்காரனுடைய உடையை நினைவூட்டும் வகையில் இந்த உரையாடல் அமைந்தது என்றும் சொல்லலாம்.

பேராசிரியர் குடிப்பதுதேநீர்தான். நான் ஒரு கப்புசினோவுக்கு ஓடர் கொடுத்தேன். தன் மஞ்சள் தலைமுடியை பந்துபோல் உருட்டி அதற்கு மேல் தொப்பி அணிந்திருந்த பரிசாரகி, காதிலே மாட்டியிருந்த ஒலி வாங்கியில் ஏதோ பேசியபடி எங்கள் பானங்களை தயாரித்தாள் வசதியான ஒரு மூலையில் அமர்ந்து அவற்றைச் சுவைத்தபடி பேச்சைத் தொடங்கினோம்.

அவர் பிறந்தது யாதவ சமூகத்தில். தகப்பன் சொந்தமாக லொறி வைத்து ஓட்டி உழைத்தவர். இவருக்கு நாலு வயதாக இருக்கும் போது ஒருநாள் இரவு படுக்கப் போனவர் காலையில் எழும்பவில்லை. தூக்கத்திலேயே இறந்து போனார். மிஞ்சியது நாலு மாடுகளும், ஒரு தொழுவமும். தாயார் பெற்றது பதினொரு பிள்ளைகள், மிஞ்சியது நாலு. இப்படி மிஞ்சியதை வைத்து அவர் சம்பாதித்துப் பிள்ளைகளைப் படிக்க வைத்தார்.

பாளையங்கோட்டையில் எல்லா குடும்பத்தினருக்கும் படிப்பு முக்கியம். சினிமா பாட்டுப் புத்தகம் காலிலே பட்டாலும் அவருடைய அம்மா தொட்டுக் கும்பிடச் சொல்லும். அவ்வளவு பக்தி. எந்த ஏழை வீடு என்றாலும் பிள்ளைகளை எப்படியும் படிக்க வைத்து விடுவார்கள். இவர் படித்தது கிறிஸ்தவ பள்ளிக்கூடம். பள்ளிக்கூடம் என்றால் பெரிதாக நினைக்கக் கூடாது. ஒழுகாத கூரை, குடிப்பதற்கு தண்ணீர். இது முக்கியம். இந்தப் பள்ளியில் படிக்கும்போதுதான் மேற்படி நூலகச் சம்பவம் நடந்தது.

அமெரிக்கா என்றால் அது ஒரு பெரிய முன்னேறிய தேசம். அங்கே கறுப்பர்களை இப்படியா கொடுமைசெய்வார்கள் என்பதில் அவருக்கு அந்தச் சிறுவயதிலேயே ஆச்சரியம். ஆனால் அதைவிட ஆச்சரியம் அவரைச் சுற்றி பல அநீதிகள் அப்போதே நடந்து கொண்டிருந்ததுதான். அவை அவர் கண்களுக்குத் தெரியவில்லை. சூழல் அப்படி.

'என்னோட படித்த ஒரு பிராமணப் பையன், என் வயதுதான் இருக்கும், வீட்டுக்கு விளையாட வருவான். எம் அம்மா அவனை சாமி என்று அழைக்கும். மரியாதையாக நடத்தும் ஒன்றும் புரியாத வயது எனக்கு வித்தியாசமாகப் படவே இல்லை.

எங்கள் வீட்டில் உரக்குழி ஒன்று இருந்தது. மாட்டுச்சாணம், வைக்கோல் என்று வேண்டாத சாமான் எல்லாம் இதற்குள்தான் போட்டு வைப்போம். பந்து விழுந்தால் நாங்கள் இறங்கி எடுக்க முடியாது. தீட்டாகிவிடும் என்று அம்மா சொல்லும். ஜூன் மாதத்தில், கோவணம் மட்டும் கட்டிய பள்ளன் அதற்குள் இறங்கி, பதப்பட்ட உரத்தை அள்ளி எடுத்துக் கொண்டு வயலுக்குப் போவான். அம்மா அவனுக்கு சோறு போடுவதற்குப் புறம்பான மண்சட்டி, சிரட்டை என்று வைத்திருக்கும். அது ஒன்றும் எனக்குத் தவறாகத் தெரியாது.

வகுப்பிலே நான் எப்பவும் முதல்தான். ஆனால் சோதனையில் முதல் இல்லை. நூற்றுக்குநூறு எடுத்ததே கிடையாது. ஒரு கேள்வி வந்தால் அதற்கு எனக்குத் தெரிந்த அத்தனை பதில்களையும் எழுதிக் கொண்டே இருப்பேன். எல்லாம் எழுதி இனிமேல் இல்லை என்ற பிறகுதான் அடுத்த கேள்விக்குப் போவேன். ஒரு பரீட்சையிலாவது எல்லாக் கேள்விகளுக்கும் பதில் எழுதியது கிடையாது. எஸ்.எஸ்.எல்.சி எடுத்தபோது எனக்கு பதினைந்து வயது முடியவில்லை. ஒன்றரை மாதம் குறைச்சலாக இருந்தது. தலைமை ஆசிரியருடைய சிறப்பு அனுமதி பெற்று பரீட்சை எழுதினேன். அங்கேயும் ஒரு பாடத்திலாவது நான் கடைசிக் கேள்வியைத் தொடவில்லை.

நான் படித்தது கிறிஸ்துவ பள்ளிக்கூடமாயிருந்தாலும் எங்கள் கிராமத்தில் சமயப் பிரச்சனை கிடையாது. அம்மா நேர்த்திக்கடன் என்று என்னை அடிக்கடி கோயிலுக்குக் கூட்டிப்போகும் டிசெம்பர் 25ல் இருந்து ஜனவரி முதலாம் தேதி வரைக்கும் எங்கள் கிராமம் விழாக்கோலம் பூணும். அம்மா எங்களை வெளிக்கிடுத்தி பாலன் பிறப்பு பார்க்க மாதா கோவிலுக்கு அழைத்துப்போகும். நான் சோர்ந்துபோய் மந்தமாக இருந்தால் பள்ளிவாசலுக்குக் கூட்டிப்போகும், தண்ணீர் ஓதி என்மீது தெளிப்பதற்கு இப்படி எங்களுக்கு எல்லாமே ஒன்றுதான்.

வாசிப்புப்பழக்கம் அப்போது தொடங்கியது. 'நற்கருணை வீரன்' என்று ஒரு புத்தகம். படம் போட்டிருக்கும். காலணா காசு கொடுத்து வாங்குவோம். அந்த வயதில் அது பெரிய காசு. எங்கள் கிராமத்தில் திராவிட இயக்கப் படிப்பகங்கள் நிறைய இருக்கும் எல்லாப் பத்திரிகைகளையும் ஆர்வமாக வாசிப்போம். அரசியல் கூட்டங்களையும் தவறவிடுவதில்லை.

மாணவனாயிருக்கும் போது அரசியலில் ஈடுபட பெற்றோரோ, ஆசிரியரோ எப்படி அனுமதித்தார்கள்? படிப்பு கவனம் சிதறிவிடும் என்பதில் தமிழ்நாட்டு பெற்றோருக்கு பயம் கிடையாதா?'

அப்படியல்ல. நிலைமை வேறு. அரசியலில் ஈடுபட்டவர்களுக்கு நிறைய வாசிக்கும் பழக்கம் இருந்தது. வாசிப்பு பொதுஅறிவையும் உலக ஞானத்தையும், பிரச்சனைகளை அலசும் கூர்மையையும் கொடுத்தது. ஆகவே அரசியலில் ஈடுபட்டவர்கள் அந்தக் காலத்தில் பரீட்சைகளில் உன்னதமான வெற்றிகளை அடைந்தார்கள்.

உங்கள் ஈடுபாடு எப்படி தீவிரமடைந்தது?

64,65ஆம் ஆண்டுகள் என் வாழ்க்கையின் முக்கியமானவை. அண்ணாவின் பேச்சை முதன்முதலில் திருநெல்வேலியில் கேட்டேன். காசு கொடுத்துக் கேட்ட பேச்சு. அந்தக் காலத்தில் பெருந்தலைவர்கள் பேச்சைக் கேட்க காசு கொடுக்க வேண்டும். இப்பொழுது போல அல்ல. பல நாட்களாக நான் பணம் சேகரித்து அவர் பேச்சைக் காதால் கேட்டேன். வாழ்க்கையில் மறக்க முடியாதது. 65ல் எஸ்.எஸ்.எல்.சி தேர்வு எழுதினேன். அது முக்கியமல்ல. முக்கியம் பக்தவத்ஸலம் காலத்தில் தி.மு.க. நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டம். கறுப்புக் கொடி பிடித்து ஆர்ப்பாட்டம் செய்தோம். தமிழ்நாடு முன்பு எப்பொழுதும் காணாத பெரும் போராட்டமாக அது உருமாறியது. ராணுவம் வெளிவந்து 150 இடங்களில் துப்பாக்கி வெடித்தது. பள்ளிக் கூடங்கள் இரண்டு மாத காலம் பூட்டப்பட்டன. கடைசியில் நேருவின் உறுதிமொழியுடன் போராட்டம் முடிவுக்கு வந்தது.

இந்தப் போராட்டத்தின் முக்கிய விளைவு. முதல் முதலாகச் சனங்களுக்கு பொலீஸ் பயம் உடைந்தது. இதற்குப் பிறகு நாலு பேர் ஒன்றாகப் போனால் பொலீஸ் மற்றப்பக்கம் போய்விடும். இரண்டாவது, தி.மு.க முதல் முதலாக ஒரு மாபெரும் சக்தியாக அறியப்பட்டது. இதைத் தொடர்ந்து வந்த தேர்தலில் தி.மு.க. ஆட்சியை கைப்பற்றி அண்ணா முதலமைச்சரானார்.

எஸ்.எஸ்.எல்.சி எடுத்த பிறகு உங்கள் படிப்பு எப்படித் தொடர்ந்தது?' இந்தக் கேள்விக்கு ஒருவரியில் பதில் வருகிறது. 'மதுரைப் பல்கலைக்கழகம் - பி.ஏ.பொருளாதாரம். இது என் அண்ணாவுக்காகச் செய்தது. காரைக்குடி அழகப்பன் கல்லூரி - எம்.ஏ.தமிழ் - இது என் விருப்பத்திற்காகச் செய்தது. மதுரைப் பல்கலைக்கழகம் - முனைவர் பட்டம். மூன்று வருட லீவும், பணமும் கொடுத்தார்கள். அதற்காகச் செய்தது. அவர் வெள்ளையாகச் சிரித்தார்.

எங்கள் பக்கத்து மேசையில் ஒரு பெண் விளக்குச் சுடர் நீலத்தில் உடை, அதே கலரில் கண்கள். அவள் முன்னால் நாலு குடித்து முடித்த கடுதாசி குவளைகள் நேர்க்கோட்டில் நின்றன. கணுக்கால்களைக் கோர்த்துக் கொண்டு, அன்று முழுவதும் இருக்கத் தயாராக வந்தவள் போலச் சாவதானமாக யாருக்காகவோ காத்திருந்தாள். அடிக்கடி கைபேசியில் பேசினாள். வேறு ஒரு நாட்டில் புழங்கும் அந்த மொழி சங்கீதம் போல ஒலித்தது.

பேராசிரியருக்கு அடிக்கடி சிகரெட் பிடிக்க வேண்டும். ஒரு நாளைக்கு இருபது சிகரெட். இந்தியாவில் பிடித்தது வேறு. ஆனால் கனடாவுக்கு வந்து du maurierக்கு மாறிவிட்டார். சிகரெட் பிடிப்பவர்களுக்கு கனடா சிநேகமான நாடு அல்ல. ஆகவே அடிக்கடி வெளியே போகவேண்டி வந்தது. இரண்டு நாளைக்கு முன்பு கனடாவின் smog நிலை உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது.

அவருடன் நானும் வெளியே வந்து தரையிலே பொருத்தியிருந்த மேசையைச் சுற்றி அடுக்கியிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்தோம். எங்களைப் பார்த்தவுடன் சாண்டில்யனுடைய கடல் புறாக்கள் சில எங்களுக்கு அருகாமையில் வந்து அமர்ந்தன. அதிலே ஒன்று பேராசிரியருடைய குரலையும் தாண்டி தன் உயர்ந்த சத்தத்தால் எதையோ திருப்பித் திருப்பிச் சொன்னது. சங்கீதக்காரியே மேல் என்று எனக்கு பட்டது. தன்னை அறியாமலே பேராசிரியரும் குரலை உயர்த்தினார். வலது கை நீளச்சட்டை பட்டனை இடது கையால் பிடித்திருந்தார். ஓட்டை சிறிதாகவும் பட்டன் பெரிதாகவும் இருந்தது. அவர் விடாமல் அதை இறுக்கிப் போட்டார். விலை உயர்ந்த du maurier புகையை வெளியே விட்டபடி தன் மீதிப் பேச்சைத் தொடர்ந்தார்.

கனடா போன்ற நாடுகளில் தமிழ் வளர்ச்சிக்கு உதவி செய்யும் நிறுவனங்கள் உள்ளன. திடீரென்று உங்களிடம் ஒரு லட்சம் ரூபாயை தந்து தமிழ் இலக்கியத்தை முன்னெடுக்கும் முக்கியமான பணி ஒன்றை செய்யச் சொன்னால் அந்தப் பணி என்னவாயிருக்கும்?

அச்சு ஊடகங்கள் தமிழ் மொழியை நவீனப்படுத்திய காலப் பகுதியில் (1840-1940) நடந்த அறிவு முயற்சிகளை அளவீடு (survey)

செய்ய முயற்சிப்பேன். தமிழ்ச் சமூகத்தினுடைய அடித்தளம் தாக்குதலுக்கு ஆளான காலகட்டம் இதுதான். பெண் கல்வியும், விதவை மறுமணமும், குழந்தை மண ஒழிப்பும் மூளையில் உறைத்த காலம். அதைவிட, காலம் காலமாக பேச்சுரிமை இல்லாத பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உணர்வுகளை எழுத்திலே சொல்ல உரிமை கிடைத்த காலம். இன்னும் அரசியல் அதிகாரம் கோமாமிசம் சாப்பிடுபவன் கையிலே இருந்தது. அதை மேல்சாதி மக்கள் ஏற்றுக் கொண்ட காலம். ஆகவேதான் இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட அறிவு முயற்சிகளை அளவீடு செய்ய வேண்டியது முக்கிய கடமை என்று கருதுகிறேன்.

வேகமாக மாறிவரும் உலகில் தமிழ் அழிந்துவிடும் என்று ஒரு கருத்து இருக்கிறது. இந்த இணைய யுகத்தில் தமிழின் எதிர்காலம் எப்படி?

உலகில் பல்வேறு கண்டங்களில் சிதறிக் கிடக்கும் பத்து கோடி மக்களால் பேசப்படும் மொழியின் அழிவு அவ்வளவு எளிதான நிகழ்வு அல்ல. இன்றைக்கும் தமிழ் மொழியின் முன்னாலே நிற்கிற பெரிய முரண்பாடு என்னவென்றால் ‘கணிப்பொறிக்குள் நுழைந்துவிட்ட தமிழ், கோயில் கருவறைக்குள் நுழைய முடியவில்லையே’ என்று குன்றக்குடி அடிகளார் வருத்தப்படுவது போலத்தான். கணிப்பொறியோடு கலந்துவிட்ட ஒரு மொழி அவ்வளவு விரைவில் அழிந்துவிடும் என்றா கருதுகிறீர்கள்?

அப்படி இல்லை. ஆனால் நீங்கள் கண்ணால் பார்த்த சாட்சி. ஜூன் 21ம் தேதி கனடாவில் மறக்க முடியாத தினம் ஹரிபொட்டரின் ஐந்தாவது நாவல் வெளியான நாள். 32 மில்லியன் சனத்தொகை கொண்ட இந்த நாட்டில் ஓர் இரவில் மட்டும் 70,000 புத்தகங்கள் அஞ்சலில் விநியோகிக்கப்பட்டன. இது தவிர, புத்தகக் கடைகளிலும் நடுநிசியிலிருந்து அமோகமான விற்பனை. ஆனால் நீங்கள் சொல்லும் பத்துக்கோடி தமிழ் பேசும் உலகத்தில் 1000 பிரதிகள் விற்பதே பிரச்சினையாக இருக்கிறது. நவீன தமிழ் இலக்கியப் படைப்பு ஏதாவது உலகத் தரத்தை எட்டியிருக்கிறதா? இன்னும் 50 ஆண்டுகளுக்குத் தாக்குப் பிடிக்கும் படைப்புகள் ஒன்றிரண்டு பற்றிக் கூறமுடியுமா?

‘இலக்கியப் படைப்பில் உலகத்தரம் என்பது பற்றி எனக்கு ஏதும் தெரியாது. சிலப்பதிகாரமும், கம்பராமாயணமும், திருக்குறளும் உலகத் தரமுடையன என்பதுதான் எனக்குத் தெரியும். ஐம்பது ஆண்டுக்காலம் என்பது நீங்கள் நினைக்கிற புனைகதை உலகத்தில் மிக நீண்டது. கவிதை உலகத்தில் மிகக் குறுகியது. பாரதியின் கண்ணன் பாட்டு, பாரதிதாசனின் சில கவிதைகள், ஈழத்துக் கவிதைகளில் சில கட்டாயம் நிற்கும். இயற்கையோடு உறவாடும் எழுத்துக்கள் எப்பொழுதும் நிற்கும்.

மரபுக்கவிதை புதுக்கவிதைக்கு வழிவிட்டது. மறுபடியும் மரபுக்கவிதை தலைதூக்கும் காலம் வருமா? இக்காலக் கவிகளுக்கு மரபுக் கவிதை பரிச்சயம் அவசியமா?

‘கவிதை என்பது மனித உடலோடும், மனத்தோடும் பிசையப்பட்டது. மரபு, புதுமை என்பதெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான எழுத்துலக ஏற்பாடுகள், அவ்வளவுதான். நெஞ்சில் கனல் மணக்கும் பூக்களாக விரிகின்ற ஒப்பாரிப் பாடல்களின் கவித்துவத்தின் முன்னர் பெரியாழ்வாரும், கம்பனும் கூடத் தோற்றுப் போவார்கள். நினைவறியாக் காலம் தொட்டு வருகிற கவிதை என்னும் பேராற்றில் காலப் பங்கீடு செய்ய முடியாது. உலகின் கடைசி மனிதன் இருக்கும் வரை கவிதை இருக்கும். மரபுக்கவிதையினை ஒழுங்காகப் படிக்காத காரணத்தினால்தான் தமிழ்ப் புதுக்கவிஞர்கள் சொல்வறுமை கொடுமையானதாகக் காட்சியளிக்கிறது.

உங்கள் மாணவர்கள் யாராவது தமிழில் ஒப்பாரி, தாலாட்டுப் பற்றி ஆய்வு செய்திருக்கிறார்களா?

ஒப்பாரியும் தாலாட்டும் பெண்கள் படைத்தளித்த இலக்கியப் பேருலகமாகும். இன்னமும் ஒப்புக்கூட்டி (ஆசுகவி) பாடும் எழுத்தறிவில்லாப் பெண்கள் தமிழ்நாட்டில் நிறையவே இருக்கிறார்கள். தமிழ் மொழியில் பிறந்த தாலாட்டுகள் திராவிட மண உறவு முறையினை (உடன் பிறந்த ஆணும், பெண்ணும் தங்கள் பிள்ளைகளின் வழி அடுத்த தலைமுறையில் மண உறவு கொள்வதனை (cross cousin marriage) விளக்கிக்காட்டும் இலக்கிய வடிவமாகும். தாலாட்டின் சொற்கள் அனைத்தும் அள்ளி மடியில் கட்டிக் கொள்ளும் அழகான கூழாங்கற்களாகும். அவை கால ஓட்டத்தினை காட்டக் கூடியன. என்னுடைய மாணவர்கள் தாலாட்டு, ஒப்பாரி குறித்து ஆராயவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் இவை குறித்து நூற்றுக்கணக்கான ஆய்வுகள் வட்டாரவாரியாக நடந்தேறியுள்ளன.

சிலப்பதிகாரத்தை நீங்கள் வேறு கோணத்தில் பார்க்கிறீர்கள். அரச பயங்கரவாதத்தை முதல் முதலாக எதிர்த்த காவியம் என்று

குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது புதுமையான பார்வை. கொஞ்சம் விளக்க முடியுமா?

'சிலப்பதிகாரம் போன்ற செவ்விலக்கியங்கள் கால வெள்ளத்தை எதிர்த்து நின்று பல்வேறு வகையான வாசிப்புகளுக்கு இடம் தருவன. எனவேதான் அவை உயிர் வாழ்கின்றன. பாரதியின் சிலப்பதிகார வாசிப்பு வேறு; ம.பொ.சியின் சிலப்பதிகார வாசிப்பு வேறு. என்னுடைய மாணவர் 'சூழலியல் நோக்கில் சிலப்பதிகாரத்தை' வாசித்துக் கட்டுரை எழுதியுள்ளார். இன்று தஞ்சை மாவட்டத்தில் வறண்டு கிடக்கும் காவிரியை நினைத்துக் கொண்டு சிலப்பதிகாரத்தின் கானல் வரியைப் படித்தால் எந்தத் தமிழனுக்கும் நெஞ்சடைத்துப் போகும். அதற்கான காரணம் சிலப்பதிகாரம் ஒரு செவ்விலக்கியம் என்பதுதான்.

என்னுடைய வாசிப்பும் வித்தியாசமானது. நிகழ்காலத் தமிழ்நாட்டு தமிழன் இப்படித்தான் சிலப்பதிகாரத்தை வாசிக்க முடியும். வெளியூர்க்காரனான கோவலன் மேல் குற்றம் சுமத்தப்படுகிறது. அவன் கையில் குற்றப் பத்திரிகை தரவில்லை. நீதிமன்றம் அழைக்கப்படவும் இல்லை. குற்றச்சாட்டிற்கு என்ன பதில் என்று அறியும் முயற்சியும் இல்லை. விசாரணை இல்லாமலே அரசன் 'கொன்று அச்சிலம்பு கொணர்க' எனத் தீர்ப்புச் சொல்லிவிடுகிறான்.

'கிறிஸ்தவ மதத்தில் இறுதித் தீர்ப்பு நாளில்கூட மனித உயிருக்கு தன் கட்சியைச் சொல்ல ஒரு வாய்ப்புத் தரப்படுகிறது. இஸ்லாமிய மதத்தில் கியாமத் நாள் என்று சொல்வார்கள். ஆனால் இங்கே அரசவையில் கோவலனுடைய கட்சியைக் கேட்க மன்னன் தவறிவிடுகிறான்.

'இளங்கோவடிகள் தன் காவியத்தில் 'கொலைக்களக் காதை' என்று தலைப்பு கொடுத்திருந்தாலும் கோவலன் கொலைக்களத்துக்கு இட்டுச் செல்லப்படவில்லை. அங்கு அழைத்துச் சென்றிருந்தாலாவது அவனுக்குத் தன் கட்சியைச் சொல்ல ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கும். அவன் வீதியிலே கொல்லப்பட்டான். குறுக்காக வெட்டப்பட்ட அவன் சடலத்தை கண்ணகி வீதியிலேதான் கண்டெடுத்தாள். எல்லா மனித உரிமைகளும் மீறப்பட்டன. இதைவிடத் துல்லியமாக அரச பயங்கரவாதத்தை வேறு எந்தக் காவியமும் கூறவில்லை.

மதங்கள் பற்றி நீங்கள் பேசினாலும் அடிப்படையில் நாஸ்திகர். தமிழ்நாட்டில் அம்மன் விழாக்கள் பற்றி ஆராய்ச்சி செய்திருக்கிறீர்கள். பக்தி இலக்கியங்களை, குறிப்பாக நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை ஊன்றிப் படித்திருக்கிறீர்கள். காரணம் என்ன? பக்தியா அல்லது இலக்கிய ஆர்வமா?

'பக்தி என்பது தனி மனித மீட்சிக்குரியது என்பது எழுத்து மரபு சார்ந்த மேலோர் பார்வையாகும். 'நான் யார் என் உள்ளமார்' என்று கேட்ட மணிவாசகர் கூட மக்களை மறந்தவரல்லர். பக்தி இலக்கியப் பக்தியும் பயம் கலந்த பக்தியல்ல. பக்தி இலக்கியங்கள் அனைத்தும் மறு புறமாக சமூக ஆவணங்களாகும். தமிழ்நாட்டு அம்மன் தெய்வம் எளிய மக்களின் உலகியல் சார்ந்த ஆன்மீக வெளிப்பாடு. சக மனித வாழ்வின் இன்பதுன்பங்களை மறந்து கண்ணை மூடிக்கொள்ளும் போக்கு அங்கு கிடையாது. எனவேதான் பக்தி இலக்கிய வாசிப்பும், அம்மன் கோவில் விழாக்களும் எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றன.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. நண்பர்களுக்கு சில பரிசுகள் வாங்க கடைக்குப் போகவேண்டும் என்றார் பேராசிரியர். கார் ரேடியோ, சார்ஸ் வியாதியால் மரணமடைந்த ஒரு மருத்துவமனை தாதியின் மரணச் சடங்கு விபரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தது. நான் ரேடியோவை பட்டென்று அணைத்தேன். கோடுபோட்டு அடைத்த இரண்டு தரிப்பிடங்களுக்கு சொந்தமான இடத்தில் அவசரமாக காரை குறுக்காக நிறுத்திவிட்டு அவரை கடைக்குள்ளே அழைத்துச் சென்றேன்.

அவர் பல பேனாக்களை ஆராய்ந்தார். சிலதை எழுதிப்பார்த்து; சிலதை பெட்டியோடு திறக்காமல் தேர்வு செய்தார். எத்தனை விதமான பேனாக்கள். திருகித் திறக்கும் பேனா, மைக்கட்டி அடைத்த பேனா, உருளும் பேனா இப்படி பல வகை. அச்சு அசல் சேக்ஸ்பியர் போல தோற்றம் கொண்ட காசாளரிடம் பேராசிரியர் கனடிய டொலர்தாள்களை ஒவ்வொன்றாக இரண்டுமுறை எண்ணிக் கொடுத்தார். அவர் 'நன்றி, மீண்டும் வருக' என்றார் பாளையங்கோட்டையில் இருந்து திரும்பி வருவதற்கு மூன்று நாட்கள் எடுக்கும் என்பது காசாளருக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

இவ்வளவுக்கும் நாங்கள் ஒருகணமும் நிறுத்தாமல் எங்கள் உரையாடலை தொடர்ந்தோம்.

இப்பொழுது தமிழ்நாட்டில் உள்ள கல்வி முறையில் எல்லாச் சாதியினருக்கும் படித்து முன்னேறும் வசதியிருக்கிறது. ஏற்கனவே பொருளாதார வித்தியாசங்கள் ஓரளவுக்கு சமனடைந்திருக்கின்றன. இந்நிலையில் இன்னும் இருபது வருட காலத்தில் தமிழ்நாட்டில் சாதியே அழிந்துவிடும் என்று சொல்ல முடியுமா?

இன்னும் ஒரு நூற்றாண்டுக்காலம் தமிழ்நாட்டில் சாதி அழிவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. காலம், வெளி, மொழி, உணவு, உணவாக்கும்முறை, அணிகலன், ஆன்மீகம், ஒப்பனை என்று சமூக அசைவின் எல்லாத் திசைகளிலும் சாதி தொழிற்பட்டிருக்கின்றது. அவை அனைத்தும் மறைந்து ஒரு பொதுத்தன்மையினை எட்டுவதற்கு இன்னும் ஒரு நூற்றாண்டுக்காலம் போதாது என்பதே என்னைப் போன்றோரின் கணிப்பாகும். சாதி ஒழிப்புப் பற்றிய நம்முடைய பார்வைகள் எல்லாம் அடிப்படையில்லாத ஆர்வக்கோளாறுகளே.

உலகமயமாக்கலின் தாக்கத்திலிருந்து நாடுகள் தப்ப முடியாது. இந்த நிலையில் தமிழ்க்கலாச்சாரம், பண்பு, அடையாளங்கள் எல்லாம் அடிபட்டுப் போகும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இதை தமிழ் மக்கள் எப்படி எதிர்கொள்ளலாம்?.

உலகமயமாக்கல் என்பது தமிழ்க்கலாச்சாரத்துக்கு மட்டுமல்ல, மூன்றாம் உலக நாடுகளின் பல்வகைப்பட்ட கலாச்சார வேர்களை அழித்து ஒழிக்கும் முயற்சியாகும். கலாச்சாரம் என்பது ஏதேனும் ஒரு வகையில் உற்பத்தி சார்ந்தது. உலகமயமாக்கம் மூன்றாம் உலக மனிதனை உற்பத்தி இழந்த உயிராக மாற்றுகின்றது. புல்லும், புழுவும், மரமும்கூட உற்பத்திச் சார்ந்தவை. எனவே அவை கலாச்சாரமுடையவை. இலையும் கொம்பும், அடிமரமும் அழிந்தால்கூட மண்ணுக்குக் கீழே இருக்கும் வேர்களைக் காப்பாற்றிக் கொண்டால் எந்தத் தாவரமும் தன்னை மறுஉயிர்ப்பு செய்து கொள்ளலாம். இந்த உண்மையை உணர்ந்துகொண்டால் தமிழ்க் கலாச்சாரம் பிழைக்க வழியுண்டு. கவனிக்கப்படவேண்டிய மற்றுமொரு செய்தி தாவரங்களிடையே துரோகம் கிடையாது. போராடிக் கொண்டிருக்கும் எந்த உயிரினமும் தன்னை அழிவிலிருந்து மீட்டுக் கொள்ளும்.

இரவு எட்டு மணி. சூரியனின் சாய்ந்த கிரணங்கள் இன்னும் பலம் குறையாமல் அடித்தன. கனடாவில் இது கோடைக்காலம் என்றபடியால் முழு இருள் சூழ்வதற்கு இன்னும் சரியாக ஒரு

மணிநேரம் இருந்தது. அவரைக் கூட்டிப்போக நண்பர் வரன் வந்திருந்தார். அவர்களை ஒரு கடைவாசலில் இறக்கிவிட்டேன். விடைபெறும்போது விருந்தினர்களிடம் வழக்கமாகக் கேட்கும் ஒரு கேள்வியைக் கேட்டேன். மாணவப் பருவத்தில் பேராசிரியர் பரீட்சைகளில் கடைசிக் கேள்விக்கு பதில் அளித்ததே கிடையாது என்றாலும் என்னுடைய கேள்விக்கு அவரிடம் பதில் இருந்தது.

நீங்கள் இரண்டு வாரம் தங்கியிருக்கிறீர்கள். கனடா தமிழருக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

இந்தக் கேள்விக்கு அவர் யோசிக்கவில்லை. இது ஏற்கெனவே சிந்தித்து முடிந்த காரியம் என்பது போல பேசினார். கனடாவில் தமிழ் வாசிக்கும் பழக்கமுள்ள தமிழர்கள் ஒன்றரை லட்சம் பேராவது இருக்கிறீர்கள். ஒருவருக்கு ஒரு தமிழ்ப் புத்தகம் என்று பார்த்தாலும்கூட உங்கள் நூலகத்தில் 1,50,000 புத்தகங்கள் இருக்கவேண்டும். இல்லையே! பணவசதி இருக்கிறது. ஆர்வம் அதைவிட மேலாக இருக்கிறது. நீங்கள் எப்படியும் அடுத்த பட்டமளிப்பு விழாவுக்கு முன்பாக 1,50,000 புத்தகங்களைச் சேகரித்துவிடவேண்டும்.

தமிழ்நாட்டின் ஒரு கிராமத்து நூலகத்தில் தூண்களின் மறைவில் இருந்துகொண்டு தன் பதினோராவது வயதில் "டாம் மாமாவின் இருட்டறை" என்ற புத்தகத்தை ஒரே மூச்சில் வாசித்து தன் இலக்கியப் பயணத்தை தொடங்கிய பேராசிரியர் என்னிடம் விடைபெறும்போது இப்படி மதியுரை வழங்கினார்.

அவரைத் திரும்பிப் பார்த்தேன். அங்கே நின்ற ஒரு மேப்பிள் மரத்தைக் கடந்து அவர் கடை வாசலை அணுகிவிட்டார். சடாரென்று பிளந்து திறக்கும் கதவு வழியாக கடையில் இருந்து மஞ்சள் கண்ணாடி அணிந்த பெண்ணொருத்தி வெளிப்பட்டாள். பேராசிரியர் உள்ளே நுழைந்தார். அவருடைய வலது கை நீளச் சட்டை பட்டனை இடது கை நெருக்கிப் போட்டபடி இருந்தது.

✧

'அங்க இப்ப என்ன நேரம்'

காலச்சுவடு

'கலப்பை' பிற வெளியீடுகள்

செவக்காட்டுச் சித்திரங்கள் (சிறுகதைகள்) - ரூ. 130
வே.ராமசாமி

குறடு (சிறுகதைகள்) ரூ. 130
அழகியபெரியவன்

கரிசல்நாட்டுக் கருவூலங்கள் (சிறுகதைகள்) ரூ. 100
எஸ்.இலட்சுமணப்பெருமாள்

கெட்டவார்த்தை பேசுவோம் (கட்டுரைகள்) ரூ. 100
பெருமாள்முருகன்



பொதுவாக இந்த நூலில் இடம் பெற்றுள்ளவை கதம்பம் போன்று இருந்தாலும் அவ்வெழுத்துக்களை இணைப்பதற்குத் தொல்லியல், வைதீக எதிர்ப்பு, சங்கராச்சாரியர் பற்றிய கட்டுரை, நமது பண்பாட்டில் மருத்துவம், திராவிட இயக்கச் சார்பு, நாட்டார் வழக்காற்றியல் ஆகிய புரிகளைக் கொண்ட நூல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

உ.வே.சா. அவர்களின் சங்க இலக்கிய மீள் கண்டுபிடிப்பே வைதீகத்துக்கு மாற்றான ஒரு பெரும் பண்பாடு தென்னிந்தியாவில் பிறந்து வளர்ந்த வரலாற்றுண்மையினைத் தமிழ் நாட்டுக்கு எடுத்துக் காட்டியது. அதுவே தமிழ்த் தேசிய இன அடையாளத்தைக் கண்டது. திராவிட இயக்கத்தார்க்கும் முற்போக்கு இயக்கத்தார்க்கும் அடுத்த கட்ட வளர்ச்சிக்கான திசையினையும் காட்டியது என்று இந்நூலில் தொ.ப. மதிப்பிடுவது கவனத்துக்குரியது.

அணிந்துரையில் பேரா.நா.இராமச்சந்திரன்
நாட்டார் வழக்காற்றியல் துறைத் தலைவர்.
தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை.

கலப்பை

ISBN 978-81-922436-1-0

ரூ.130